
தமிழரசு
1-9-78
50 காசு



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.



கலைவாணர் உடுமலை நாராயணகவி பேரறிஞர் அண்ணு




தமிழரசு

மலர் : 9 இதழ்: 5

1-9-1978


## இந்த இதழில்....

வணக்கம்.

'கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று பேரறிஞர் அண்ணு ஒரு முறை குறிப்பிட்டார்கள். தனக் கென்று ஒரு சகாப்தத்தையே உரு வாக்கிக் காட்டிய கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் நினைவு நாள் ஆகஸ்ட் திங்கள் 30-ம் நாள். கலைவாணரின் திருஉருவப் படத்தை இவ்விதழ் மேலட்டையில் வெளியிட்டு மறைந்தும் மறையாத அம்மேதைக்கு 'தமிழரசு' தன் னுடைய அஞ்சலியைச் செலுத்து கிறது. கலைவாணர் பற்றிய அரிய செய்திகளும், சுவையான தகவல் களும், படங்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

கோட்டை கொத்தளத்தில், நாட் டுக் கொடியை ஏற்றிவைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய பேருரையும், சுதந்திர நாளன்று வானெலியிலும், தொலைக்காட்சியிலும் ஆற்றிய சிறப்புரையும் இவ்விதழிற்கு பெருமையூட்டுகின்றன!

மகாகவி பாரதியாரின் புகழ் பாடும் கவிதை ஒன்றினை திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் 'தமிழரசு'க்கு வடித்துத் தந்துள் ளார்கள். வழக்கமான அம்சங் களும் இடம் பெற்றுள்ளன.

அடுத்த இதழ், தந்தை பெரியார் நூற்றாண்டு விழாச் சிறப்பு மலராக வெளிவருகிறது. பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய கருத்துப் பெட்டகமாக இம்மலர் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதனை மட் டும் இப்பொழுது சொல்லிக் கொள் கிறோம்.





# காலத்தை வென்ற கலைவாணர்

## பேரறிஞர் அண்ணா

இந்த நாளில் கலைவாணருடைய வாழ்க்கை பற்றியும், அவரால் வாழ்வு பெற்றவர்கள் பற்றியும், அவராலே கலைத் துறைக்குக் கிடைத்த பெருமை பற்றியும் பேசுகிறோம்.

கலைவாணர் தமக்குப் புகழ் தேடிக் கொண்டது மட்டுமின்றி மற்றவர்களுக்கும் வழி வகுத்துக் கொடுத்தார்.

கலைவாணர் நகைச்சுவையின் மூலம் கருத்துக்களை மக்களுக்கு இனிய முறையில், எளிய முறையில் உணர்த்தினர். மேலும், பலர் அந்தத் துறையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றாலும் அதைப் பார்க்கிற போது கலைவாணருடைய நினைவுதான் நமக்கு வருகிறது. அவருடைய மற்றச் செல்வங்கள் என்ன ஆயின என்பது நமக்குத் தெரியும்.

தமிழர்கள் வாழ்விலும், தாழ்விலும், வெற்றியிலும் தோல்வியிலும் கலையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். பண்பு முழுவதும் கலை மூலம் உணர்த்தியவர்கள் தமிழர்கள்.

பிற மாநிலத்தில் உள்ளவர்கள் நம்முடைய கலைத் துறையை மிகவும் பாராட்டுகிறார்கள்.

நான் தூரக் கிழக்கு நாடுகளுக்குச் சென்ற போது கம்போடியாவில் ஒரு நடனக் காட்சியைப் பார்த்தேன். அதைப் பார்க்க வந்திருந்த அமெரிக்க நாட்டுச் செல்வக் குடும்பத்தில் பிறந்த பெண்கள் மேடையில் ஆடியவர்களைப் பார்த்து, அவர்களைப் போலவே கைவிரல்களை அசைத்தார்கள்.

நான் அவர்களிடம், ''எங்கள் தமிழ் நாட்டுக்கு வந்து பாருங்கள். அங்கே கண்களாலும், கைகளாலும் கலையை உணர்த்தக் கூடியவர்கள் இருக்கிறார்கள்'' என்று கூறினேன்.

'நெல்மணிகள் முற்றியதும் கதிர் சாய்ந்து எங்களை எடுத்துச் செல்லுங்கள்' என்று கூறுவது போலக் கலைவாணர், வாரி வாரி வழங்கினர், பணத்தை மட்டுமல்ல; நல்ல கருத்துக்களையும் வழங்கினர்.

பிறருடைய கலை வளர்ந்திருப்பதைப் பார்த்தும் பாராட்டுகிற பண்பு அவருக்கு உண்டு.

பொதுப் பணியிலும் கலைவாணர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு 'தம்மால் முடிந்ததைச் செய்திருக்கிறார்.

எனக்குத் தெரிந்த வரையில் முதன் முதலில் ரஷ்ய நாட்டுக்குப் போய் வந்த கலைஞர் என். எஸ். கே. தான்.

அவருடைய 'கிந்தனார் காலட்சேபம்' எல்லோருக்கும் பிடித்தமானது.

கலை காலத்தை வெல்வது.

அவருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத் தக்க அளவுக்கு இருக்கிறது.

கலைக் கல்லூரி அமைத்து, அவர் ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர்.

அவருடைய இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.







கலைத் துறையில் தமிழகம் எப்போதும் முன்னணியில் இருந்திருக்கிறது. இசைத் துறையிலும், நாடகத் துறையிலும், இலக்கியத் துறையிலும்—எந்தத் துறையானாலும் தமிழகம் முன்னணியில் இருந்திருக்கிறது. கலைவாணர் போன்றவர்களால் மேலும் வளர்ந்திருக்கிறது.

இவ்வளவு வறுமைக்கு இடையிலும் இந்தக் கலைத் துறை வளர்ந்திருக்கும் போது, உள்ளபடியே செழிப்பாக இருந்திருக்குமானால் எப்படி (இக்கலைத் துறை) வளர்ந்திருக்குமோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

ஆனால், இங்கே கலைத் துறையில் இருப்பவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வறுமையில் தள்ளப்பட்டு வருகிறார்கள். மீதி உள்ள பத்துப் பேரில் ஒருவர் இருவர் தான் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் கலைவாணர். அதனால்தான் இறந்த பிறகும் அவர் புகழப்படுகிறார்.

# சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட சபதம் ஏற்போம்!



## கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து

# முதல்வர் முழக்கம்

ஒரு மனிதன் வாழ்க்கையில் உயர்வது என்பதும், புகழ் பெறுவது என்பதும், மற்றவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவது என்பதும் எளிதல்ல. அதை விடக் கடினம் அவைகளைக் காப்பாற்றிக் கொள்வது. அதுபோல், இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு உழைத்த இந்தியத் தந்தை மகாத்மா காந்தி அவர்களை நினைத்துக் கொள்கிற இந்த நேரத்தில், அவர்களோடு அவர்கள் கருத்தை ஏற்று வெவ்வேறு கொள்கைக்கு சொந்தக்காரர்களாக இருந்தாலும், நாட்டின் விடுதலைக்காக உழைத்த அத்தகைய தியாகம் செய்த அந்த நல்லவர்களுக்கு நாம் இப்போது மட்டுமல்ல எப்போதும் எந்தக்

தலைமுறையிலும் நன்றி காட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

நன்றி என்பது, வார்த்தை அளவில் அழகுறச் சொல்லிவிட்டால் அது பயனுள்ளதாகாது. பெரியவர்களை நினைக்குந்தோறும் அவர்கள் இந்த நாட்டிற்கு ஆக செய்த தொண்டினை, தியாகத்தை நினைக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் பாராட்டுவது நம்முடைய கடமையாகும் என்று நினைத்தாலும் கூட அதே நேரத்தில் அவர்களுடைய நல்ல கொள்கையை நாம் பயன்படுத்துவோமானல்தான் நம்முடைய நன்றியைச் செவ்வனே செலுத்துகிறோம் என்பதை நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டிய கடமைப்பட்டுள்ளவர்களாக இருக்கிறோம். அந்தச் சுதந்தர தாகத்தைத் தீர்த்தவர்கள் யார் யார் எங்கெங்கே இருக்கிறார்கள், எவ்வளவு துன்பங்களுக்கு அவர்கள் ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய குடும்பங்கள் எங்கே இருக்கின்றன என்று பட்டியல் போட்டுக் கணக்கிட்டு அதற்கு முனைந்தால் கூட செய்ய முடியாத வகையில் எங்கோ ஒரு மூலையில் அவர்கள் துன்பத்தில் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்காக என்னைப் போன்றவர்களுக்கு —இந்தப் பதவியைப் பெறுகிறபோது, அவர்களை நினைத்துப் பார்க்கத் தவறினால் நாங்கள் எங்கள் கடமையிலிருந்து வழுவுகிறோம் என்று பொருளாகி விடும்.

இந்த நல்ல நேரத்தில் இயற்கை நம்மை உள்ளம் குளிரும் வகையிலும், அதே நேரத்தில் துன்பத்தை ஏற்படுத்தாமல் நாம் இங்கே எப்படி எந்த முறையில் நிற்பது என்கிற நிலைமையை உருவாக்கித் தருகிற நேரத்தில், இதைப் போன்ற இந்த நாடு பல வகையிலும், அகத்திலும் புறத்திலும் சுதந்தரத்தோடு, தனி மனித உணர்வோடு, பெற்ற உரிமையோடு வாழக் கூடிய நிலைமையை நாம் பெற்றுவிட்டோமா என்று நாம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டில் சமூகம் என்று ஒன்று இருக்குமானல், அந்தச் சமுதாயத்தில் இருக்கிற மக்கள் அனைவரும், வகுப்புவாத வெறிக்கோ, அந்த நம்பிக்கைக்கோ ஆளாகி அதைச் செயல்படுத்த முனைகிற நேரம், ஒரு நிமிடமாவது இந்த நாட்டில் இருந்தால், அதுசுதந்தரத்திற்குப் பாதகமாகும் என்ற கருத்தைப் பல்வேறு நேரத்தில்அவர்களுக்கே உரிய வார்த்தையில் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் இங்கே இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு பகுதிகளில் நடக்கிற நிகழ்ச்சிகளிலும், அந்த நிகழ்ச்சிகளையும், தியாகம் செய்தவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதற்காக மகாத்மா காந்தியிலிருந்து, நேருஜியிலிருந்து, பெரியாரிலிருந்து, நேதாஜியிலிருந்து, இது போன்று அத்தனை மக்களும், இளைஞர்களும் மற்றவர்களும், மாணவர்களும் அண்ணாவும் இந்திய சுதந்தரத்தை எப்படிப் போராடிப் பெற்றுத் தந்தார்கள், தியாகத்திற்குத் தங்களைச் சொந்தக்காரர்களாக்கி உழைத்தார்களோ, எத்தனை இன்னல்களுக்கு ஆளானார்களோ, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் 32வது ஆண்டு என்று சொல்கிற இந்த நேரத்திலும் கூட இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்று சொன்னல், அந்தக் கொள்கைகள் முழுமை பெற்று விட்டதா என்றால் இல்லையென்று சொல்கிற பதிலைத்தான் பெறுகிற வகையில் ஆங்காங்கு வகுப்புப் பூசலும் மத வெறியும், ஜாதி முரண்பாடும் தலைதூக்கிக் கொண்டு இருக்கின்றன என்பதும், அவ்வப்போது அவைகளைச் சமாளித்து அடக்குவதும், அந்த எண்ணங்களை மாற்றிட முயற்சிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், உரிமையோடு மற்றவர்களோடு ஒத்து வாழ வேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்துகிற ஒரு உரிமைக்குச் சொந்தக்காரர்களாக இல்லை என்று எண்ணி நாம் ஏமாற வேண்டாம் என்றாலும், இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்காங்கு நடைபெறுகிற நிகழ்ச்சிகள் சில நம் முன் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

புறத்தால் கட்டுப்படுவது என்பது சட்டம். அகத்திலே கட்டுப்படுவது என்பது மனச்சாட்சி. இவைகள் இரண்டையும் ஒன்றாக்குவதுதான் அண்ணா அவர்களின் கொள்கையாகும். ஒரு மனிதன் எவ்வளவுதான் ஆற்றலும், அறிவும் பெற்றவனாக இருந்தாலும், எவ்வளவுதான் திறமை பெற்றவனாக இருந்தாலும், ஒரு தனி மனிதன் மட்டும் எதையும் இந்த உலகத்தில் சாதிக்க முடியாது என்பதும், மற்றவர்கள் ஒத்துழைத்தால்தான் மற்றவர்கள் உள்ளம் தியாகத்திற்கு சொந்தமாக இருந்தால்தான், விஞ்ஞான நுணுக்கங்கள் மூலம் முழுமை பெறும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களை யெல்லாம் காணுகிற இந்த நேரத்தில், என் உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. உண்மையிலேயே அந்த உணர்ச்சியைப் பெறுகிறேன். ஜாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன். நீங்கள் முயற்சித்தால், நீங்கள் முனைந்து நின்றால் இந்த நாட்டில் நடைபெறும் கொடுமைகள் நீக்கப்படும் என்று அண்ணாவும் ஐயாவும் சொல்லியிருந்தாலும், அவர்களின் கடைசித்தொண்டனாக நான் இன்று முதலமைச்சராக இருந்தாலும் நான் அதைச் சொல்வதில் பெருமையடைகிறேன்.

மனிதன் தன்னுடைய சுய அறிவோடு இருக்கிற போதே தவறுகள் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. படித்தவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும் தவறு செய்வது தவிர்க்க முடியாதது. அப்படியிருக்கும்போது சுய நினைவையும் இழந்து நாம் பல தவறுகளைச் செய்யும்போது நம்மை ஏதோ ஒரு மயக்கத்திற்கு உள்ளாக்கக் கூடிய வகையில் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டால், நீங்கள் அனைவரும் உங்கள் முன்னல் சொல்கிற இந்தச் செய்தி, தமிழகம் முழுவதும், இந்தியா முழுவதும் பரவவேண்டும். மது அரக்கன் என்ற பேயை நாம் தமிழகத்திலிருந்து விரைவில் ஒட்டியாக வேண்டும்.

நான் தஞ்சைக்குச் சென்றபோது, மூன்று தாலுக்காக்களில் மதுவை அறவே மக்களாகவே ஒழித்து விட்டார்கள் என்பதையும், அங்கே மக்களாகவே ஒரு மாநாட்டை நடத்தினர்கள் என்பதும், இங்கே நான் வரும்போது, மக்கள் ஒன்றுபட்டு நாட்டிலே நன்மையை உருவாக்குவது என்ற முடிவுக்கு வந்தால் அதைத் தடுக்கும் சக்தி எதற்கும் இருக்க முடியாது.

மாணவர்கள் கல்வி பயிலத்தான் வேண்டும் என்பதில் எனக்குள்ள ஆர்வத்தை அதிகமாகச் சொல்லி, பெருமைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. மூன்றாவது வகுப்பு வரையில் படித்து, ஏழ்மையின் காரணமாக அதற்குமேல் படிக்க முடியாமல் நாடகத்தில் சேர்ந்து வேலை செய்துதான் சம்பாதிக்க வேண்டும், வேறு வழியில்லை என்ற நிலை எப்படி ஏற்பட்டதோ அது போல் எத்தனையோ குழந்தைகள் இன்று வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. அவர்களுக்கு எல்லாம் கல்வி அளிப்பதன் மூலமும் அவர்களை இந்தியா முழுவதும் மட்டும்

இல்லாமல் உலகத்தில் ஆங்காங்கு இருக்கிற நல்லறிவாளிகள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், பகுத்தறிவுவாதிகள், அத்தனை பேரும் பாராட்டி, நல்லவர்களை, திறமையாளர்களை, அங்கே காண வேண்டும், தமிழகத்தில்தான் மீண்டும் காணவேண்டும், அந்தப் புகழ் மீண்டும் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று நாம் எல்லாரும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோளாகும்.

அதோடு மட்டுமல்ல, கல்வி பயிலுபவர்கள், ஏதோ படித்துப் பட்டம் பெறுகிறோம் என்று இல்லாமல், நாம் ஒருவர் கல்வி பெறுவதன் மூலம், 1,000 பேருக்காவது மக்களுக்காவது வாழ்வு தர இந்த வாலிய வயதில், இளமைப் பருவத்தில் கொள்ளும் அந்தக்கொள்கையை, உறுதியைப் பெற்றாக வேண்டும். அதேபோல் தொழிலாளப் பெருமக்கள், இந்த நாட்டில் உழைக்கிறவர்கள், ஏதோ யாருக்கோ அடிமையாக இருக்கிறோம் என்று எண்ணாமல், அந்த எண்ணத்தைத் தூக்கி யெறிந்து விட்டு, இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்ற எண்ணத்தில், உழைப்பவர்கள்தான் உரிமை படைத்தவர்கள் என்ற நிலையில் அவர்கள் நல்ல உணர்வோடு அந்த எண்ணத்தைப் பெற்று, தொண்டு செய்ய வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் வேண்டிக் கொள்கிறேன்.

இந்தக் கஷ்டங்கள், துன்பங்கள், வரினும், நம்மைக்காப்பதற்காகவே வருகின்றன என்று எண்ண வேண்டும். இன்றைய தினம், விவசாயிகள் யாருடைய கைப்பாவையாகவும் இல்லாமல், தம்முடைய தேவையை, தங்களுக்கு இருக்கிற கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி, விவாதத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் அனைத்துப் பிரச்சினைகளிலும் ஒரு நல்ல நிலைமையை உருவாக்கி இருப்பதை எண்ணி நான் உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு மனிதனும் ஏத்தனை காலம் உயிரோடு வாழ்கிறான் என்று கருதாமல், இந்த இடைக்காலத்தில் என்னென்ன நற்பணிகளைச் செய்தான் என்று கணக்கிட்டுப் பார்த்து நாம் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்று எண்ணி, பதவிகள் என்னென்ன பெற்றோம் என்பதைப் பார்க்காமல், நல்லதை எவ்வளவு செய்து இருக்கிறோம் என்று எண்ணினால்,

## படுதா ?

பல ஆண்டுகளுக்கு முன் சென்னை ஒற்றைவாடைக் கொட்டகையில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரின் 'வள்ளுவம்' என்ற புதுமையான நாடகம் நடைபெற்றது. திருக்குறள் நெறி பரப்பும் அரிய நாடகம் இது.

என். எஸ். கே. — மதுரம் இணைந்து நடித்த காட்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்தக் காட்சி முடிந்தவுடன் திரையை விட மறந்து விட்டார் 'சீன்' தொழிலாளி. "திரையைப் போடு!" என்று எப்படி பகிரங்கமாகச் சொல்வது?

கலைவாணரின் நுண்ணறிவில் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. தம்முடன் நடித்துக் கொண்டிருந்த மதுரம் அம்மையாரை நோக்கி, "என்ன, நான் இவ்வளவு நேரம் சொன்னது உன் மனசிலே படுதா?...படுதா?... படுதா?" என்று ஒரு புதிய புதிர் உரையாடலைச் சமயோசிதமாகக் கற்பனையாகப் பேசினார். 'படுதா' என்ற சொல்லிலே அழுத்தம் கொடுத்து நகைச்சுவை ததும்ப அவர் பேசியதை 'சீன்' தொழிலாளி புரிந்து கொண்டு, 'சட்'டென்று முன் பக்கப் படுதாவை விட்டுக் காட்சியை முடித்தார். நுண்ணறிவுமிக்க என். எஸ். கே. யின் "படுதா?" வசனத்தை நன்கு புரிந்து கொண்ட அவையோர் அனைவரும் அரங்கம் அதிரக் கையொலி செய்ததை மெய்சிலிர்க்க நேரில் கண்டு மகிழ்ந்தேன்.

தகவல்:
—புத்தனேரி சுப்பிரமணியம்.

நமது எண்ணத்தை மாற்றிக் கொள்ள முடியும் என்ற உணர்வை, உறுதியை—தமிழகத்தில் இருக்கிற பெரும்பாலான மக்கள் நன்றாகப் பதிய வைத்து, தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள அரசோடும், மற்றவர்களோடும் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழக அரசு பல வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறபோது, வழக்குகளைப் போடுவதால் ஒரு அரசுக்குப் பெருமை வந்துவிடாது, அப்படிப் பெருமைப்படுகிறது என்று சொல்வதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் வழக்குகளே இல்லாமல், எந்தக் குற்றங்கள் செய்தாலும் கேள்வி கேட்பார் இல்லை என்று சொல்வது தொண்டுக்கு ஆதாரமாக அமையாது என்பதை அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொன்னால் மக்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள். பழி வாங்கும் தன்மை தமிழக அரசுக்கு நிச்சயமாக இல்லை. அப்படி எந்தக் காரியத்தையும் செய்யாது என்று அமரர் அண்ணாவின் மீது ஆணையிட்டுச் சொல்லிக் கொள்கிறேன். உண்மை என்று இருந்தால்தான் நியாயமாக காரியங்கள் நடக்கிறது என்று இருந்தால்தான் இந்த அரசு ஈடுபடுமே ஒழிய— பழிவாங்கும் காரியங்களில் தவறான செய்கையில் இந்த அரசு ஈடுபடாது.

இந்த நேரத்தில் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். என்னிடமோ, என்னுடன் இருப்பவர்களிடமோ, அரசாங்க அதிகாரிகளிடமோ, அரசு செயலாளர்களிடமோ, தலைமைச் செயலாளர் அவர்களிடமோ, காவல் துறையினரிடமோ தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். அவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்ற உறுதி கூறும்போதே, அப்படி தவறுகள் இருந்தால், மக்கள் சுதந்தரமாக அதை சுட்டிக் காட்டக்கூடிய நிலையில் இருக்கிறோம் என்ற நம்பிக்கையும் ஆசையும் ஆகும். இந்த அரசு மீது, அரசு அதிகாரிகள் மீது, உங்களுக்கு ஏதாவது தவறான செய்திகள் கிடைத்தால் தயவு செய்து இந்த அரசுக்கு தெரியப் படுத்தலாம். அதை நான் வரவேற்கிறேன்.

இந்தச் சுதந்தரம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். ஒருவன் லட்சாதிபதியாக ஆகி விட்டால் மட்டும் முழு வாழ்வு பெற்றவனாகி விடமுடியாது. வாழ்வுக்கு

நிரந்தரமான உத்தரவாதம் தேவை. குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் என்ன நிலைமை ஏற்படுமோ என்ற ஏக்கம், அச்சம் எந்தத் தாய் தந்தையர்க்கும் இருக்கக் கூடாது. அந்த நிலைமையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். எங்கள் குடும்பத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அதை அரசு பார்த்துக் கொள்ளும். எங்கள் கடமையைச் செய்வோம் என்ற நம்பிக்கையான சூழ்நிலை என்று உருவாகிறதோ, எல்லோரும் சமநிலை, சமத்துவ சமதர்ம சமுதாயத்தை அமைக்க என்று நாம் பாடுபடுகிறோமோ அன்றுதான் நமக்கு நல்வாழ்வு ஏற்படும். அந்த உறுதியான நம்பிக்கை ஒன்றுதான் இந்த நாட்டிற்கு வாங்கித் தந்த சுதந்தரமாகும். அப்படிக் கிடைத்த சுதந்தரத்தின் சொந்தக்காரர்களாக இருக்க முடியும். சமுதாயத்தில் மறுமலர்ச்சியும் மாற்றமும் தேவை. பொருளாதார அடிப்படைத் திட்டங்களை மாற்றியாக வேண்டும். அடுத்த தலைமுறை நாட்டில் பிரச்சினையைச் சந்திக்கக் கூடாத வகையில் நாம் திட்டங்களைத் தீட்டியாக வேண்டும்.

துரித கதியில் சொல்கிற எந்தக் கருத்துரையாக இருந்தாலும் கூட கடைசி வரையில் அந்தக் காரியத்தை நாம் முடித்தேயாக வேண்டும். அப்படிப் பட்ட திறமைசாலிகளை நாம் உருவாக்க வேண்டும். திறமை சாலியாக இருந்தால் மட்டும் போதாது. புகழும் இருந்தாக வேண்டும். சமுதாயத்தையும் பொருளாதாரத்தையும் இந்திய சுதந்தரத்தையும் நாம் ஒருமைப்படுத்தி, நாம் பணிபுரிய வேண்டும். அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். சில கோடிகளை வைத்திருக்கிற ஒரு சில பெரிய மனிதர்களுக்காக மட்டும் இல்லாமல், ஏழை மக்கள், உழைக்கும் வர்க்கத்தினருக்கு இந்தத் திட்டங்கள் பயன்பட வேண்டும் என்று சொல்லக்கூடிய வகையில் வேலையில்லாமல் மக்கள் இருப்பதற்கு மாறாக எல்லோருக்கும் வேலை என்ற நிலை வரவேண்டும். மற்ற மனிதர்கள், எந்த எந்த வசதியை—தேவையான அளவுக்குப் பெற்று வாழ்கிறார்களோ அதைப்போல் வாழ்கிற நிலைமை தமிழகத்தில் மட்டும் அல்ல, தமிழகத்தின் மூலமாக, இந்தியத் துணைக் கண்டம் பூராவுக்கும் பரவ வேண்டும் என்ற ஆசை, அண்ணாவின் கொள்கையின் விளைவை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த விளைவை நாம் அறுவடையாக்கிக் கொள்ளத் தயாராக வேண்டும். அந்த அறுவடையை எப்படிச் செய்வது என்று சொல்லும்போது, பயிர்களை அரிவாளால் அறுத்து அதை நெல் மணிகளாக ஆக்கும்போது நாம் பயனடைகிறோம்; அந்த அரிவாள் மக்களை அறுக்கப் பயன்படக் கூடாது. அது மக்களை வாழ்விக்க வேண்டும்.

நாம் குழந்தைகளை, இளைஞர்களை இப்போதே நாம் நமது தொண்டைச் செய்ய, புதிய சமுதாயத்தை உருவாக்க அவர்களை தயார் செய்யவேண்டும். பொருளாதாரச் சமத்துவத்தை உருவாக்கி, ஒன்றுபட்டு வாழும் நிலைமைக்கு இந்த நாட்டில், ஐயாவும், அமரர் அண்ணாவும், ராஜாஜியும், காமராஜர் அவர்களும் பாடுபட்டார்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்றும் அளவுக்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு மகாத்மா காந்தியை நினைத்து இந்த அறப்போரில் வெற்றிபெற்று, எத்தனை தடைகள் இருப்பினும் அவைகளை தகர்த்தெறிந்து நாம் நமது கொள்கையை பெற்றாகவேண்டும்.

அதே போல், நம்முடைய இந்தப் புதிய சமுதாயத் திருத்தத்திற்குப் பொருளாதார அமைப்பை மாற்றி, ஒற்றுமையையும் உழைப்பையும் பயன்படுத்தி வெற்றி பெறும் வகையில் அறவழியில் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று தமிழ்ச் சமுதாயத்து மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய கடமையைச் செய்ய பின் வாங்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தாலும், அந்தக்கடமையைச் செய்யும்போது உங்களுக்குப் பாதுகாப்புத் தருகிற வகையில் காவல் துறையும், இராணுவமும் தயாராக இருக்கும். இந்தத் தியாகத்தைச் செய்யவும், உங்களுக்குப் பாதுகாப்புத் தரவும் தயாராக இருக்கிறார்கள். குறைகள் எங்கிருந்தாலும் சுட்டுக் காட்டிடுங்கள். என்னிடம் இருந்தாலும் சொல்லுங்கள் என்று கூறி, இந்த சுதந்தர நாளில் நாம் சுதந்தர மக்களாக வாழவேண்டுமென்று கூறி, நாம் அத்தகைய முடிவுக்கு வந்து விட்டோம் என்று சொல்லி, புதிய பொருளாதார அமைப்பை, புதிய சமுதாயத்தை , அமைப்போம் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தமிழக மக்கள் அனைவரையும் கை கூப்பி வேண்டிக்கொள்வது எனது கடமையாகும். ஒரு மனதோடு இருங்கள், ஜாதி பேதத்தை ஒழியுங்கள், மத நம்பிக்கையின் பெயரால் நாமே பிளவுபட அனுமதிக்காதீர்கள் என்று உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட இன்றைய தினம் சபதம் ஏற்போம் என்று கூறி, இந்தச் சுதந்தரத்தை நாம் எங்கே இருந்தாலும், காஷ்மீரோ கன்னியாகுமரியோ எங்கிருந்தாலும் ஒன்றாகச் சேர்ந்து பாதுகாப்போம் என்று கூறி, இந்தச் சுதந்தரத்தை எந்தத் தியாகம் செய்தாவது காப்போம், காத்தே தீருவோம் என்ற உறுதி மொழியை எடுத்துக் கொண்டு,

இந்திய சுதந்திரம் வாழ்க ! இந்திய மக்கள் வாழ்க ! தமிழக மக்கள் வாழ்க! தமிழ் நாடு வாழ்க, அண்ணா நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

---

[விடுதலை நாளன்று, சென்னைக் கோட்டையில் கொடியேற்றி வைத்து முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை ]

---

## கிராமப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டம்!

குடும்ப நலத் திட்டத்தைக் குறிப்பாக கிராமப்புறங்களில் தீவிரமாக்கச் செயல்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கல்வி, சுகாதாரம், மகப்பேறு, குழந்தை நலம், குடும்ப நல்வாழ்வு, பெண்கள் உரிமை, சத்துணவு ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான கொள்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

மகப்பேறு மற்றும் குழந்தை சுகாதாரப் பணிகளை வளரச் செய்ய தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. உள்ளூர் தாதிகளுக்குப் பயிற்சியளிக்கும் மாபெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் சமுதாய சுகாதார நல்வாழ்வுத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடும்பநலத் திட்டத்தை மக்களிடையே தீவிரமாகப் பரப்புவதற்குக் கல்வி மற்றும் பிரசார இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1978 செப்டம்பர் மாதம் குடும்பநலத் திட்ட சிறப்பு நிகழ்ச்சிகளின் இரு வாரக் கொண்டாட்டம் கடைப்பிடிக்கப்படும்.



# எல்லாரும் எல்லாம்பெற தொடர்ந்து தொண்டாற்றுவோம்

## முதல்வர் உரை

**வ**ணக்கத்திற்குரிய தமிழகப் பெரியோர்களே!

அன்புக்குரிய தாய்மார்களே!

எனது ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

இன்று இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலை நாள்!

அந்நிய ஆட்சியின் பிடியிலிருந்து இந்திய நாடு விடுதலை பெற்ற 31வது ஆண்டினைக் குறிக்கும் இந்த நல்ல நாளில் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த நல்லோர், அதனைப் பாதுகாத்து, நாட்டின் நிலையை உயர்த்திட நாளும் பாடுபடும் அனைவருக்கும் நன்றி வணக்கம், செலுத்திடும் நல்ல நாளாக இந்நன்னாள் அமைந்துள்ளது.

விடுதலைக்கு வழிகோலிய தியாக மறவர்களுக்கு வீர வணக்கம் செலுத்திடும் இந்நாளில், அந்தத் தியாகிகளால் உருவாக்கப்பட்ட சுதந்திர நாட்டில், தமிழகத்தின் அரசுப் பொறுப்பினை ஏற்று அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையினைச் செயலாக்க வாய்ப்பளித்த தமிழக மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏழை, எளிய, உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்காகவும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற வேற்றுமை அகலவும், நாட்டின் உயிர்நாடியாகிய கிராம மக்கள் எல்லா வசதிகளையும் பெற்று நிறைந்த வாழ்வு பெறவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும் இந்நன்னாளில் உறுதி கூறுகிறேன்.**

சுதந்திரம் என்பது புறத்திலும், அகத்திலும் இருக்க முடியாது. அதே நேரத்தில் புறத்திலும், அகத்திலும் சில கட்டுப்பாடுகள் இருந்தாக வேண்டும்.

ஒரு மனிதன், அவன் எந்த மொழியைப் பேசுகிறவனாக இருந்த போதிலும், அவன் தன்னுடைய உள்ள உணர்வுகளை வெளியிட, அவற்றை உண்மையாகப் பிரதிபலிக்க உதவுவது அந்தந்த மாநில மொழிதான் என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

இயற்கை வளத்தினை ஒரு மனிதன் தன் வாழ்வுக்காக மட்டும் பயன்படுத்த விரும்பக் கூடாது. இந்த நிலைமை உள்ளத்திலும், புறத்திலும் இருந்தாக வேண்டும்.

மன நிறைவு என்பது அந்தந்த மனிதனுடைய அவசியத் தேவைகள், முழுமை பெறுவதால் மட்டும் ஏற்பட்டு விடாது. **ஆற்றலும், அறிவும், விஞ்ஞான நுணுக்கத் திறமையும் மனித வாழ்வின் வளத்துக்கு — குறிப்பாக எதிர்கால உலகத்திற்கு உத்தரவாதமாகப் பயன்படக்கூடிய நிலைமை உருவாக்கப்பட வேண்டும்.**

திறமையும், அளவிடற்கரிய அறிவும், ஆற்றலும் ஒருவர் பெற்றிருந்தாலும் கூட, இன்னொருவருடைய உழைப்பு—அறிவு—கல்வித் திறன் ஆகியவற்றின் உதவியின்றி வாழ முடியாது. அதுபோல் எந்த ஒரு தனி மனிதனும் தனக்காக மட்டுமே உழைப்பது என்று நினைத்தாலும், வாழ்க்கை முறையில் அது பிறருக்குப் பயன்பட்டே தீரும். இதை முழுமையாக உணர்ந்தால், பொது சுதந்திரத்தின் சிறு அங்கம்தான் தனி மனித சுதந்திரம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தனி மனித சுதந்திரத்தின் மொத்த உருவம்தான் ஒரு நாட்டின் சுதந்திரம். அந்த நாட்டின் சுதந்திரம்தான் அந்த நாட்டு மக்க

ளின் வளமான வாழ்க்கைக்குத் தரும் உத்தரவாதமாகும்!

அனைத்து மக்களின் தியாக உணர்வில் தான் எதிர்காலச் சந்ததிகளின் சுதந்திரம் உறுதி செய்யப்படுகிறது. இதில் சாதியோ—மதமோ, உயர்வோ—தாழ்வோ மற்றும் உழைக்காதவர்—உழைப்பவர், வசதி மிக்கவர்—வசதியற்றவர் என்ற பேதங்களின் இடர்ப்பாடுகள் குறுக்கிட அனுமதிக்காமல் இருப்பதுதான் ஒவ்வொரு தனி மனிதனுடைய கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றி, இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த மகாத்மா காந்தி அடிகளையும், அவரைப் பின் தொடர்ந்து இந்தியச் சுதந்திரத்திற்குத் தியாகம் செய்த அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தி வணங்குவது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்!

அரசியலை, ஒரு நாட்டிற்கு விடுதலை வாங்கித் தருவது என்ற நோக்கத்தோடு மட்டுமல்லாமல், சமுதாய அமைப்பிலுள்ள குறைபாடுகளையும், மனித மனத்திலிருந்த தவறான நம்பிக்கைகளையும் போக்கவும் மகாத்மா பாடுபட்டார். நமது நாட்டில் வாழும் மக்களுக்குச் சாதியாலோ—மதத்தாலோ உயர்வு தாழ்வு கற்பிப்பதை நீக்கி—சமத்துவ சுதந்திர உரிமை கிடைப்பதற்கும் ஏழை—பணக்காரர் என்ற நிலையை மாற்றி உழைப்பவர்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவும் பயன்படுத்த வேண்டுமென்று அய்யா பெரியார், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராசாசி போன்ற பெரியவர்கள் உழைத்ததன் பலன் இன்னமும் முழுமை அடையவில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒழுங்கிற்கும்—அதன் வாயிலாக ஒழுக்கத்திற்கும் சொந்தக்காரராக ஆக்கிக் கொள்ளவும் — மது, சாதி வெறி, மத வெறி போன்றவற்றின் பிடியிலிருந்து விடுபடவும் மகாத்மாவிலிருந்து இப்போது குறிப்பிட்ட அனைவரும், அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் அக்கறையோடு, இன்னமும் உழைக்கின்றனர்.

**மக்களும், குறிப்பாக அரசியல்வாதிகளும் மனத்தூய்மை உள்ளவர்களாகவும் புனித மானவர்களாகவும் இருந்தாக வேண்டுமென்ற தத்துவத்தைப் பின்பற்ற வேண்டியது நம் ஒவ்வொருவருடைய நீங்காக் கடமையாகும். அதுவே தனி மனித சுதந்திரத்திற்கு அடிப்படை என்பதை இந்த நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் நினைவு படுத்திக்கொண்டு, அந்த அறவழியில் ஒருமை உணர்வோடு — ஒன்றுபட்ட மனத்தோடு — ஓய்வில்லா உழைப்பைத் தந்து நாட்டின் சுதந்திரத்தை மட்டுமல்லாமல், தனிமனித சுதந்திரத்தையும்— "உழைப்பவரே உயர்ந்தவர்" என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவத்தையும் காப்பாற்றுவோம் என்று இந்தச் சுதந்திர நாளில் நாம் எல்லோரும் உறுதி எடுத்துக் கொள்வோம்.**

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''

''நாம் எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் இனம்''

## "நான் சென்றிருந்தால்...?"

பல வருடங்களுக்கு முன், டில்லியில் தென்னிந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்தக் குழுவின் தலைவராகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் சென்றிருந்தார்.

அவரது நிகழ்ச்சிகள் முடிந்தன. உடனே, அன்று இரவே சென்னைக்கு விமானத்தில் புறப்படத்தீர்மானித்தார் கலைவாணர். அன்று மாலை ருஷ்ய ஸ்தானிகர் மாளிகையில் நடக்கவிருக்கும் வரவேற்பு விழாவில் கலைவாணரும் கலந்து கொண்டால்தான் சிறப்பாக இருக்கும் எனக் கருதினார்கள் சக கலைஞர்கள். கலைவாணரோ, அதற்காகப் பிரயாணத்தை ஒத்தி போடவிரும்பவில்லை. உடனே கலைவாணர் நண்பர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள். அன்று செல்வதற்கு விமானத்தில் இடமில்லையென்று சொல்லிவிட்டு, மறுநாள் 'புக்' செய்யும்படி அவரது காரியதரிசியிடம் தெரிவித்துவிட்டனர். அவரும் அப்படியே செய்தார். விருந்து சிறப்பாக நடைபெற்றது—கலைவாணர் கலந்து கொண்டதால்.

மறுநாள் காலை பத்திரிகையில், முதல் நாள் இரவு புறப்பட்ட விமானம் நாகபுரியில் கோர விபத்துக்குள்ளாகி எல்லோரும் மாண்டதாகச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. செய்தியைப் படித்துத் திடுக்கிட்ட சக கலைஞர்கள் கலைவாணரிடம் தாங்கள் செய்த தந்திரத்தைச் சொன்னதோடு, ''நல்ல காலம்! நீங்கள் அந்தப் பிளேனில் போகாமல் பிழைச்சீங்க!" என்றனர்.

அதற்கு உடனே அவர் ''அட போங்கய்யா! நான் அந்தப் பிளேனில் போயிருந்தா அதுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது. பத்திரமா என்னையும், மத்தவங்களையும் சென்னையிலே கொண்டு போய்ச் சேர்த்திருக்கும். நான் போகாததால்தான் அது விபத்துக்குள்ளாயிருச்சு'' என்று வருத்தத்துடன் சொன்னார்.

அங்குச் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது!

நன்றி: 'ஆனந்த விகடன்'.

என்ற உடன்பிறப்புணர்வோடு ஒன்றுபட்டு, அனைத்து மக்களும் சமத்துவத் தகுதியோடு, சமதர்ம உரிமையோடு, நமது நாட்டின் சுதந்திரத்தை—நாட்டின் ஒற்றுமையை—நமது தமிழ் மொழியைக் காப்போம் என இந்தச் சுதந்திர நாளில் அண்ணா மீது ஆணையிட்டு நமது கடமையை நிறைவேற்ற ஒன்றுபடுவோம்!

வாழ்க இந்திய சுதந்திரம்!

வாழ்க இந்திய மக்கள்!

அண்ணா நாமம் வாழ்க!

**(வானொலி—தொலைக்காட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 15—8—78 அன்று ஆற்றிய உரை)**



# தமிழ்ப் பெரியார் என்.எஸ்.கிருஷ்ணன்

—வ.ரா.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன், (1940இல் என்று நினைக்கிறேன்). ஒரு நாள் சாயங்காலம், நான் சென்னை ரேடியோ நிலையத்திற்குப் போய்க் கொண்டிருந்தேன். அன்றைக்கு, ரேடியோவில் என்னுடைய 'புரோகிராம்' ஒன்று இருந்தது. அதற்காக நான் போனேன்.

ரேடியோ நிலையத்துக்கு வெகு சமீபத்தில், ஒரு 'பார்க்' (காற்று வாங்குவதற்காக, பெஞ்சுகள் போட்டிருக்கும், செடிகள் நிறைந்த தோட்டம்) இருக்கிறது. அங்கே ரேடியோ செட் ஒன்று உண்டு. அன்றைக்கு நூற்றுக் கணக்கானவர்கள் பெரும்பாலும் பாமரர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள்—கூடியிருந்தார்கள்.

என்னோடு ஒரு நண்பர் வந்தார். 'ஏது, இத்தனை பேர்கள் கூடியிருக்கிறார்களே, என் புரோகிராமைக் கேட்பதற்காக' என்று கேலியாக, அந்த நண்பரைக் கேட்டேன். 'இல்லை, உங்களுக்கு முன், என். எஸ். கிருஷ்ணன் புரோகிராம் ஒன்று இருக்கிறது. அதைக் கேட்க, நூற்றுக்கணக்கானவீர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள். உங்களுக்காக என்று எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம்' என்று நண்பர் விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

ஸர். சி. வி. ராமன் ரேடியோவில் எவ்வளவு அழகாகப் பேசுகிறார். நுட்பமாயிருக்கும் ஸயன்ஸ்ஸை, தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். அவர் பேசுவதில் விஷயம் இருக்கிறது; நகைச்சுவை ததும்புகிறது. அப்படியிருந்தும், அவரது பேச்சைக் கேட்பதற்கு, நூற்றுக் கணக்கானவர்கள் கூடுவதில்லை. அழகாக அவர் தமிழில் பேசினாலும், கூடமாட்டார்கள் என்பதே என் கருத்து.

ராமனும் மேதாவி; கிருஷ்ணனும் மேதாவி. புராண ராமனையும் கிருஷ்ணனையும் பற்றி நான் சொல்லவில்லை. பூலோகத்தில், தற்காலத்தில் உலகப் புகழோடு வாழும் ஸர். சி.வி. ராமனையும், எப்பொழுது பேசப்போகிறார் என்று நூற்றுக்கணக்கானவர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும் என். எஸ். கிருஷ்ணனையும் பற்றித்தான் நான் பேசுகிறேன். அவதாரங்களைப் பற்றி அல்ல.

பாமர ஜனங்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களையும் துயரங்களையும் சில நிமிஷங்களுக்கேனும் மறக்கப் பார்க்கிறார்கள். காசில்லாமல் சந்தோஷத்தைப் பெற வேண்டும். காசு இல்லாமல், ரேடியோ மூலமாக சந்தோஷத்தைக் கொடுக்கும் கிருஷ்ணனை, அவர்கள் ஏன் தெய்வமாகக் கும்பிட மாட்டார்கள்? //

சமீபத்தில், கிருஷ்ணனுடைய ஆக்டை ஒரு சினிமாப் படத்தில் பார்த்தேன். நான் பிரமித்துப் போனேன். கழைக் கூத்தாடிகளின் கூட்டத்தில் (படத்தில்) கிருஷ்ணன் இருக்கிறார். அவர்கள் வித்தை காண்பிக்கப் போவதை, கிருஷ்ணன் அறிவிக்கிறார், இந்த அறிவிப்பிலே, சாதுத்தனமான கொனஷ்டை.

முதலிலே, 'பாம்புக்கும் கீரிக்கும் கல்யாணம்—இல்லே—சண்டை' என்கிறார். பாம்புக்கும் கீரிக்கும் சண்டை என்று எப்பொழுதும் கேட்டுப் பழகியிருப்பவர்கள் சண்டைக்குப் பதிலாகக் கலியாணம் என்று கேட்டதும் கல கலவென்று சிரிக்கிறார்கள். கிருஷ்ணன், கலியாணம் என்று சொல்லும் விதமே அலாதியாக இருக்கிறது.

இன்னொரு அறிவிப்பு, 'இதோ கையிலிருக்கிற மாங்கொட்டையிலிருந்து, கூடையிலிருக்கிற மாஞ்செடியை வரவழைப்போம்' என்று வித்தை ரகசியத்தை விகடமாகவும் வேடிக்கையாகவும் ஆனால் சாதுத்தனமான குரலோடு, இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு, கிருஷ்ணன் சொல்லும் பொழுது தாங்க முடியாத துயரம் நேர்ந்திருந்தாலும் அதை உதறித் தள்ளி விட்டு, சிரிக்கத்தான் தோன்றும்.

அவர் நடக்கிற நடையும் நிற்கிற நிலையும், பேசுகிற குரலும், விழிக்கிற விழியும், எல்லாம் நம்மிடத்தில் சிரிப்பை அடிவயிற்றிலிருந்து கிளப்பத்தான் செய்கிறது.

ஹாஸ்யத்திலே, எந்த ரகம் மிகவும் உயர்ந்தது? பத்துப் பேர்கள் கூடியிருக்கிற இடத்தில் எல்லோரும் சிரிக்க வேண்டும் அப்படி சமுதாயமாக எல்லோரும் சிரிக்காமல், ஓரிரண்டு பேர்கள் தலைகுனிந்து கொண்டு, அவமா

ணம் அடைந்தவர்களைப் போல் இருக்க நேரின், அந்த விகடம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது அல்ல.

தன்னைத் தானே நொந்து கொள்ளுவது மாதிரி சொல்லி எல்லோரையும் கல கல வென்று சிரிக்கச் செய்வதுதான் உயர்ந்த ரகமான விகடமாகும். கிருஷ்ணன் பிறரைக் கேலி செய்யும் விதமே விநோதமாயிருக்கிறது. யாரை அவர் கேலி செய்து, கிண்டல் பண்ணு கிறாரோ, அவரும் சேர்ந்து சிரிக்கும்படியான விதத்தில், கிருஷ்ணன் கேலி செய்கிறார்.

கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார்; அதை விளை யாட்டுப் பொம்மையாக அடித்துவிடுகிறார்.

நான் சிரிக்க மாட்டேன் என்பது போல வாயைக் கெட்டியாக மூடிக் கொண்டிருப்பவர் களையும் கோட்டை வாசல் திறந்தது போல, வாயைத் திறந்து பார்த்துக் கொண்டே இருக்கும்படியாக கிருஷ்ணன் செய்து விடுகி றார்.

கிருஷ்ணன் படத்தில் இருந்தால், அவர் கையை அசைத்தாலும் போதும். அதை ரசிப்பது என்று ஜனங்கள் இப்பொழுது கங்க ணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது கிருஷ்ணனுக்கு கிடைத்திருக்கும் பாக்கியம் அல்ல. அது கிருஷ்ணன் செய்யும் வித்தையின் பயனாகும்.

'ஓகோ, அப்படியா' என்று ஒன்றும் அறியா யாத அப்பாவி போல, கிருஷ்ணன் பேசும் போது, அந்தக் குரலில் ஏதோ காந்தம் இருந்து கொண்டு, ஜனங்களை அப்படியே இழுக்கிறது.

இங்கிலீஷ் படித்து விட்டு, நாகரிகத் தூண் கள் என்று தங்களை எண்ணிக்கொண்டிருப்பவர் களில் பலர், என்னிடம் கிருஷ்ணனைப் பற்றி, வாதாடியிருக்கிறார்கள். முன் பின் பார்த்தி ராத நகைச்சுவையும் ஆக்டும் கிருஷ்ணனிடம் இருக்கின்றன என்பது என் கருத்து. படித்த நண்பர்களில் பலர் இதை ஏற்றுக் கொள்வது இல்லை. கிருஷ்ணன் ஆக்டிலே பிரமாதமாக ஒன்றும் இல்லை என்று அவர்கள் அதட்டிப் பேசுவதைக் கண்டால் எனக்குச் சிரிப்பு வரும்.

சார்லி சாப்ளின் பக்கத்தில் நிற்கக் கூடக் கிருஷ்ணனுக்குத் தகுதியில்லை என்று அந்த நண்பர்கள் (தமிழில் அல்ல) இங்கிலீஷில் இடி இடிப்பதைப் போலச் சொல்லுவார்கள். தமிழ் இங்கிலீஷைப் போல ஆகுமா என்று தமிழன் என்ற உணர்ச்சியே இல்லாமல் பேசு கிற மனிதனிடம் எந்த வாதமும் செல்லாது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்.

தமிழ் நாடு தங்கள் நாடு என்று பெருமை யோடு பேசிக் கொள்ள முடியாதவர்களிடம் சுயமரியாதை கொண்ட தமிழர்களுக்கு உறவு இருக்க முடியாது. சுயமரியாதைக்காக, உண் மையை மறந்தும் மறைத்தும் பேசலாமா என்பது போலி வாதம். தனக்குத் தெரியாது என்று தன் குடும்ப நிர்வாகத்தை அந்நியனி டம் ஒப்படைக்க எண்ணம் கொள்ளும் மனித னோடு வார்த்தை யாடுவதில் பயனில்லை.

பாமரர்களை லட்சியம் செய்யாதவர்கள் தான் கிருஷ்ணனை ரசிக்க மாட்டார்கள். நமது நாட்டினரின் வாழ்வு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் கிருஷ் ணனை ரசிக்க முடியாது. ஹாஸ்யம் நாகரிகமா யில்லையே என்று அவர்கள் கொட்டாவி விடு வார்கள். தரித்திரத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து கிடக்கும் மனிதர்களை அசட்டை செய்வது எளிது. அவர்களுக்கு உபகாரம் செய்யும் உத்தமர்களைக் கேவலமாகப் பேசு வது, அதைக் காட்டிலும் எளிது.

> **கலையின் சக்தி**
>
> **கலையையும், இலக்கியத்தை யும் நான் பெரிதும் மதிக் கிறேன்; விரும்புகிறேன். ஏனென்றால் கோடிக்கணக் கான மக்களுடன் பேசும் சக்தி கொண்டவை அவை**
>
> **—அண்ணல் காந்தியடிகள்**

கிருஷ்ணன் தமிழ் மக்களைச் சிரிக்க வைக் கும் மகான். தமிழர்கள் தங்கள் துயரத்தைச் சில நிமிஷங்களேனும் மறக்கும்படியாகச் செய்யும் பெரிய உபகாரியான கிருஷ்ணனை மதிக்காதவர்கள், நாட்டின் பொதுநன்மைக்கு பாதகம் நினைப்பவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

கிருஷ்ணன் தமது சொந்த வாழ்க்கையி லும் பரம ரசிகன் என்பது மதுரத்தைத் தோழியாகக் கொண்டதே, தெளிவாகக் காண் பிக்கிறது. கிட்டப்பாவுக்குச் சுந்தராம்பாள் வாய்த்தது போல, கிருஷ்ணனுக்கு மதுரம் வாய்த்திருக்கிறார். இல்லை; தப்பிதம். சுந்த ராம்பாளுக்குக் கிட்டப்பா வாய்த்தது போல மதுரத்துக்குக் கிருஷ்ணன் வாய்த்திருக்கிறார். இது தமிழ் நாட்டின் பாக்கியமாகும்.

தமக்குத் திருப்தி ஏற்படுகிற வரையில், கிருஷ்ணன் தங்கள் பார்ட்டை ஒத்திகை செய்து கொண்டேயிருப்பாராம். திருப்தி இல் லாமல் போனால், ஒலிப்பதிவு செய்யவும் படம் பிடிக்கவும் அவர் இணங்க மாட்டாராம். கிருஷ் ணனோடு வேலை செய்வது சுலபமானது என்றும் சுவாரஸ்யமானது என்றும் ஒலிப்பதிவு செய் யும் எஞ்சினியர் ஒருவர் என்னிடம் சொன் னார். தலைக்கனம் கொண்டவர்கள்தான் ஒத்தி கையை அலட்சியம் செய்வார்கள்.

செய்வன திருந்தச் செய் என்ற கொள் கையைக் கொண்டிருக்கும் கிருஷ்ணனை நான் வாழ்த்துகிறேன். பொறுப்பை உணர்ந்து புத்திசாலித் தனத்துடன் காரியம் செய்பவர் கள் தமிழ்நாட்டில் அனேகர் இல்லை. அந்தச் சிறு கூட்டத்தில், கிருஷ்ணன் ஒருவர். அனா யாசமாக, நம்மவர்களை நகைக்கச் செய்யும் சிறந்த மேதாவியாகிய கிருஷ்ணனைத் தமிழ் நாடு ஒரு நாளும் மறக்காது.

தமிழர்கள், நன்றி கொல்லும் தன்மையை கனவிலும் அறியாதவர்கள். கிருஷ்ணனுக்கு இதைக் காட்டிலும் உயர்ந்த வெகுமதியும் வேண்டுமா? கிருஷ்ணன் நாகர்கோயில் கிருஷ் ணன் அல்ல. அவர் தமிழ்நாட்டு முழுத் தமிழ்க் கிருஷ்ணன்.

**('தமிழ்ப் பெரியார்கள்' என்ற நூலிலிருந்து..)**



# என் கடன் களிப்பூட்டுதலே

**கலைவாணர் என்.எஸ்.கே**



களிப்பு என்றால், இன்பம், சந்தோஷம், ஆனந்தம் என்பது தானே பொருள்? மனிதவர்க்கம் அல்லும் பகலும் உழைப்பது எதற்கு? தொண்டுகள் பல புரிவது ஏன்? கனலிலே குதிப்பதும், கடலிலே குளித்து முத்தெடுப்பதும், கடும் வெயிலிலே கல்லுடைப்பதும் ஏன்? எல்லாம் இந்தக் களிப்பை அடைவதற்குத் தானே? இதிலிருந்து, தங்கள் வாழ்க்கையில் இன்பத்தைப் பெறுவதற்குத்தான் மானிட வர்க்கம் கஷ்டப்பட்டு உழைத்து வருகிறது. இந்தக் களிப்பு அதாவது இன்பமானது, அவரவர்கள் வாழ்க்கைத் தரங்களுக்கேற்ற முறையில், வெவ்வேறு உணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

தொழிலாளி, முதலாளியிடம் கூலியைச் சற்றுக் கூட்டித் தர வேண்டுமென்று கேட்கிறான். வேலை செய்யும் பாட்டாளிக்கு, முதலாளி கூலியைக் கூட்டிக் கொடுத்து அவனுக்குக் களிப்பை யூட்டுகிறான். கூலியை அதிகமாகப் பெற்ற பாட்டாளியின் களிப்பு, அவன் மனைவிக்கு அழகான ஒரு சேலை வாங்கிக்கொண்டு போக வேண்டுமென்ற ஆசையாக மாறுகிறது. வீடு சென்ற பாட்டாளி, தன் மனைவிக்குச் சேலையைக் கொடுத்த அந்த அம்மையாருக்குக் களிப்பை யூட்டுகிறான். புடவையை வாங்கிக் கொண்ட மனைவி, புருஷனுக்குக் கடைக்கண் பார்வையால் களிப்பூட்டுகிறாள். இந்தக் களிப்பானது இவ்விருவருக்குமிடையே இருந்த காதலைப் பெருக்குகின்றது.

ஒரு நல்ல எழுத்தாளன், அருமையான பல விஷயங்களை அறிந்து ஆராய்ந்து கட்டுரை எழுதிக் களிப்பூட்டுகிறான். இந்தக் களிப்பானது, நாட்டு மக்களுக்கு நன்மையான கட்டுரைகளையும், புத்தகங்களையும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை உண்டாக்குகிறது.

மேடைப் பிரசங்கியொருவர், அரசியல் விவகாரங்களைப்பற்றி அருமையாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொல்லி, மக்களுக்குக் களிப்பூட்டுகிறார். இந்தக் களிப்பு மக்களிடையே தேச நலத்தில் அக்கறையை உண்டாக்குகிறது. இப்படிப் பலப் பல.

இதேபோல், என்போன்ற நடிகர்கள் ஹாஸ்யக் கலையின் மூலமாக மக்களுக்குக் களிப்பூட்டுகிறார்கள். இந்தக் களிப்பு, சிரிப்பை உண்டாக்குகிறது. ஆகவே, என் கடன் களிப்பூட்டி, மக்களைச் சிரிக்க வைப்பதேயாம்.

ஏன் சிரிக்கச் சொல்கிறேன் என்றால், சிரித்தால் உடம்பில் எந்தவிதமான வியாதியும் ஏற்படாது. இன்னும் ஆரோக்கியமாக வாழ்வதற்குச் சிரிப்பு மிக மிக அவசியமானது என்று அண்மையில் அமெரிக்க டாக்டரொருவர் ஆராய்ச்சி மூலம் தெளிவுப் படுத்தியிருக்கிறார். அவர் மேலும் சொல்லுகிறார்.

சிரிக்கும்போது, காற்றுப்பை விரிகிறது. அப்படி விரியும்போது அந்தக் காற்றுப் பையில் பிராணவாயு அதிகமாகப் போய்ச் சேருகிறது. இப்படிப் பிராணவாயுவின் பெருக்கத்தால் நீண்ட வாழ்வை மக்களுக்கு அளிக்கிறது என்று அதே டாக்டர் காரணங்களைக் காட்டிக் கூறியிருக்கிறார்.

மனிதனுக்கு மட்டும்தான் சிரிக்கத் தெரியும். மிருகங்களுக்குச் சிரிக்கத் தெரியாது. ஏனென்றால், மனிதனுக்கு மனம் என்று ஒன்று இருக்கிறது. மிருகங்களுக்கு அறிவு உண்டு; ஆனால் மனம் இல்லை. மனிதனுக்கு மனமும் அறிவும் பிணைக்கப்பட்ட முறையில் அமைந்திருக்கிறது.

சிரிச்சால் மனம் தெளியும்; நோய் நொடிகள் சீக்கிரம் ஓடிவிடும்; சிரிப்புக்குச் செலவில்லை; தெரிந்தும் சிலர் சிரிக்கிறதேயில்லை; சிரிக்கிறபோது முகத்தை நீ பாரு; அது என்ன ஜோரு; அந்த அழகே வேறு !

ஆஹா-ஹா! உடம்பிலே ஒரு தெம்பு; உள்ளத்திலே ஒரு பூரிப்பு; முகத்திலே ஒரு அழகு; இவையனைத்தும் இந்தச் சிரிப்பில் இருந்தல்லவா கிடைக்கின்றது? ஆகவே, சிரிப்பையூட்டுபவரை டாக்டர் என்றுகூட அழைக்கலாம்.

சிரிப்பூட்டும் ஹாஸ்யம் ஒரு அருமையான கலை. இந்தக் கலையை நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய ரீதியிலும், பிறரைத் துன்புறுத்தாத முறையிலும் கையாள வேண்டும்.





இப்போது மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து மகிழ வைக்க வேண்டுமானால், அந்தப் பணியைச் செய்யும் கலைஞருக்குப் பல துறைகளிலும் தேர்ச்சியும், தெளிந்த அறிவும் வேண்டும்.

அரசியல் துறையிலே—சமூக விவகாரங்களிலே— அறநெறிகளிலே-இலக்கியத் துறையிலே—சரித்திர ஆராய்ச்சியோடு சயன்ஸூம் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டும். இப்படிப் பல்வேறு துறைகளிலும் முறையான ஞானமிருந்தால் மட்டும்தான் மக்களை சிரிப்பூட்ட வைக்கும் சிறந்த நகைச்சுவைக் கலைஞனைச் சோபிக்க முடியும்.

[1949-ல் சென்னை வானொலியில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பேசியது.]



நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுடன் பொன்னாடை போர்த்தப் பெற்ற கலைவாணர்.



'ஸ்திரி ரத்னா' என்னும் கன்னடப் படத்தில் கலைவாணர், டி. ஏ. மதுரம்.





'நல்ல தம்பி' திரைப்படத்தில் நாட்டுக்குச் சேவை செய்ய வந்த நாகரிகக் கோமாளியாக....



"இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்கிறாரா கலைவாணர்...?



"புது வாழ்வு" திரைப்படத்தில் குலதெய்வம் ராஜகோபால், லலிதா ஆகியோருடன்...



ஓட்டுநர் தினகரராஜ், குலதெய்வம் ராஜகோபால், சி. எஸ். பாண்டியன், டி. ஏ. மதுரம் ஆகியோருடன்.

# தமிழ்நாடு பரிசுச் சீட்டு

முதல் பரிசினை வென்றிடும் அதிருஷ்டசாலி நீங்களாக இருக்கலாம்!

# இன்றே வாங்கிடுவீர்
# தமிழ்நாடு பரிசுச் சீட்டு!

## 2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000

# 50000

3 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 10,000
5 மூன்றுவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 5,000

மற்றும் மூன்று வரிசைகளில் (CB-CD) ஆறுதல் பரிசுகள் உட்பட உளம் மகிழும் பல உன்னதப் பரிசுகள்.

குலுக்கலிலிருந்து கிடைக்கும் வருவாய் தமிழ்நாட்டில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் வசதியளிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

மொத்தப் பரிசுகள்:
2,655 (ஒவ்வொரு வரிசைக்கும்)
மொத்தப் பரிசுத் தொகை:
ரூ. 3,90,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்:
20-9-'78
பரிசுச்சீட்டின் விலை:
ரூ. 1/-

வெளியிட்டோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை 600 002.

# சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்தவர்

'தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றுமை நன்று'

எனும் திருவள்ளுவரின் மொழிக்கேற்ப, புகழோடு தோன்றி, புகழ்பட வாழ்ந்து, புகழோடு மறைந்தவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்.

பேரறிஞர் அண்ணு அவர்களால் 'கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று கூறப்பட்ட கலைவாணரின் நினைவுகளை உங்களோடு சேர்ந்து பகிர்ந்துகொள்வதில் பெருமையடைகிறேன். எத்தனை நாள் அவரைப் பற்றிப் பேசினுலும், எத்தனை பேர் பேசினுலும் கலைவாணர் அவர்களைப் பற்றி புதிய செய்திகள்-இந்த நாட்டில் வளர்ந்து கொண்டே இருக்கும். காரணம், அவர் மக்களோடு இரண்டறக் கலந்த மாபெரும் கலைஞர்.

ஒரு பாரதி தோன்றியிராவிட்டால் தமிழ் புத்துயிர் பெற்றிருக்க முடியாது. ஒரு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தோன்றியிராவிடில் பகுத்தறிவு இயக்கம் வலுவடைந்திருக்க முடியாது. பேரறிஞர் அண்ணு அவர்கள் தோன்றியிராவிட்டால், சிறந்த பண்பாடு, பொதுவாழ்வில் மறுமலர்ச்சி பெற்றிருக்க முடியாது.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளும், நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனுரும் நம்மிடையே வந்திருக்காவிட்டால் நாடகக் கலை மேம்பாடு அடைந்திருக்க முடியாது.

இவர்களது வரிசையிலே வைத்து வணங்கப்பட வேண்டியவர் கலைவாணர் அவர்கள். கூத்தாடிகளாக-குறை மனிதர்களாக-அரிதார வேலைக்காரர்களாக மதித்து ஒதுக்கித் தள்ளப்பட்ட நடிகர் சமுதாயத்தில், அறிவு விளக்கேற்றி வைத்து, நடிகர்கள், மக்களுக்குத் தொண்டு செய்யப் பிறந்தவர்கள் என்ற நிலையை உருவாக்கி, நடிகர்கள் குலத்துக்கே பெருமையைத் தேடித் தந்து, நடிகர்களால் நாடாள முடியும் என்கின்ற வரலாறு படைப்பதற்கு முன்னேடியாகத் திகழ்ந்தவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள்.

49 ஆண்டுகளே வாழ்ந்து-ஆயிரம்ஆண்டுக்காலச்சாதனையை கலைத் துறை மூலமாகச் செய்து காட்டிய செம்மல் கலைவாணர்.

நாகர்கோவிலைச் சார்ந்த ஒழுகிணசேரியில்சுடலைமுத்துப்பிள்ளை இசக்கியம்மாள் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வராகத் தோன்றிய கலைவாணர், குடும்பத்தின் ஏழ்மை நிலையில் மூன்ரும் வகுப்பு வரைதான் படிக்கும் நிலைபெற்ருர். இந்த மூன்றே வகுப்பு பிற்காலத்தில் மூன்று தமிழையும் வளர்க்கவல்லது என்று அன்று யாருமே சோதிடம் கூறவில்லை. இளமையில் ஏற்பட்ட வறுமையின் காரணமாக சோடா வண்டியைத் தள்ளி வாழ்வைத் துவக்கியவர். பந்தாட்டு மைதானத்தில் பந்தெடுத்துக் கொடுக்கும் பையனுகப் பணியாற்றியவர். நாடக உலகம் செய்த நற்றவத்தினுல் 'கிருஷ்ணன்' என்ற அந்த இளைஞன் நாடக உலகில் அடியெடுத்து வைத்தார். எடுத்த எடுப்பிலேயே சிறுசிறு வேடங்களை தாங்கினுலும், தனது அரிய ஆற்றலை வெளிப்படுத்தி, நாடக ஆசிரியர்களே பார்த்து வியக்கும் அளவுக்கு, சிறந்து விளங்கியவர். எனது கலையுலக ஆசான்கள் முத்தமிழ்க் கலாவித்வ ரத்ன டி.கே. எஸ். சகோதரர்களின் 'மேனகா' திரைப்படத்திலும், நடிக வேந்தர் எம். கே. ராதா அவர்களோடு, 'சதி லீலாவதி' திரைப்படத்திலும் நடித்து, துவக்கத்திலேயே புகழ்மிக்க நகைச்சுவை நடிகராக, நாட்டு மக்கள் உள்ளத்திலே இடம்பெற்றுவிட்டார். தொடர்ந்து தட்சயக்ஞம், திருநீலகண்டர், அசோக்குமார், ராமலிங்க சுவாமிகள், ஆர்யமாலா, சிவகவி, கண்ணகி, மனேன்மணி போன்ற வெற்றிப் படங்கள் பலவற்றில் நடித்தார்.

''ஜாதி சமயம் ஏது—குலத்தில்
தாழ்வு உயர்வும் ஏது?'

என்று பாட்டுப்பாடி, பகுத்தறிவுக் கருத்துக்களை எடுத்துக் கூறி, சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்து, சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்களையும் ஏற்றுக்கொள்ளும்படியாக திரைப்படங்கள் மூலம் அரிய பணிபுரிந்து, நாட்டுக்குச் சேவை செய்த நாகரிகக் கோமாளியாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, ஒப்பில்லாக் கலைஞராக, உயர்குணம் படைத்த செம்மலாக, பிறவி வள்ளலாக, சான்ருேர் முதல் சாதாரணமானவர்கள் உள்ளத்திலே நீங்கா இடத்தைப் பெற்றவர் நமது அண்ணன் கலைவாணர் அவர்கள்.

அவரது கலைவாழ்வில் பாலுடன் சேர்ந்த சர்க்கரையாக,

**திரு. டி. வி. நாராயணசாமி**
செயலாளர், தமிழ்நாடு, இயல்
இசை நாடக மன்றம்



துணையாக நின்றவர் மதிப்புக்குரிய டி. ஏ. மதுரம் அம்மையார். 'சாலிவாகனன்' என்ற படத்திலே இன்று நாம் பேசிக்கொண்டிருக்கும் சாதியொழிப்பை, முளையிலேயே கிள்ளியிருக்கிறார். தாழ்த்தப்பட்ட குலப்பெண்ணை, மேட்டுக்குடித்தனப் பையன் காதலித்துத் திருமணம் செய்துகொள்ளுவதாகக் கதையைச் சித்திரித்து, ''பிறப்பிலே எந்த வித்தியாசமும் இல்லை, நீ உப்பைத் தொட்டால் கரிக்கிறது—நீ மிளகாயைத் தொட்டால் காரமாகஇருக்கிறது எங்கே என்னைக் கிள்ளு அடடே வலிக்கிறது, என்ன பேதம்? பேதம்ஒன்றும்தெரியவில்லையே?'' என்று எல்லோரையும் சிரிக்க வைத்து, தொடையைக் கிள்ளச் செய்து, கொட்டகையையே சிரிப்பில் ஆழ்த்தி, மக்களைச் சிந்திக்க வைத்தவர். 'உத்தமபுத்திரன்' படத்தில் புல்கட்டு சுமந்து வரும் பெண்ணை, உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர் காதலிப்பதாகச் சித்திரித்து, பல நல்ல கருத்துக்களைச் சொல்லுவார். கலை வரலாற்றில் உடுமலை நாராயணகவி அவர்கள் எழுதித் தந்த 'கிந்தனார்' என்னும் கதையை காலட்சேபமாக நடத்திக் காட்டி அந்த நந்தன் பக்தியிலே சிறந்தவன்-இந்தக் கிந்தன் கல்வியிலே சிறந்தவன் என்று கலைத்துறையில் புதிய வரலாற்றைப் படைத்து, தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்காக, காந்திய வழியில் நின்று, புதிய வரலாற்றைப் படைத்தவர். 50 60 பாட்டுப் பாடி இந்த நாடு நன்னிலை அடையக் கனவு கண்டவர். தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களுக்கு, நாகர் கோவிலில், தனி ஒருவராக நினைவுத்தூண் எழுப்பிப் பெருமை பெற்றவர். காந்திமகான் சரித்திரத்தை வில்லுப்பாட்டாகப் பாடி நம்மை மகிழ்வித்தவர்.

டைரக்டர் கே. சுப்ரமணியம் அவர்களுடன் லெனின் பிறந்த நாட்டிற்குச் சென்று நொடிப் பொழுதில் தனது கலைத் திறனைக் காட்டி ரஷ்யர்களை மகிழ்வித்தவர்.

காந்தியத் தத்துவத்தை ரஷ்யாவில், ஒரு மேடையில் எடுத்துப் பேசிக் கொண்டிருந்தபோது, காந்தியத்தைப் பேசும்போது—மொழிபெயர்ப்பாளர் சரியாக மொழிபெயர்க்காததால், மீண்டும் தான் சொன்ன கருத்தை மொழி பெயர்த்தால்தான் பேசுவேன் என அறவழிப் போராட்டம் கண்டு, திரும்பவும் மொழி பெயர்க்கச் செய்து வெற்றி கண்டவர்.

தான் தயாரித்த 'மணமகள்' படத்தில், கர்நாடக இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஏ. எஸ். பி. அய்யர், கல்கியார் போன்றோரின் பாராட்டைப் பெற்றவர்.

'நல்லதம்பி' படத்தில் மதுவிலக்குப் பிரச்சாரத்தை அழகாக எடுத்துக் காட்டி, மதுவின் தீமைகளைத் தெளிவுபட எடுத்துக் காட்டி, சமதர்ம எண்ணங்களைத் தூவி, மக்களைத் திருத்தப் பாடுபட்டவர் கலைவாணர்.

இன்னும் எத்தனையோ படங்களில் சமுதாயத்திற்கு வேண்டிய நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்.

தேரோட்டியான கிருஷ்ணனுக்குத்தான் பாரதத்திலே பாராட்டு உண்டு. தன்னிடம் பல ஆண்டுகள் காரோட்டியாகப் பணியாற்றிய தினகர்ராஜ் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி விழா நடத்தித் தொழிலாளியை கௌரவப்படுத்தியவர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ரசிகமணி டி. கே. சி., கல்கியார், அறிஞர் வ. ரா. தொழிலாளர் தலைவர் ஜீவா, பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி ஆகிய பெருமக்களின் உள்ளத்திலே இடம்பெற்று அவர்களோடு உரையாடி மகிழ்ந்து, அவர்கள் கூறிடும் நல்ல கருத்துக்களை, ஏற்று எவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் மக்களுக்குக் கலைமூலம் எடுத்துச் சொல்லி, சர்வ சமய சமரசவாதியாக, சீர்திருத்தச் செம்மலாகத் திகழ்ந்தவர் கலைவாணர் அவர்கள்.

ஈகையிற் சிறந்தவர், வள்ளலார் ராமலிங்க அடிகளைப்போல! பசியைத் தீர்த்தவர்; பலபேரை வாழ வைத்தவர்; பலபேரை ஆக்குவித்தவர்; பலவீனர்களைப் பரிகசிக்காமல் ஆறுதல் காட்டி ஊக்குவித்தவர். நாதஸ்வரக் கலைமேதைகள் டி. என். ராஜரத்தினம்பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம் போன்ற கலைச் செல்வங்களைப் போற்றி வளர்த்தவர்

ஆகவேதான்,. பெரியவர் வ.ரா 'தமிழ்நாட்டுப் பெரியார்களில் கலைவாணரும் ஒரு பெரியார்!' என்று எழுதிக் காட்டினார்.

கலைவாணர் மறைந்தபோது, மூதறிஞர் அண்ணா, 'கிருஷ்ணன் காலி செய்த இடத்தில் இன்னொருவர் புகழ்பெற முடியாது' என்றார்.

தந்தை பெரியார் 'நான் போய் கிருஷ்ணன் வாழ்ந்திருக்க வேண்டும்' என்றும் சொன்னார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று சொன்னார்.

'ஈதல் இசைபட வாழ்தல்
அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு'

உழைப்பால் பெற்ற செல்வத்தை ஏழைகளுக்கும், ஏன் எல்லோருக்கும் ஈந்து மகிழ்ந்தவர். இறுதியில் ஈவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை வந்ததும், தனது உயிரையே ஈந்துவிட்டார்.

ஏழையாகப் பிறந்தார். ஏழைகளுக்காக வாழ்ந்தார். ஏழையாக மறைந்தார்.

அவர் புகழ் இந்த மாநிலம் இருக்கும் மட்டும் மங்காது. மறையாது. நகைச்சுவை அரசின் நினைவு என்றும் நிலைத்து நிற்கும்.

வாழ்க கலைவாணர் என்.எஸ். கே. அவர்தம் புகழ்!

(11-8-78-ல் வானொலியில் ஆற்றிய உரை).

தமிழரசு
ஆண்டுச் சந்தா ரூ. 12
அரையாண்டுச் சந்தா ரூ 6
விவரங்களுக்கு :
சர்க்குலேசன் மேனேஜர், தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை—600 002.

திருநெல்வேலியில்

# சிறு உழவர் மேம்பாட்டுத்திட்டம்

—இராமஜெயராஜா, பி.எஸ்சி., (விவ)
தனி திட்ட அலுவலர்
திருநெல்வேலி.



"உழுவார் உலகத்தார்க்(கு)
ஆணி அஃது ஆற்று(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்ற குறளுக்கேற்ப உழவுத் தொழிலானது இவ்வுலகமாகிய தேருக்கு அச்சாணி போன்று அமைத்துள்ளது. எனவேதான் இதனை உயிர்த்தொழில் என்றும் கூட அழைப்பதுண்டு. மேலும், நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்ததும் இவ்வுழவுத் தொழில்தான்.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற உழவுத் தொழிலில் நமது நாட்டைப் பொறுத்தவரை ஈடுபட்டுள்ள்வர்கள் 70 சதவிகிதம் ஆவார்கள். ஆதலால், நமது நாட்டின் பொருளாதாரம் இந்த உழவுத் தொழில் வளர்ச்சியையே பெரும்பாலும் சார்ந்து நிற்கிறது நமது நாட்டினுடைய செல்வ வளர்ச்சியில் 53 சதவிகிதம் உழவுத் தொழில் இருந்துதான் கிடைக்கிறது. ஏனைய பகுதிதான் தொழில் வளர்ச்சியிலிருந்து கிடைக்கிறது. இவ்வாறு உழவுத் தொழில் நம்நாட்டில் சிறப்பும் மேன்மையும் பெற்று விளங்கினும் அதிக விளைச்சலும், அதிக வருவாயும் இவ்வாறு நலிந்த நிலைமையில்தான் காணப்பட்டு வந்தது. இத்தகைய நலிந்த நிலைமைக்குப் பல காரணங்கள் உண்டு. அக்காரணங்கள் எல்லாம் நீக்க இத்தொழிலை மேம்படுத்த பல திட்டங்களை அரசு வகுத்து செயல்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டது.

முதலில் திட்டங்கள் செயல்படுத்துவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியினர் (Reserve Bank of India) சிற்றூர்களில் (கிராமங்களில்) அனைத்திந்திய ஊரகக் கடன் வசதி (All India Rural Credit Society) ஆய்வு நடத்த உழவர்களை முக்கியமாக மூன்று வகையாகப் பிரித்தனர்.

| | |
|---|---|
| 1. மத்திய தர நிலையத்திலிருந்து பெருநிலையிலுள்ள உழவர்கள் | 7½ ஏக்கருக்கும் அதற்கு மேல் உள்ளவர்கள். |
| 2. சிறு நிலையிலிருந்து மத்திய தர நிலையிலுள்ளவர்கள் | 2½ ஏக்கர் முதல் 7½ ஏக்கர் வரை உள்ளவர்கள் |
| 3. மிகச்சிறு நிலையிலிருந்து சிறு நிலையிலுள்ளவர்கள் | 2½ ஏக்கருக்கும் அதற்கு கீழ் உள்ளவர்கள். |

இவ்வாறு வகைப்படுத்தி ஒவ்வொரு வகையிலும் எத்தனை சதவிகித உழவர்கள் அடங்கியுள்ளார்கள் என்றும் அந்தக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளனர்:

1. மத்தியதர நிலையிலிருந்து பெரு நிலையிலுள்ள உழவர்கள் 28.4%

2. சிறுநிலை முதல் மத்தியதர நிலையிலுள்ள உழவர்கள்-37.1%

3. மிகச்சிறு நிலையிலிருந்து சிறு நிலையிலுள்ள உழவர்கள்-34.5%



இப்புள்ளி விவரங்களிலிருந்து சிறு நிலை உழவர்கள். மத்தியநிலை உழவர்கள், வெகு சிறு நிலையிலுள்ள உழவர்கள் ஆகியவர்கள் எண்ணிக்கையின் அளவு அதிகம் என்பது தேற்றென விளங்கும். எனவே, இவர்களுடைய மேம்பாட்டின் அளவே உழவுத் தொழிலில் மேம்பாடு என்பது நன்கு அறிந்து கொள்ளலாம். அண்மையில் விஞ்ஞான ஆராய்ச்சியின் வாயிலாகக் கண்டுள்ள முடிவுகளை இத்தகைய உழவர்களும் மேற்கொண்டால்தான் மேற்கூறியபடி நலிந்துள்ள உழவுத் தொழில் சிறப்புப் பெறுவதோடு நாட்டினுடைய பொருளாதார

## தந்தை பெரியார் படங்களை அனுப்பிவைப்பீர்!

"பகுத்தறிவுத்தந்தை பெரியார் அவர்களின் இளமைப் பருவந்தொட்டு இறுதிவரையில் அவர்கள் கலந்து கொண்ட முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய நிழற்படங்களையும், அவர் முக்கிய தலைவர்களோடும், நண்பர்களோடும் சேர்ந்து காணப்படும் நிழற்படங்களையும், அவர் கைப்பட எழுதிய கடிதங்களையும் வைத்திருப்போர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அவை அவரவர்க்கு முறைப்படி பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பி வைக்கப்படும். பெரியார் அவர்களுக்குப் பரிசுகள் எங்கெங்கு எவ்வாறு வழங்கப்பட்டன என்பது குறித்தும், அவற்றின் விவரங்களையும் எழுதி அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்" என்று பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

*அனுப்ப வேண்டிய முகவரி :*

இயக்குநர்,<br>
செய்தித்துறை,<br>
(செயலாளர், பெரியார் நூற்றாண்டு<br>
விழாக் குழு)<br>
"தமிழரசு" அலுவலகம்,<br>
அரசினர் தோட்டம்,<br>
சென்னை-600 002.



வளத்தையும் பெருக்க நாட்டை வலுப்படுத்த முடியும். பொதுவாக உழவுத் தொழிலை மேம்படுத்த கீழ்க்கண்ட திட்டங்கள் நம் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன:

1. சட்டங்கள் மூலம் விவசாய சீர்திருத்தம் செய்தல்.

2. அ. தரிசு நிலங்களைப் பயன் படக்கூடியதாகச் செய்தல் (Reclamation of waste lands)

ஆ. மண்வளப் பாதுகாப்பு (Soil conservation)

இ. நீர்ப்பாசன வசதி அமைத்தல்.

ஈ. மானாவாரிச் சாகுபடி முறைகளை மேம்படுத்தல்.

உ. உயர்வகை விதைகளைப் பயன்படுத்துதல்.

ஊ. நன்கு பாதுகாக்கப்பட்ட உரங்களையும் இரசாயன உரங்களையும் பயன்படுத்தல்.

எ. உழைப்பை மிச்சப்படுத்திப் பயனை பெருக்கக்கூடிய உழவுக் கருவிகளைப் பயன் படுத்தல்.

ஏ. சீர்திருத்தப்பட்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுதல்.

ஐ. பூச்சி நோய்களை கட்டுப்படுத்துதல்.

3. குறைந்த செலவில் (Cheap credit) கடன் வசதி ஏற்பாடு செய்து கொடுத்தல்.

4. விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகளை அமைத்துக் கொடுத்தல். மேலும் போக்குவரத்து சாதன வசதிகளையும் அமைத்துக் கொடுத்தல்.

5. பால்பண்ணை, தோட்டத் தொழில் மேலும் கிராம கைத் தொழில் போன்ற உதவித் தொழில்கள் (Subsidiary occupation) ஏற்படுத்துதல்.

6. இவைகளை அடைய கூட்டுறவு போன்ற அடிப்படை நிறுவனங்கள் மூலம் ஈடுபடத் தூண்டுதல்.

இத்தகைய திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்த போதிலும்

"அருளில்லார்க்கு அவ்வுலகம்<br>
இல்லை<br>
பொருளில்லார்க்கு இவ்<br>
வுலகம் இல்லை"

என்ற வள்ளுவன் சொல்லுக்கிணங்க பொருள் வளம் குன்றிய அதிகப்படி எண்ணிக்கையில் காணப்படும் சிறு உழவர்களோ, மிகச் சிறு உழவர்களோ இத்திட்டங்களை மேற்கொண்டு பயனடைய முடியவில்லை. மாறாக பெருநிலையிலுள்ள மேற்கொண்டு பயனடைய முடியும் உழவர்களே இத்திட்டங்களின் பயனைப் பெறுவதற்கு வாய்ப்பிருந்தது. இவர்களின் எண்ணிக்கையின் அளவு சிறு உழவர்கள், மிகச்சிறு உழவர்களின் எண்ணிக்கையைவிட ஏற்கெனவே கூறியபடி குறைவுதான். ஆகவே, உழவுத் தொழில் முழு முன்னேற்றம் காணவேண்டுமென்றால் சிறு உழவர்களும் மிகச்சிறு உழவர்களும் இத்திட்டங்களின் பயனை அவசியம் பெற்றே ஆகவேண்டும்.

அத்துடன் ஒரு உண்மை என்னவென்றால் வாழ்க்கையும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தால் சிறு உழவர்களோ மிகச்சிறு உழவர்களோ தாங்கள் செய்யும் உழவுத் தொழிலில் அதிக ஆர்வம் காட்டி உற்பத்தியைப் பெருக்குகிறார்கள் என்பதுதான். அண்மையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு கூட இந்த உண்மைக்குச் சான்றாக அமைகிறது. இந்த உண்மையைக் கம்பநாடன்கூட தான் இயற்றிய "ராமகாதையில்" விளக்கி உள்ளார்கள்.

"எய்யன எழுபகை எங்கும்<br>
இன்மையால்<br>
மெய்பெருந் தினவுறு முழவுத்<br>
தோளினன்<br>
வையகம் முழுவதும் வறிஞன்<br>
ஓம்பும் ஓர்<br>
செய்யெனக் காத்தினிது அரசு<br>
செய்கின்றான்'

அதாவது, ஒரு சிறு நிலமுடைய உழவன் எவ்வாறு அந்நிலத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணிக் காப்பாற்றுவானோ அதுபோல தசரதன் தன் நாட்டைக் காப்பாற்றி அரசு செலுத்தினான் என்று பொருள்படும். ஆக சிறு உழவர்களுடைய மேம்பாட்டில் நாம் நல்லமுறையில் கருத்தை செலுத்த வேண்டும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இருக்க முடியாது. இதனைக்கருத்தில் கொண்டுதான் அரசு, இச்சிறு உழவர்களோ அல்லது மிகச்சிறு உழவர்களோ அல்லது உழவுத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களோ மேம்பாடு நிலை அடைய வேண்டுமெனக் கருதி சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தை 1971-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

**இழிவு எது ?**

**மனிதனுக்குள்ள இழிவு சமுதாயத்திற்குள்ள இழிவாகும். சமுதாயத்திற்குள்ள இழிவு நாட்டுக்குள்ள இழிவாகும்!**

—தந்தை பெரியார்

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஏற்கெனவே சொல்லப்பட்டது. விவசாய முன்னேற்றத் திட்டங்களுடன் பசு வளர்த்தல் போன்ற உதவித் தொழிலை நடத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான். இதன் பொருள் தடையாக இருக்கக் கூடாதென்றே! அதனால் இந்த பொருள் வசதியினைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ வணிக வங்கிகள் மூலமாகவோ கடன் வசதி ஏற்பாடு செய்து அக்கடனில் ஒரு பகுதியை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு கடன் பளுவை இத்தகைய விவசாயிகளுக்குக் குறைத்து அவர்கள் இத்திட்டங்களின் பயனை அடைய இந்தச் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் மூலமாக முயற்சி செய்யப்படுகிறது. கூட்டுறவு வங்கிகளோ அல்லது வணிக வங்கிகளோ விவசாயிகளுக்கு இந்தப் பொருளுதவியை கடனாகக் கொடுப்பதற்கு எந்தவிதத் தயக்கமின்றி முன்வருவதற்குத் தான் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகையை இந்தக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு ஆதரவு தொகையாக (Subd.) இம்மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இந்த ஆதரவுத் தொகை வழங்குவதற்கு முதற்கண் விவசாயிகளை 3 பகுதிகளாக அவர்களுடைய நில உடைமை அளவின் அடிப்படையில் வகுக்கப்பட்டு எந்தெந்த வகைகளுக்கு எந்தெந்த வகையில் உழவர்கள் அமைகிறார்களோ அந்தந்த வகை உழவர்களுக்குக் கொடுக்கும் கடனில் எவ்வளவு பகுதி இந்த ஆதரவு தொகை இந்தமேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வகைப்படுத்தும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே எவ்வாறு விவசாயிகளை வகைப்படுத்துவது கூறப்பட்டிருப்பினும் அதை இன்னும் தெளிவுபடுத்தும் வகையில் கீழே தரப்பட்டுள்ளது.

ஒரு வீடும், விவசாயத் தொழில் மூலம் வரக்கூடிய வருமானம் 60 சதவிகிதத்துக்கு மேலும் உள்ளவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

நஞ்சை நிலமானால் 1.25 ஏக்கருக்கு மேற்படாமலும், புஞ்சை நிலமானால் 2.50 ஏக்கருக்கு மேற்படாமலும் உள்ள உழவர்களை மிகச்சிறு விவசாயிகள் அல்லது விளிம்பு நிலைவிவசாயிகள் (Marginal Farmers) என வகுக்கப்பட்டுள்ளார்கள்.

குறிப்பு :

1. இத்தகைய விவசாயிகளுக்கு விவசாயம் தவிர வேறு தொழில்கள் மூலம் மாத வருவாய் 200.00-க்கு மேற்பட்டிருக்கக்கூடாது.

2. 2 ஏக்கர் புஞ்சை நிலம் 1 ஏக்கர் இறவை நிலத்திற்குச் சமம் என எடுத்துக் கொள்ளப்படும்.

உதாரணமாக ஒரு விவசாயிக்கு 2 அல்லது 3 ஏக்கர் புஞ்சையும் 1 ஏக்கர் நஞ்சையும் இருக்குமானால் அவர் ஒரு சிறு விவசாயியாகக் கருதப்படுவார். இக்கணக்குப்படி 3 ஏக்கர் புஞ்சையுடன் 1 ஏக்கர் நஞ்சை நிலம் இருந்தால் அதை 2 ஏக்கர் புஞ்சை எனக் கருதப்பட்டு மொத்தம் 5 ஏக்கர் புஞ்சை என எடுத்துக்கொண்டு அவர் சிறு விவசாயி என அறிவிக்கப்படுகிறார்.

இவ்வாறு கணக்கிட்டுக் கொள்வது அவசியம். இவ்வாறு வகுக்கப்பட்ட பின் அந்த அந்த வகுப்பு விவசாயிகளுக்குக் கீழ்க் கண்டவாறு மொத்தக் கடன் தொகையில் எந்த நிறுவனம் அதாவது கூட்டுறவுச் சங்கமோ அல்லது வணிக வங்கியோ கடன் வழங்குகிறதோ அந்தக் கடனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அளவு உதவித் தொகை வழங்கப்பட்டு அந்த உதவித் தொகை போக மீதியுள்ள தொகையே அந்தந்த விவசாயியின் கடனாக எடுத்துக் கொண்டு அந்த அளவு கடனையே விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குத் திருப்பிக் கட்ட வேண்டும்.

1. உழவுத் தொழிலாளர்களுக்கும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கும் வழங்கப்படும் மொத்த கடனில் 100-க்கு 33.33 விழுக்காடு (அதாவது 3-ல் 1 முழு உதவித் தொகையாக வழங்கப்படும்) உதாரணமாக, 300-க்குக் கடன் வழங்கினால் இதில் $\frac{1}{3}$ பகுதியாக ரூ. 100 உதவித் தொகையாக வழங்கப்பட்டு மீதியுள்ள 200 ரூபாய்க்கு இவர் கடனில் பற்று வைக்கப்பட்டு அதை அவர் உரிய வட்டியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குத் திருப்பிக் கட்ட வேண்டும்.

சிறு விவசாயிக்குக் கொடுக்கப்படும் கடனில் 100-க்கு 25 விழுக்காடு அதாவது $\frac{1}{4}$ பகுதி மொத்தக் கடனில் உதவித் தொகையாகக் கடன் வழங்கும் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு மீதியுள்ள தொகையை அவரது கடன் தொகையில் பற்று வைக்கப்படும். உதாரணமாக ரூ. 400 கடன் வழங்கப்பட்டால் இதில் $\frac{1}{4}$ பங்கு ரூ. 100 உதவித் தொகையாகச் சம்பந்தப்பட்ட கடன் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு மீதியுள்ள ரூ. 300 கடன் பற்று எழுதப்பட்டு அவர் திருப்பி உரிய வட்டியுடன் கட்ட வேண்டும். இவ்வாறு இத்தகைய உழவர் மேம்பாட்டிற்காகச் சிறு நீர்ப்பாசன சம்பந்தமாகக் கிணறு வெட்டுதல் கிணறுகளை ஆழப்படுத்துதல், நீரேற்றுக் குழாய்கள் அமைத்தல் (Pump set) போன்ற வகைகளுக்கும் விவசாய சம்பந்த மட்டில் மருந்தடிக்கும் கருவிகள் வழங்கல், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், விதை பூச்சி மருந்து உரம் வழங்கல், நிலங்களைச் சீர்திருத்த அமைத்தல், வண்டிகள் வாங்குதல், உழவு மாடுகள் வாங்குதல், உலோக தானிய குதிர்கள் வாங்குதல் போன்றவைகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றன. மேலும் கறவை மாடுகள் வழங்குதல் போன்றவைகளுக்குக் கூட்டுறவு மூலமாக அல்லது வணிக வங்கிகள் மூலமாகக் கடன் வசதி செய்து அவைகள் மூலம் மேற்கூறியவாறு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

முக்கியமாக கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் வணிக வங்கிகள் மூலமாகவும் 1 முதல் 5 ஆண்டுக் குட்பட்ட குறுகிய, மத்திய காலக் கடன்களும் கிணறு வெட்டுதல் போன்ற நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த நிலவளவங்கி மூலம் 5 ஆண்டுக்கு மேற்பட்ட நீண்ட காலக் கடன் வசதியும் ஏற்பாடு செய்யப்படுகிறது. எனவே, சிறு விவசாயிகள், விளம்புநிலை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் நன்கு தொடர்பு கொண்டு திருநெல்வேலியை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒத்துழைப்புடன் நல்ல பயனை அடைய இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# இரத்த அழுத்தமும் சிறு நீரகக் கோளாறுகளும்!

டாக்டர் எம். எஸ். அமரேசன்
பேராசிரியர்
சென்னை மருத்துவக் கல்லூரி

இரத்த அழுத்த நோயைப் (Hypertension) பற்றி எல்லோரும் அறிந்து இருக்கக்கூடும். இந் நோய் மொத்த மக்கள் தொகையில் 5 முதல் 20 சதவிகிதமாகப் பல நாடுகளில் வேறுபடுகிறது. இத்தகைய வேறுபட்ட சதவிகிதம் இப்பிரிவிலுள்ள மருத்துவ நிபுணர்களுக்கு முக்கியமானதாகப்படுகிறது. ஆனால், இந் நோயைப் பற்றிய கருத்துக்கள் சிலவற்றை மட்டும் மருத்துவத் துறை அல்லாத படித்தவர்களும் சாதாரண மனிதர்களும் அறிந்திருப்பதால், இதனைப் பற்றிய முக்கிய உண்மைக் கருத்துக்களை மட்டும் எடுத்துக் கூறினால் போதும்.

வயது வந்தவர்களுக்கு இந்த இரத்த அழுத்தம் 140/90 மி. மீட்டருக்கு மேல் இருந்தால் அதனை நாம் இரத்த அழுத்தம் (Blood Pressure) என்று கூறுகிறோம். இது குழந்தைகளுக்கு வயதுக்குத் தகுந்தபடி மாறுபடும். இருதயம் விரிவடையும்போது ஏற்படும் இரத்த அழுத்தமே (Diastolic Blood Pressure) இரத்த அழுத்தம் ஏற்படுவதன் காரணமாகும். ஆதலால், இதனைக் குறைப்பதே நமது முக்கிய நோக்கமாக அமைகிறது. இவ்விரத்த அழுத்தம் இரத்த அழுத்தமானி என்ற கருவியால் அளவிடப்படுகிறது. இரத்த அழுத்தத்தை இரண்டு முறைகளில் அளவிடலாம். (1) ஓய்வாக இருக்கும்போது; (2) வேலை செய்யும்போது அல்லது வேலை செய்த பின்பு. பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இருதயம் விரிவடையும்போது ஏற்படும் அழுத்தம் 100 மி. மீட்டராக இருக்கலாம்.

இரத்த அழுத்தத்தைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். இது, இருதயம் விரிவடையும்போது ஏற்படும் அழுத்தத்தைப் பொறுத்து இருக்கிறது. இவ்வழுத்தம் 90—109 மி.மீட்டராக இருந்தால் இதனை மிதமான இரத்த அழுத்தம் என்று கூறலாம். இவ்வழுத்தம் 129.மி. மீட்டராக இருந்தால் கட்டுக்கடங்கிய இரத்த அழுத்தம் எனலாம். இவ்வழுத்தம் 130 மி. மீட்டருக்கு மேல் இருந்தால் இதனைக் கடுமையான இரத்த அழுத்தம் என்று கூறலாம். இத்தகைய கடுமையான இரத்த அழுத்தம் உடையவர்களை மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சை அளித்தல் நன்மையாகும். சிறுநீரக நிபுணர் ( Nephrologist ) இத்தகைய நோயாளிகளைக் குணப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். இரத்த அழுத்தத்திற்குக் காரணமான சிறுநீரகக் கோளாறுகளையும், சிறுநீரக அழிவுகளையும் அவர்கள் கண்டு ஆராய்கிறார்கள்.

இவ்விரத்த அழுத்தம் இயல்பான நிலையில் இருக்கச் செய்யச் சிறுநீரகம் முக்கிய பங்கு வகிக்கிறது. உடலில் உள்ள பல திசு திரவங்களின் அளவுகளையும், தண்ணீர், சோடியம் போன்றவைகளின் இயல்பான அளவுகளையும் முறைப்படி வைத்திருப்பதற்கும் சிறுநீரகம் முக்கிய உறுப்பாகிறது. நம் உடல் 60 முதல் 70 சதவிகிதம் தண்ணீரும் சோடியமும் இயல்பான நிலையில் இருப்பதற்குச் சிறுநீரகம் முக்கிய காரணமாக அமைகிறது. இதோடு மட்டுமல்லாது அதிகமான இரத்த அழுத்தத்தை மட்டுமல்லாது அதிகமான இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கு வேண்டிய பல பொருட்களை ( Anti-hypertensive ) சிறுநீரகம் உற்பத்தி செய்கிறது. சிறுநீரகத்திற்குச் செல்லும் இரத்த அளவைக் குறைத்தால் சிறுநீரகம் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்துவதற்குரிய (Hypertensive substances) பொருட்களை உற்பத்தி செய்து, இரத்த அழுத்தத்தைப் பல மடங்கு அதிகப்படுத்துகிறது.

முன்பு இவ்விரத்த அழுத்தத்தின் காரணங்கள் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால், இன்றோ அறிவியலின் முன்னேற்றத்தாலும் உயிர் வேதியலின் மூலமும் பல புதுமையான கதிரியக்க முறையாலும், இரத்த அழுத்தத்தின் காரணத்தை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. நாற்பது வயதுக்குக் குறைந்தவர்க்கு இரத்த அழுத்தம் இருந்தால் கீழ்க்காணும் சிறுநீரக வியாதிகள் இரத்த அழுத்தத்திற்குக் காரணமாக அமையலாம்.

**சிறுநீரக வியாதிகள் :**

1. குறுகியகாலச் சிறுநீரக அணு அழற்சியும், அதனை ஒத்த நோய்களும் (2) நீண்டகாலச் சிறுநீரக அணு அழற்சி, (3) சிறுநீரகக் கீழ் அணு அழற்சி (4) நீர் கோத்த சிறுநீரகம் (5) பண் கூட்டுக்குழி சிறுநீரகம் (6) சிறுநீரக உருக்குநோய் (7) குழந்தை பிறந்த பிறகு ஏற்படும் இரத்த அழுத்தம் (8) சிறுநீரக இரத்தக் குழாய்களில் ஏற்படும் வியாதிகள் (சிறு நீரக இரத்தக் குழாய் அடைப்பு) (9) நாளமில்லாச் சுரப்பிகளின் வியாதிகள் முதலியன ஆகும்.

மேற்கூறியவற்றிலிருந்து இவ்வகையான இரத்த அழுத்தம் உண்டாவதற்குச் சிறுநீரகம் முக்கிய பங்காகிறது என்பது எளிதில் புலப்படும். காரணமே தெரியாத முதன்மையான இரத்த அழுத்தத்திற்கும் (Primary Hypertension) சிறுநீரகம் காரணமாக இருக்கலாம். இது சோடியம், தண்ணீர் அளவுகளின் வித்தியாசத்தாலும், புராசுடோகிளாண்டின் என்ற பொருள் குறைவதாலும், குறைவான கொழுப்புப் பொருள் உண்டாவதாலும், ரெனின், ஆன்ஜியோடென்சின் உற்பத்தி குறைவதாலும் சிறுநீரகத்திற்குள் இருக்கும் சோடியம், தண்ணீர் அளவுகளில் மாற்றம் ஏற்படுவதாலும் இத்தகைய அதிகமான இரத்த அழுத்தம் ஏற்படுகிறது எனலாம். கடுமையான இரத்த அழுத்தத்தைக் (Severe Hypertension) குணப்படுத்தவில்லை என்றால் சிறுநீரகமே (Kidney) முதலில் பாதிக்கப்படுகிறது. இத்தகைய காரணங்களால் சிறுநீரக நிபுணர்கள் இரத்த அழுத்தமுடையவர்களை ஆராய்வதிலும் அவர்களைக் குணப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்று கூறுவது மிகையாகாது.

ஒருவர் வேலையில் சேரும் போதும், 40 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பரிசோதிக்கும் போதும் இரத்த அழுத்தத்தை அளவிட வேண்டும். இதன் மூலம் இரத்த அழுத்தமுடையவர்களை எளிதில் கண்டறியலாம். இவர்கள் முக்கியமாக தலைவலி, மயக்கமான நிலை, பார்வைக் கோளாறு போன்றவற்றால் அவதிப்படுவார்கள். ஆதலால் மருத்துவரிடம் ஆலோசனை பெற வரும் ஒவ்வொருவருக்கும் இரத்த அழுத்தப் பரிசோதனை செய்வது நலம். இவ்வாறு நாட்டில் உள்ள எல்லோருக்கும் இரத்தப் பரிசோதனை நடத்துவதே இரத்த அழுத்தமுடையவர்களை அறிய ஒரு வழியாகும்.

இரத்த அழுத்தமுடையவர்களைக் கீழ்க்கண்ட முறைகளில் ஆராய வேண்டும். 1. சிறுநீர்ப் பரிசோதனை, 2. உயிர்வேதியல் பரிசோதனை (Bio-Chemical estimation) 3. புதுமையான ஐசோடோப் முறையில் சிறுநீரகத்தைக் காணும் முறை (Interavenous urogram I. V. P.) சிறுநீரக இரத்தக் குழாய்களைக் காணும் முறை (Renal Arterial Ingridgram) இந்த முறைகளின் மூலம் நாம் இரத்த அழுத்தத்தின் காரணத்தை எளிதில் அறிய முடியும். இவ்வாறு அறிந்தால், நோயின் காரணத்தை ஆரம்ப காலத்தில் குணப்படுத்த ஏதுவாகும். எடுத்துக்காட்டாக, இரண்டு சிறுநீரகத்தில் ஒரு சிறுநீரகம் வியாதிக்கு உட்பட்டிருந்தால் அதனை எடுத்துவிடுவதாலும் சிறுநீரக நோய்களை ஆரம்ப காலத்தில் கட்டுப்படுத்துவதாலும், குழந்தைப் பிறப்புக்குப் பிறகு ஏற்படும் சிறுநீரக அடைப்பு வியாதிகளைக் குணப்படுத்துவதாலும் இரத்த அழுத்தத்தை இயல்பான நிலைக்குக் கொண்டு வர இயலும்.

இவ்வாறு பலமுறைகளில் ஆராய்ந்து ஆரம்ப காலத்தில் குணப்படுத்தினால் இரத்த அழுத்த நோயின் அதிகரிப்பைத் தடுக்கலாம். இவ்வாறு குணப்படுத்துவதற்குரிய காரணத்தை அறிந்த பின் நோயாளிகளிடம் நோயைப் பற்றியும் இரத்த அழுத்தத்தைச் சீரான அளவில் வைத்திருக்க உதவும் முறைகளைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு இரத்த அழுத்தத்தைச் சீரான முறையில் வைத்திராவிட்டால் இருதயப்பாதிப்பும் மூளையிலுள்ள இரத்த நாளங்களின் பாதிப்பும் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்தல் அவசியம்.

இரத்த அழுத்த மாறுபாடுகளை அறிந்து வாரத்திற்கு ஒரு முறை அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை இரத்த அழுத்தத்தை அறிதல் வேண்டும். இவ்வாறு நாம் இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருந்தால் சில சமயங்களில் அதிகமான இரத்த அழுத்தமும் மருந்துகள் இல்லாமலேயே சீரான நிலையை வந்தடையும். கடுமையான இரத்த அழுத்தம் உடையவர்கள் மருந்துகளைச் சீராக உட்கொள்ளல் அவசியம். இவர்கள் தங்களுடைய இரத்த அழுத்த வேறுபாட்டை அறிந்து மருந்துகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நோயாளியின் இரத்த அழுத்தத்தைக் குணப்படுத்த முடியாத நிலையில் இருந்தால் நோயாளிகளுக்குத் தொந்தரவு அளிக்காத வகையில் அவர்களுடைய இரத்த அழுத்தத்தைப் பல்வேறு நிலைகளில் எடுக்க நோயாளியின் சுற்றத்தார்க்குக் கற்றுக்கொடுத்துவிடலாம். அவர்களுக்கு மருந்தையும் அதற்கேற்ற வகையில் மாற்றிக் கொடுக்கச் சொல்லிக் கற்றுக்கொடுக்கலாம். அப்போது நோயாளி, மருத்துவரை, மாதத்திற்கு ஒரு முறை வந்து பார்த்தால் போதுமானது. நோயாளியின் மனநிலையை அறிந்து சிகிச்சை செய்வது நலம். இப்பேர்ப்பட்ட நோயாளிகளுக்குச் சில சமயம் அவர்கள் உண்ணும் உணவில் கொழுப்புச் சத்துள்ள பொருள், உப்பின் அளவு இவற்றைக் குறைத்தோ, மாற்றியோ, கொடுத்தால் இரத்த அழுத்தம் மிதமான நிலைக்கு வரலாம்.

இந்நோயாளிகளுக்குக் குறைவான சக்தி அளிக்கும் உணவு வகைகளையும் உப்புப் பொருட்களையும் கொழுப்புப் பொருட்களையும் உணவாகக் கொடுக்க வேண்டும். இவையே இரத்த அழுத்தம் குறையக் காரணமாகும். எல்லா இரத்த அழுத்த நோயாளிகளும் குறைவான உப்பு எடுத்தல் என்பது அவசியமில்லாத ஒன்றாகும். சில சமயம் சிறுநீரக நோய் உடையவர்கள் சீரான உப்பும் அல்லது அதிகமான உப்பும் எடுத்தல் அவசியம்.

எனவே, இரத்த அழுத்தம் குணப்படுத்தக் கூடிய நோய் ஆகும். இதற்கு நோயாளியை நன்கு ஆராய்தல் அவசியம். சில சமயங்களில் இரத்த அழுத்தக் காரணத்தைக் குணப்படுத்த முடியவில்லை என்றால் நோயாளியை நல்ல நிலையில் (In comfort) இருக்கச் செய்தல் அவசியம். இதற்கு இரத்த அழுத்தப் பரிசோதனை முறை; நல்ல மலிவான மருந்தை எடுத்துக் கொள்ளும் முறை; உணவு உட்கொள்ளும் முறை, எடை சீராக வைத்திருக்கும் முறை போன்றவற்றைப் போதிப்பது அவசியம்.

இரத்த அழுத்தம் பல முக்கிய உறுப்புகளாகிய இருதயம், மூளை, சிறுநீரகம் போன்றவற்றைப் பாதிக்கும் என்பதை எல்லோரும் அறிய வேண்டும். எனவே, ஆரம்பக் காலத்தில் இரத்த அழுத்தத்தை அறிவதால், முக்கிய உறுப்புகளின் பாதிப்பைத் தடுப்பதோடுமன்றி இரத்த அழுத்த நோயாளியை நீண்ட காலம் நலமாக வாழ வைக்கவும் ஏதுவாகிறது.

*உலக சுகாதார நாள் விழா*

*மலரிலிருந்து*

# இந்தியாவில் டெலக்ஸ்

1978-ஆம் ஆண்டில் தபால் தந்தித் துறை எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் டெலக்ஸ் நிலையங்களின் திறனளவை அதிகரிப்பதன் மூலமும், புதிய டெலக்ஸ் நிலையங்களை திறப்பதன் மூலமும் நாட்டில் சுமார் 1,200 டெலக்ஸ் இணைப்புகளை அளிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.

1978 ஜனவரி முதல் தேதி நிலவரப்படி நாட்டில் 14,184 டெலக்ஸ் தொடர்பு இணைப்புக்களுடன் கூடிய 98 டெலக்ஸ் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய பொது டெலக்ஸ் அலுவலகங்கள் 32 இருக்கின்றன.

1977-78-ஆம் ஆண்டில், சர்வதேசத் தகவல் தொடர்பு சர்வீஸ் பம்பாயில் 27 நாடுகளுடன் நேரடியாக தொலைபேசித் தொடர்பு கொள்ளக்கூடிய தானியங்கி வசதியைச் செய்தது. இந்த டெலக்ஸ் எக்சேஞ்சு நூதனத் தகவல் தொடர்பு வசதியைக் கொண்டது. சர்வதேச டெலக்ஸுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த வசதி படிப்படியாக மற்றநாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படும். தற்போது 27 நாடுகளுடன் நாம் நேரடியாக டெலக்ஸ் தொடர்பு கொள்ள முடியும். மேலும் 168 நாடுகளுடன் ஒரு சுவிட்ச் மூலம் தொலை பேசித் தொடர்பு கொள்வதற்கான வசதியும் தற்போது உள்ளது

# வெண்பாலில் ஊடுருவிகள்

டாக்டர் கோ. அரங்கசாமி,
துணைவேந்தர்,
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.

இயற்கையில் நிறைந்துள்ள நுண்ணுயிர்கள், பல்வேறு வித மான தொழில் துறைகளில் முதன் மையாகப் பால் பண்ணைத் துறை உணவுத் துறை,'ஆண்டிபயாடிக்' போன்ற மருந்து உற்பத்தித் துறை, வைட்டமின்கள், அமினோ அமிலங்களைத் தயாரிக்கும் தொழில் துறை, மதுவகைகளைத் தயாரிக்கும் துறை ஆகியவற்றில் ஆற்றும் சிறப்பான செயல்கள் பற்றியும், அவற்றால் மக்களினம் பெறும் பயன்களைப் பற்றியும் சிறிது விரிவாகக் காண்போம்.

பாலில் புரதம் 3.25 விழுக்காடும், லேக்டோஸ் (பால் சர்க்கரை) 4.8 விழுக்காடும், கொழுப்புச்சத்து 3.8 விழுக்காடும், உப்புக்கள் 0.73 விழுக்காடும், நீர் 87.25 விழுக்காடும், வைட்டமின் 'ஏ', ரைபோபிளேவின், தயமின் முதலிய பல்வேறு வைட்டமின்களும் காணப்படுவதால், அது மக்களுக்கு ஒரு முழுமையான உணவுப் பொருளாகிறது.

நுண்ணுயிர்களுக்குத் தேவை எல்லாச் சத்துப் பொருள்களும், கனிமங்களும் அதிக அளவில் பாலில் இருப்பதால் அது நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சாதனமாகிறது. இயற்கையில் காற்றில், மண்ணில், நீரில் உள்ள பல நுண்ணுயிர்கள் பல்வேறு வழிகளில் பாலுடன் கலக்கின்றன. பால் கறக்கும் சமயத்தில் பாத்திரத்தின் மூலமும், நீரிலிருந்தும், காற்றிலிருந்தும் பல நுண்ணுயிர்கள் பாலில் கலக்கின்றன. பால் கறப்பவர்களும் இதற்குப் பல வழிகளில் பொறுப்பாவர். இவ்வாறு பாலில் கலக்கும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்றவாறு மாறுபடுகின்றது.

நல்ல முறையில் நல்வாழ்வுச் சூழ்நிலையில் கறந்து பாதுகாப்புடன் சேமித்து வைக்கப்படும் பாலில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் நுண்ணுயிர்கள் காணப்படுகின்றன. ஆனால், மிகச் சாதாரண முறையில் நல்வாழ்வு குறைந்த சூழ்நிலையில் சேமிக்கப்படும் பாலில் நுண்ணுயிர்கள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன.

பாலில் காணப்படும் நுண்ணுயிர்கள் மூன்று வகைப்படும். 1. சாதாரணமாகக் காணப்படும் லேக்டிக் அமிலம் தயாரிக்கும் நுண்ணுயிர்கள்; 2. பல்வேறு வழிகளில் வந்து சேர்ந்து பாலினைக் கெடுக்கக் கூடிய ஆனால், நோய்களை உண்டு பண்ணாத நுண்ணுயிர்கள், 3. மக்களுக்கும், விலங்குகளுக்கும் நோய்களை உண்டு பண்ணும் நுண்ணுயிர்கள்.

---

## துப்புரவுப் பணி

தோல் பதனிடுதல், பெருக்குதல், திறந்தவெளி கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல் போன்ற துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளோர் தாழ்த்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்குத் தரப்படும் சலுகைகளைப் பெற முடியாமல் இருந்து வருகின்றனர். இவர்களின் கல்வித் தரத்தை முன்னேற்ற இந்திய அரசு, 1977-78-ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் 500 பேருக்கு உயர்மெட்ரிக் உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தியது.

1978-79 ஆகிய நடப்பு ஆண்டிலும் மத்திய அரசு இத்திட்டத்தைத் தொடர்ந்து அமல்படுத்துகிறது. இதில் தமிழ்நாட்டிற்காக 20 உபகாரச் சம்பளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட எல்லா உயர்மெட்ரிக் ( Post-Matriculation ) அல்லது உயர் செகண்டரி ( Post-Secondary Courses ) வகுப்புகளில் படிப்பதற்கு இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

மாதத்திற்கு ரூ. 70லிருந்து ரூ. 125 வரை கல்விப் பிரிவிற்கு ஏற்றாற்போல் உபகாரச் சம்பளம் மாறுபட்டிருக்கும். நிர்வாகச் செலவு, கட்டணங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்விச் சுற்றுலாச் செலவினங்கள் ஆகியவை உள்ளிட்டதாக உபகாரச் சம்பளங்களின் மதிப்பு இருக்கும்.

பெற்றோர் அல்லது காப்பாளரின் மொத்த வருமானம் எல்லா வழிகளிலும் சேர்த்து மாதம் ரூ. 750-க்கு மேல் இருக்கக்கூடாது. இந்த உபகாரச் சம்பளத்திற்கான செலவுகள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலை வாழ் மக்கள் இயக்குநரின் தனி உதவியாளர் இந்த உபகாரச் சம்பளம் வழங்கும் அதிகாரியாவார்.

உபகாரச் சம்பளம் வழங்கப்படும் பல்வேறு கல்வி வகுப்புகள் பற்றிய முழு விவரங்களை அறிய, தாழ்த்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் நல இயக்குநரின் தனி உதவியாளர், சென்னை-5 என்ற முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டும்.

## 'கருணு' நெல்
## 'அஞ்சுகம்' பாசிப்பயறு
## பெயர் மாற்றம்.

"ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்படும் புதிய ரகங்களுக்கு அரசியல் தலைவர்களின் பெயர்களையும், தனிப்பட்டவர்களின் பெயர்களையும் சூட்டுவதில்லை என்று அரசு மேற்கொண்ட முடிவுக்கு ஏற்ப, "கருணு" என்ற நெல்லுக்கு "கோ. 33" என்றும், "அஞ்சுகம்" என்ற பாசிப்பயறுக்கு 'வைகாசி பச்சைப்பயறு' என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது".

இவ்வாறு தமிழக வேளாண்மை – நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

'ஸ்ட்ரெப்டோகாக்கஸ்' 'லியுகோனஸ்டாக்' போன்ற பாக்டீரியாக்கள் பால் சர்க்கரையைத் தாக்கி 'லேக்டிக்' அமிலமாக மாற்றுகின்றன. இவை மட்டுமின்றி 'லேக்டோபேசில்லஸ்' குழுவைச் சேர்ந்த பல்வேறு பாக்டீரியாக்கள் பாலில் மிகச் சாதாரணமாகக் காணப்படுகின்றன. இவையும் பாலினை 37 முதல் 50 செ. கி. வெப்பநிலையில் வைத்திருக்கும்பொழுது பால் சர்க்கரையைத் தாக்கி 'லேக்டிக்' அமிலமாக மாற்றுகின்றன.

கவனக்குறைவாக வைக்கப்படும் பாலில் 'மைக்ரோகாக்கை', ஸ்டெபைலோகாக்கை' போன்ற பாக்டீரியாக்கள் அதிகமாகக் காணப்படும். "எச்சரிரியா கோலி' போன்ற பாக்டீரியாவும் பாலில் காணப்படுகின்றன. இவை பாலில் மிக விரைவில் வளர்ந்து, கரிவளி, தீ நாற்றம் முதலியவற்றை ஏற்படுத்துவதால் இவை தீமை பயப்பன.

மற்றும், சில நுண்ணுயிர்கள் 'லேக்டிக்' அமிலம் தயாரிப்பதுடன் சில தீமைகளையும் விளைவிக்கின்றன. பாலிலுள்ள புரதச் சத்தாவது இவற்றினுல் தாக்கப்பட்டுக் கெட்டு விடுகின்றது. 'பேசில்லஸ் கிளாஸ்ட்ரிடியம்', 'புரோடியஸ்', 'சர்சினு' போன்ற பாக்டீரியாக்கள் இம்மாதிரி செயல்பட்டு, பாலைக் கெடுத்து விடுகின்றன. 'ஏரோபேக்டர்' 'ஏரோஜின்ஸ்' 'மைக்ரோகாக்கஸ்', 'ஸ்ட்ரெப்டோகாக்கஸ்' போன்ற பாக்டீரியாக்கள் பாலைத் திரிய வைக்கின்றன. இந்த வகைப் பாக்டீரியாக்கள் அவற்றின் ஊயிரணுக்களிலிருந்து கோந்து போன்ற பசைப்பொருள்களை வெளிப்படுத்துவதால் பால் நூல் போன்றதாகவும் மற்றும் கொழுப்பாகவும் மாறிவிடுகின்றது. மற்றும் 'பேசில்லஸ் சூடாமோனஸ்' போன்ற பாக்டீரியாக்கள் ஒரு சில நொதிகளை வெளிவிடும்போது அவை பாலிலுள்ள 'கேஸின்' என்னும் புரதச் சத்தை மாற்றித் தயிராக உறையச் செய்கின்றன. ஒரு சில நுண்ணுயிர்கள் பாலிலுள்ள கொழுப்புச் சத்தைத் தாக்கி, 'கிளிசிரால்' மற்றும் பல கொழுப்பு அமிலங்களாக மாற்றுகின்றன. அதனுல் பாலுக்கு ஒருவகைப் புளிப்புத் தன்மை உண்டாகின்றது. மேலும் 'செர்ரேஸியா மார்ஸஸன்ஸ்' என்னும் பாக்டீரியா பாலில் சிவப்பு வண்ணத்தை வெளியேற்றிப் பாலில் கரைத்து விடுவதால், பால் நிறம் மாறிக் கெட்டு விடுகிறது.

பாலைத் தொடர்ந்து சேமித்து வைத்தால் அதில் ஒரு சில குறிப்பிட்ட பாக்டீரியாக்கள் வளர்ச்சியடைகின்றன. குறிப்பாகக் குளிர்பதன அறைகளில் வைத்திருக்கும்பொழுது குளிர்ச்சியை விரும்பும் 'சைக்ரோபில்லிக்' பாக்டீரியாக்கள் அதிகமாகப் பாலில் வளர்ச்சியடைகின்றன. ஆனுல், மிக அதிக் வெப்பமான நிலையில் வைத்திருந்தால் (அதாவது 60' செ. கி. நிலையில்) வெப்பத்தை விரும்பும் 'தெர்மோபில்லிக்' பாக்டீரியாக்கள் வளர்ச்சியடைந்து பாலினைப் பாழ்படுத்தி விடுகின்றன. ஒருசில பாக்டீரியாக்கள் அதிக வெப்பத்தினையும் தாங்கி வளர்ச்சியடையக் கூடியவையாதலால், அந்தச் சூழ்நிலையில் பாலுக்கு மிகுதியான தீமை பயக்கத் தக்கன.

பல்வேறு விதமான நோய் உண்டு பண்ணும் நுண் கிருமிகளும், பாலின் மூலமாகப் பரவி, கடும் நோய்களை மக்களிடையே பரவச் செய்கின்றன. 'ட்யுபர்குலோசிஸ்' அல்லது எலும்புருக்கி நோய்,' புருலஸ்லோசிஸ்' என்னும் கருச்சிதைவு நோய், 'மாஸ்டைடிஸ்' அல்லது மடிவீக்கம் என்னும் நோய்கள் பாலின் மூலம் பரவுகின்றன. மற்றும் மக்களுக்கு வரும் நோய்களில் குறிப்பாக எலும்புருக்கி நோய். நலிவுக் காய்ச்சல், தொண்டைக் கட்டு, இரத்த பேதி ஆகியவற்றை ஏற்படுத்தும் நுண்கிருமிகள் பாலின் மூலம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவி மக்களுக்கு நோய்களை ஏற்படுத்துகின்றன.

நுண்ணுயிர்கள் பாலுடன் கலந்து தீமை பயப்பதைத் தடுப்பதற்குப் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. பால் மடியிலிருந்து வெளி வந்ததும் அதில் ஒரு மில்லியில் நூற்றுக்குக் குறைவான சில பாக்டீரியாக்கள் காணப்படுகின்றன. ஆனுல், அதே போல் இடங்கள் மாறி வீடுகளுக்குச் சென்று அங்குப் பயன்படுத்தப்படும் சமயம் ஒரு மில்லியில் பலகோடி பாக்டீரியாக்கள் இருக்கின்றன. சுற்றுப்புறச் சூழ்நிலையை மிகத் தூய்மையாகவும், நல்வாழ்வு முறையிலும் வைத்துக் கொண்டால் பாலில் காணப்படும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை மிகக் குறைந்த அளவுக்குக் கட்டுப்படுத்தலாம்.

'பாஸ்டுரைசேன்' என்னும் முறையாவது சாதாரணமாகக் காணப்படும் பாக்டீரியாவை அழிப்பதற்கு மிகச் சிறந்த முறையாகும். இம்முறையில் பாலை 143' டிகிரி எஃப் (62.6' சி) வெப்பத்தில் 30 நிமிடங்கள், அல்லது 161' எஃப் (62.6' சி) வெப்பத்தில் 30 நிமிடங்கள், அல்லது 161' எஃப் (71.6' சி) வெப்பத்தில் 15.30 விநாடிகள் வைத்திருந்தால் எலும்புருக்கி நோயினை ஏற்படுத்தும் மைகோபேக்டீரியம்' உட்படப் பலவிதமான பாக்டீரியாக்கள் அழிந்து விடும். ஆனுல், அதிக வெப்பத்தைத் தாங்கும் ஒரு சில பாக்டீரியாக்கள் மட்டும் அழிவதில்லை.

மற்றும், 'பாஸ்டுரைசேசன்' செய்யப்பட்ட பாலைத் தக்க பாதுகாப்பான, சிறிது குளிர்ச்சியான சூழ்நிலையில் வைத்திருந்தால் அவற்றின் எண்ணிக்கை அதிகமாவதில்லை. பாலும் விரைவில் கெட்டுப் போவதில்லை. 'பாஸ்டுரைசேசன்' செய்வதால் பாலிலுள்ள வைட்டமின் மற்றசத்துப் பொருள்களுக்கு ஒருவிதத் தீங்கும் ஏற்படுவதில்லை. பாலின் சுவையும் அதிகமாக மாறுவதில்லை. நுண்ணுயிர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து 'பாஸ்டுரைசேசன்' செய்யப்பட்ட பாலினை 'ஏ' பிரிவு 'பி' பிரிவு என்று தரம் பிரிக்கலாம். 'ஏ' பிரிவு பாலில் ஒரு மில்லியில் 20,000 பாக்டீரியாவுக்குக் குறைவாகவும், 'பி' பிரிவு பாலில் ஒரு மில்லியில் 50,000 பாக்டீரியாவுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என அறுதியிடப்பட்டுள்ளது.

*(சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வெளியிட்ட விழா மலரிலிருந்து).*




# கன்னியாகுமரி

டாக்டர் ஏ. என். பெருமாள்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

அழகால் அன்னியரையும் அருளால் இந்நாட்டவரையும் ஒருங்கு திரட்டி உவகை கூட்டும் கவின் மிக்க இடமாகக் கன்னியாகுமரி விளங்குகிறது. முக் கடலும் மோதி முழங்கிப் பாரதத் தாய், தமிழ்த் தாய், கன்னியாகுமரித் தாய் ஆகிய மூவரின் இணையடிகளை இன்பமுடன் பரவித் தழுவும் காட்சி கண்ணுக்கு விருந்தும், கருத்துக்கு எழுச்சியும் ஊட்டுவதாகும். பஃறுளியாற்றையும், பன்மலையடுக்கத்தையும் அன்று உண்டு கொதித்த கடல், இன்று மலைச் சிறுவர்களாகிய பாறைகளை அலைக் கரத்தால் அமுக்கிப் பிடித்துவிழுங்குவதையும் பின்னர் அவற்றைக் கக்கிக் களித்து கரையில் மோதுவதையும் கண்டு கண்டு சுவைக்கலாம். சில சமயம் பாறைகளை அமிழ்த்த முடியாமல் அவற்றின் தலையில் பாலைக் கொட்டுவதுபோல் தண்ணீரைக் கொட்டிப் பணிவதைப் பார்க்கலாம். பச்சைப் பாசி பரவியிருக்கும் பாறையின் உச்சந் தலையில் ஊற்றிய நீரால் ஏற்படும் பெருமை போன்று அதனைக் காண்போரின் தலையும் கருத்து நிறைவால் சிறந்து விளங்கும்.

மனிதனின் அறிவும் மாபெரும் உண்மையும் இணைவது போன்று தோன்றினும் இன்னும் விரிந்து பெருகும் இயல்பினை உடையது என்னும் அறிவினை இனிமையாக விளக்கும் இயற்கை அன்னையின் எழில் மிக்கக் கோலம் போன்று, அடி வானமும் அலை கடலும் ஒன்றையொன்று இணைவதாகத் தோற்றம் காட்டிச் சிறந்துள்ளன. கோண அமைப்பில் காணப்படும் கன்னியாகுமரி முனைப் பகுதியில் மூன்று கடல் அலைகளும் முட்டி மோதுவது கண்ணுக்கு இன்பம். படித் துறையில் பணிவாக இறங்கிப் பாய்ந்து வரும் அலையில் பாய்ந்து குளிப்பது உடலுக்கு இன்பம்.

காலை வேளையில் கதிரவனின் உதயக் காட்சி காண வேண்டிய இனிய காட்சி. புகைப்படக் கருவிகள் புதையலாகக் கருதும் நல்ல காட்சி. அதனைக் காணும் ஆவலில் காத்து நிற்கும் மக்களுக்கு எதிராகப் படரும் மேகக் கூட்டம் ஆயிரம் ஆயிரம் அன்பர்களின் சாபவுரையால் சல்லடையாகிச் சின்ன பின்னமாகச் சிதறிச் செல்வதையும் சில சமயம் பார்க்கலாம். பல கல் தொலைவிலிருந்து பார்க்க ஆவலுடன் வந்திருக்கும் மக்களை ஏமாற்றி விளையாடுவதில் இந்த மேகத்துக்கு என்னதான் இன்பம் கிடைக்கப் போகிறதோ தெரியவில்லை!

பூரணிமை நாளில் மாலைக் காலம் மிக்க மகிழ்வினைத் தரும் நல்ல காலம். மக்கள் கூட்டமும் மித மிஞ்சி இருக்கும். அன்று மேலக் கடலின் விளிம்பில் வீழும் ஞாயிறும் கீழக்கடலின் முகட்டில் முழுமையாக எழும் திங்களும் ஒரே சமயத்தில் நேர் எதிர் எதிராகத் தோன்றிச் சிறக்கும். காந்தி மண்டபத்தின் மேல் மாடியில் தெற்குப் புறத்தில் நின்று இந்தக் காட்சியைக்கண்டு சுவைப்பவர்களது கண் செய்த தவமே தவம்! இதேபோன்று அமாவாசை நாள் காலை நேரத்தில் உதிக்கும் சூரியனைச் சேர்ந்து சந்திர வட்டம் ஒளி மழுங்கித் தோன்றுவதைச் சில சமயம் பார்க்க முடியும். இது மிக மிக அரிய காட்சியாகும்.

கடலுக்குள் இணை பிரியா அக்காள் தங்கையாக இரண்டு பாறைகள் உள்ளன. அந்த இரட்டைப் பாறைகளில் பெரியது



விவேகானந்த சுவாமிகளுக்கு மன அமைதியையும் ஞானவொளியையும் ஊட்டிய இடமாகும். இரவோடுஇரவாக அவர் எப்படிக் கடலில் நீந்திப் பாறையை அடைந்து விட்டார் என்பது வியப்புக்குரியதாகும். மேலும், படியும் பிடியும் இல்லாத பாறையின் உய்ரே ஏறிவிட்டது வியப்பிலும் வியப்பான செயலாகும். அந்தப் பாறையில் இன்று மிகப் பெரும் அளவில் கவின் மிக்கக் காட்சியாக விவேகானந்தர் மண்டபம் கல்லால் கட்டப்பட்டு உள்ளது. கல்லைச் செதுக்கிக் கவின் கலையை வளர்க்கும்கலைஞர் பெருமக்கள் இன்றும் உள்ளனர் என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக அந்த மண்டபம் விளங்குகிறது. சுவாமியின் சிலை நடப்பட்டிருக்கும் நடுக் கூடம் கலையின் கொலுவிருப்பாகவே உள்ளது. விவேகானந்தர் பாறைகுச் செல்ல இப்பொழுது நல்ல முறையில் விசைப் படகு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், பயணிகள் தக்க முறையில் தங்குவதற்குத் தகுதியான அறைகளும் கட்டப்பட்டுள்ளன. புதுமையான கலைக் கோயிலாக விவேகானந்தர் மண்டபம் விளங்குகிறது.

பழமையின் கலைவண்ணத்தைக் குமரிப் பகவதியம்மன் கோயில் கவினுறத் தாங்கியுள்ளது. பதுமைகள் உயிர் ஓவியங்களாகவே உள்ளன. கல்லால் செய்யப்பட்ட ஒரு யாளியின் வாய்க்குள் கல்லுருண்டை ஒன்று உள்ளது. அதைப் பற்றி அறிந்தவர்கள் அனைவரும் சிற்பியை வியந்து செல்கின்றனர். ஆலயத்தின் கருவறையில் அன்னைக் கன்னியாகுமரி அருளுருவாய் அன்புத் தாயாய்க் காட்சி தருகிறாள். பன்மொழி பேசும் பலநாட்டுப் பக்தர்களும் இனிய இசை கேட்டதும் மேலுடுப்பை அகற்றி இடுப்பில் கட்டிக் கொண்டு பணிவன்புடன் பரவசமுற்று வணங்கி நிற்பது நற்காட்சியாகும்.

குமரியம்மன் கோயிலுக்கு மேற்கே அண்ணல் காந்தியடிகளின் நினைவு மண்டபம் வடக்கின் கலையை விளக்கிக் காட்டிப் பொலிந்துள்ளது. 1948 பிப்ரவரித் திங்கள் 12ஆம் நாள் அண்ணலின் அஸ்திக் கலசம் ஒரு மேடையில் வைக்கப்பட்டு பின் கடலில் கரைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அதே நாள் அந்த மேடையில் சூரிய ஒளி பட்டுச் சிதறும் நிலையில் மண்டபத்தில் துளைகள் இடப்பட்டுள்ளன. மண்டபத்துள் நின்று மகாத்மாவை மனமார நினைப்பவரின் உள்ளம் அமைதி நிறைந்து ஆறுதலடைவது உறுதி. ஆயினும் கண்கள் நீரால் நிறைந்துவிடும்.

ஆலயத்தின் தெற்குப் பகுதியில் விவேகானந்தரது சிலையும், ஆதிசங்கரர் சீடர்களுடன் அமர்ந்து இருக்கும் சிலைகளும் தனித் தனி மண்டபங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் காணும்போது உத்தமர்களுடன் உறவாடும் உள்ளவெழுச்சி ஏற்படுகிறது.

கடற்கரையில் வெள்ளை, சிவப்பு, கருப்பு, ஊதா, இளம் மஞ்சள் ஆகிய பல வண்ண மணல்கள் காணப்படுகின்றன. அவற்றைத் தனித் தனியாக எடுத்து விற்பனை செய்கிறார்கள். கன்னியாகுமரியிலிருந்து சுமார் 15 கல் தொலைவில் மேற்கே இருக்கும் மணவாளக் குறிச்சியில் 7 வகை மண்களை ஆலைகள் மூலம் பிரித்து எடுத்துவெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். குமரிக் கடற்கரை பலவிதமான சங்குகள் ஒதுங்கும் இடமாகும். அழகான கிளிஞ்சல்களைக் கவின் பெறும் மாலைகளாகக் கட்டிக் கடைகளில் விற்கின்றனர். அவற்றைவிரும்பி அதிக விலை கொடுத்து வாங்காத அன்னிய நாட்டினரே இல்லை என்று சொல்லலாம்.

கன்னியாகுமரியின் கிழக்குப் பக்கக் கடற்கரைப் பகுதியில் உயரமான ஊசிக் கோபுரத்தையுடைய மாதா கோயில் உள்ளது. அதன் உச்சியிலிருக்கும் தங்கக் கலவையுடைய சிலுவை மாலைக் காலத்து மஞ்சள் வெயிலில் தகதகவென மின்னி ஒளி வீசும். கோபுரம் ஏசு பெருமானின் பெருந் தியாகத்தின் உயர்வையும் பொற் சிலுவையின் ஒளிக் கதிர் அன்பின் அருட் சுடரொளியையும் குறித்துக் காட்டுகின்றன.

வடமேற்குப் பகுதியில் அன்பும் அருளும் நிறைந்த அல்லாவின் புனித இடமான அழகுக் கலை நிரம்பிய பள்ளி ஒன்று உள்ளது. அதைச் சுற்றிச் சூழ தென்னை மரங்கள் வீசும் தென்றலுக்கு இசைய, தங்கள் ஓலைக் கரங்களை ஆட்டி அசைந்து நடனமாடுவதைக் காணலாம்.

தூரக் கடல் தாண்டும் கலங்களுக்கு வழி காட்டி நிற்கும் கலங்கரை விளக்கம் வடக்கிலிருக்கும் தூரத்து மலைகளுக்கும் தோன்றிச் சிறப்பதாகும். நவீனக் காட்சியாக அது நின்று நிலவுகிறது. ரயிலில்லா ஊராயினும் விரைவில் ரயிலைக் காண வாய்ப்புடன் உள்ளது. தமிழ்நாட்டுத் தலைநகருடனும் மற்றும் முக்கிய நகர்களுடனும் விரைவுப் பேருந்தால் இணைக்கப்பட்டுள்ளது. கேரளத்தின் கோநகருடன் குமரிக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

பரந்த கடற்கரை; பரவசம் ஊட்டும் வெண் மணல்; தவழ்ந்து விளையாடும் தென்றல் காற்று; அத்தனையும் கூடி அனைவரையும் மகிழ்விக்கும். எங்கும் எதிலும் எழில் ததும்பிக் களிப்பதைக் கன்னியாகுமரியில் காணலாம். அன்பும் அருளும்நிறைந்த இடம். பாவம் போக்கிப் புனிதமடைய பல்லோர் குழுமும் பான்மையுடைய புண்ணியத் தலமாக அது விளங்குகிறது. உலக மக்கள் உவகையுடன் வந்து உள்ளத்தில் அமைதி பெற்றுத் திரும்புவதற்குத் தகுதியான இடமாகக் கண்ணுக்கு இனிய கன்னியாகுமரி விளங்குகிறது!

# விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளைவிக்கும் எதிரி—எலி



## எலித்தொல்லையை அறவே நீக்க ஒரே வழி ரோடாஃபாரின்

(ஆன்டிகோவாகுலண்ட்)




மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணம் எலிகளின் நாசவேலைதான். எலிகள் விவசாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல்லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவதால், அவை பயனற்றுப் போகின்றன. இந்நிலையில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலிகளை அறவே ஒழிக்க வல்ல ரோடாஃபாரினைத் தயாரித்திருக்கிறார்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல்லும் மருந்தல்ல. அதுவேலை செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறையாவண்ணம் செய்து, மெதுவாக ஆனால் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடாஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க்காமல், உட்கொண்ட மூன்றாம் நாளிலிருந்து இறக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலிகள் 24 மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன. ஆனால் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர்களாலோ, வளர்ப்புப் பிராணிகளாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளைவிக்காது.

ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலைத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக, லட்சத்தீவில் ரோடாஃபாரின் உதவியுடன் எலிகளை முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளைச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி. விவசாயிகளின் நண்பன்.

*உலகெங்கும் வார்ஃபாரின் என்ற மறுபெயர் கொண்டது.

**pci பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,**

28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னை 600 001. தொலைபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641 018. தொலைபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53, அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலைபேசி எண். 30440.

**pci பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்**

*சேமித்து வைத்திருக்கும் தானியங்களை பூச்சிபூண்டுகளின் தொல்லையிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க.*

எங்கும் கிடைக்கிறது.

FDS PCI 2750 TAM



# சத்துணவில் மீன்.




வெ. சுந்தரராஜ்

வெ. செல்வன்

வேளாண்மை அறிவியல் நிலையம்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,

பாண்டிச்சேரி.


மனித உணவு, நோய் நொடியின்றி நெடிது வாழ மனிதனின் உடல் வளத்துக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்புடைத்தாகச் சத்து நிறைந்து அமைதல் வேண்டும்.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட பசுமைப்புரட்சியால் உணவுப் பொருள் விளைவில் தன்னிறைவேயன்றி சத்துணவுப் பொருள் பெருக்கம் ஏற்பட்டதாகக் கூறவியலாது. மேலும், நம் நாட்டில் ஆண்டொன்றுக்கு 3 விழுக்காடாகப் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப சத்துணவுப் பொருட்களின் விளைவும் இருத்தல் வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து நீலப்புரட்சி ( Blue Revolution ), வெண்மைப் புரட்சி ( White Revolution ) ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. நீலப்புரட்சி என்பது மீன் வளம் பெருக மீன்துறையில் ஏற்பட்டு வருகின்ற வேகமான வளர்ச்சியைக் குறிக்கிறது.

மனிதனின் சக்திக்கும் வளர்ச்சிக்கும் சமவிகிதத்தில் சத்துணவு தேவை. சத்துணவில் புரதம் (Protein), மாவுப்பொருள் (Carbohydrate), கொழுப்பு (fat), தாதுச் சத்து ( Minerals ) ஆகியவை அடங்கியுள்ளன. இச்சத்துக்களோடு உயிர்ச் சத்துக்களும் (Vitamins) அவசியம் தேவை.



உடலில் ஏற்படும் பல்வேறு செயல்களும் செவ்வனே நடைபெற தாதுச் சத்துக்களோடு உயிர்ச்சத்துப் பெரிதும் துணை செய்கின்றது. முக்கிய உயிர்ச் சத்துக்களை 'அப்டெக்' (Abcduk) என்கின்ருேம். இளம்பிள்ளைகளுக்கு இவை எவ்வளவு முக்கியம் என்பதைப் பெற்ருேர் நன்கறிவர். உயிர்ச்சத்துக்களில் ஏதேனும் ஒன்று குறைவுபட்டாலும் அதனுல் பற்ருக்குறை நோய் ( Deficiency Disease ) ஏற்பட்டுவிடும். புரதம், கொழுப்பு, மாவுச் சத்துக்கள் குறைந்தால் உடல் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இந்திய மருத்துவத்துறையின் பரிந்துரைப்படி மனித உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதம், நமது அன்ருட உணவில் 55 கிராம் இருத்தல் வேண்டும். ஆனுல், அரிசியையும், கோதுமையையும் முக்கிய உணவாகக் கொள்ளும் பழக்கத்திளுல், நமது மக்கள் குறைந்த அளவுப் புரதத்தையே உட்கொள்கின்றனர். பற்ருக்குறை நோய்களுண்டாக, வற்ருத நமது பழக்கவழக்கங்களும் காரணமாயுள்ளன. மேலும், இறைச்சி, முட்டை, பால் போன்ற சத்துணவுப் பொருட்கள் தம் உணவில் இடம் பெருவண்ணம் மக்களின் வருமானம் குறைந்து காணப்படுதலும் நாள் தோறும் பெருகி வரும் மக்கள் தொகையில், உணவுப் பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவின்மையும் முக்கிய காரணங்கள் எனலாம். இவற்ருல் மக்களின் அன்ருட உணவில் சேர வேண்டிய புரதம் சேர முடிவதில்லை. வசதியுடையோர்தான் சத்துணவைச் சுவைக்க முடியும் என்ற நிலை நிலவுகின்றது.

மீனுணவில் தேவையான புரதம் உள்ளது. மீனின் விலையும் குறைவு. மீனை உணவில் அதிகம் பயன்படுத்திளுல் புரதப் பஞ்சத்தைப் போக்க முடியும். மீன், இறைச்சி, முட்டை மற்றும் பாலுக்கு இணையான அல்லது அதிகமான சத்துக்கள் அடங்கியுள்ளன. மீன்களைச் சிறு பிள்ளைகள் முதல் முதியோர் வரை அனைவரும் உணவாகக் கொள்ளலாம். மீனுணவு பிற மாமிச உணவுகளைப் போலன்றி எளிதில் செரிக்கக் கூடியது. மேலும், மீனின் புரதத்தில், அவசியமான பல அமினே அமிலங்கள் உள்ளனன.

மீன்களில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, சோடியம், பொட்டாசியம், மக்னீசியம் சல்பர் ஆகிய தாதுச் சத்துக்களும் உள்ளன. குறிப்பாகக் கடல் மீன்களில் அயோடின் ( Iodine ) அதிகமாகும். மீனிலிருந்து தயார் செய்யப்படும் அடர் புரதத்தில் ( Fish protein Concentrate) ஃப்ளோரின் (Florine) அதிகம். எண்ணெய்ச் சத்து நிறைந்த சார்டைன் (Oil Sodine) A மற்றும் D யும் அதிகமுள்ளன.

அனபாஸ் (Anabas testudimous) போன்ற மீன்களில் உயிர்ச்சத்து (Vitamins-C) அதிகமுள்ளது. ட்யூனு (Tuna), ஹேலிப்ட் (Halibut) போன்ற மீன்களில் உயிர்ச்சத்து D பெருமளவு உள்ளது. மீன்களின் ஈரலிலும், சினையிலும், உயிர்ச்சத்து 'B' அதிகம் காணப்படுகின்றது. பொதுவாக மீன்களில் உயிர்ச்சத்து ஏ, டி, பி காம்ப்ளெக்ஸ், பி-12 ஆகியவை மீனின் சதையிலும், சற்று அதிகமாக ஈரலிலும் காணப்படுகின்றன.

பல்வகை மீன்களின் (செதிள், வால், துடுப்பு, குடல் போன்ற) கழிவுகள் நீங்க மீன்களைப் பொறுத்து, 40 முதல் ஏறத்தாழ 90 சதம் வரையான பாகங்களை அப்படியே உணவுக்குப் பயன்படுத்த முடியும். சில நுண்ணிய மீன்களை அப்படியே முழுவதுமாக உணவுக்குப் பயன்படுத்தலாம். மீன்களில் 15-25 சதம் வரை புரதமும், 0.2 முதல் 19.4 சதம் கொழுப்பும், 13.9 சதம் வரை மாவுப் பொருள்களும் உள்ளன. மீன்களில் உள்ள குறைந்த அளவு மாவுச்சத்தும் (க்ளைக்கோஜன்-Glycogan) மீன்கள் இறந்ததும் லேக்டிக் அமிலமாக (Lactic Acid) மாறி விடுவதால் நாம் உண்ணும் மீனில் மாவுச்சத்து இருக்க முடியாது. எரிக்கும் சக்தி (Calory) (Caloric Value) 79 முதல் 413 வரையிலும் காணப்படுகின்றது. இரும்புச் சத்து 0.5 சதம் முதல் 6.8 சதம் வரையுள்ளது. வைட்டமின் 'சி' 0 முதல் 32 மி. கிராம் (Anabous testudimous) வரையுள்ளது. நமது அன்றாட உணவுப் பொருட்களின் சத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சத்துணவில் மீனின் பங்கு மிக முக்கியமானதென்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் விளங்கும்.

உணவுக்கு இவ்வளவு மீன் தேவை என்று கணக்கிட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதில்லை. மேலும், ஓரளவு வளர்ந்த மீன்களை மட்டும் பிடிப்பதும் இல்லை. இதனால் சிறிய மீன்களும் பிடிக்கப்பட்டு வீணாகி விடுகின்றன. நமது நாட்டு அண்மைக் கடலிலும், தூரக் கடலிலும் பெருமளவு மீன்களை நாம் பிடிக்க முடியாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ 16-18 இலட்சம் மெட்ரிக் டன் உள்ள மீன்களில் நாம் 2 மெட்ரிக் டன் மீன்களை மட்டுமே பிடிக்க முடிகின்றது.

மீனவர்களின் குப்பங்களில் அல்லது குப்பங்களின் அருகே தகுந்த குளிர்சாதன வசதி இன்மையால் மீன்கள் கெட்டுவிடாமல் பின்னர் விற்பதற்காக ஓரளவு மீன்களை மட்டும் உப்பிட்டும் (Salting), காயவைத்தும் (Sundrying), புகை போட்டும் (Smoking) மீனவர்கள் பக்குவம் செய்து கொள்கின்றனர். இவ்வகை ஏற்பாடுகளினாலும் மீன்களின் புரதத்தில் இழப்பு ஏற்படுவதுண்டு. எனவே, அளவோடு மீன் பிடித்து உடனே விநியோகித்தல் ஒரு 'புரதக் காப்பு' முறையாகும். வளர்ந்து கிடக்கும் மீன்கள் கடலில் செத்து வீணாகாமல் அவை அனைத்தையும் நவீன வசதிகளமைந்த மீன்பிடி கப்பல்கள் மூலம் பிடித்து நம் மக்களுக்கும் வேற்று நாட்டோருக்கும் தந்து நமது பொருளாதாரத்தையும் பலமுள்ளதாக்கலாம்.

ஆஸ்திரேலியா போன்ற நாட்டினர் நல்ல மீன்கள் கிடைக்காமல் நச்சுத் தன்மையுள்ள மீன்களைக் கூடப் பிடித்து, நஞ்சை நீக்கிப் பின்னர் உண்ணும் நிலையில் உள்ளனர். ஆனால், ஏறத்தாழ 4,667 கிலோ மீட்டர் கடற்கரையோடு விரிந்து, பரந்த கடலைப் பெற்ற நாம் பெருமளவு மீன்களைப் பிடிக்காமல் இருப்பதும், பிடித்தவற்றை உள்நாட்டு மக்களுக்குக் கொண்டு செல்லாமலிருப்பதும், சில வேளைகளில் வீணாக்குவதும் வருந்தத்தக்கது.

தமிழக அரசினரால் வாங்கப்பட்டுள்ள தஞ்சை, நெல்லை போன்ற மீன்பிடி கப்பல்களாலும், வசதிகளாலும் இனி அதிக மீன்கள் பிடிக்கவும், பிடித்த மீன்களை உடனடியாக விநியோகிக்கின்ற வாய்ப்புகள் பெருகியிருக்கின்றன.

மீனின் புரதம் வெப்பத்தாலும், காற்றின் ஈரப்பதத்தாலும் (Humidity) குறைந்து விடுகிறது. ஆகையால், மீன்களைப் பிடித்த சில மணி நேரங்களில் அவற்றைப் பயன்படுத்துவது அவசியமாகின்றது.

அதிக அளவில் கிடைக்கும் தரத்தில் குறைந்த மீன்களைக் கால்நடைகளுக்கும், கோழி, வாத்து போன்றவைகளுக்கும் உணவாகப் பயன்படுத்துவதோடு மீன் தூள் (Fish Flour), மீன் உணவு (Fish meal), மீன் உரம் (Fish manure) ஆகியவை தயாரிக்கவும் பயன்படுத்தலாம்.

மீனுணவில் (Fish meal) 88.4 சதம் புரதமும் உள்ளது. நமது நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் மீனுணவும் ஒன்றாகும். இணையற்ற புரதம் செறிந்த இவ்வுணவை, சற்று கவனத்தோடு மனித உபயோகத்திற்காகத் தயாரிக்கப்படும் மீன் மாவு (Fish flour) என்கின்றோம். மீன் மாவை, 3-4 வயதுக் குழந்தைகளும் ஏற்றுக்கொள்ளும். இதனை, ரொட்டி, பிஸ்கட், கேக், கூழ் போன்றவற்றோடு சேர்த்துச் சத்துணவாய்ச் செய்து சாப்பிடலாம்.

மீன்களிலிருந்து மீன் எண்ணெய் (Fish oil), அடர் புரதம் (Fish Protein Concentrate) ஆகியவையும் தயாரிக்கலாம்.





ஈரலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை லிவர் ஆயில் (Liver oil) அல்லது ஈரல் எண்ணெய் என்கிறோம். லிவர் ஆயிலில் வைட்டமின் 'A'யும், 'D'யும் அதிகம் இருப்பதனால் இதனை மருந்தாகக் குழந்தைகளுக்கும் 'ரிக்கெட்ஸ்' மற்றும் எலும்புருக்கி நோய் உள்ளோர்க்கு மருந்தாகவும் தரலாம்.

அடர் புரதத்தில் 'C' யும், 'P' யும், தாதுப்பொருட்களும் உள்ளன. கோதுமை போன்ற உணவுப் பொருட்களோடு மீனின் அடர் புரதத்தையும்

சேர்த்துச் சாப்பிடுவோமானல் பெருமளவு புரதம் உடலோடு சேரும். உதாரணமாக, கோதுமை உணவை மட்டும் ஒருவன் உட்கொள்வானேயானல் கோதுமையின் புரதத்தில் 50 சதம் மட்டுமே உடலோடு சேர்கின்றது. ஆனல், 3 சதம் மீனின் அடர் புரதத்தையும், கோதுமையோடு சேர்த்துச் சாப்பிடுவானேயானல் 67.2 சதம் உடலோடு புரதம் சேர்வது குறிப்பிடத்தக்கதாகும்.

நமக்குத் தேவையான அளவு மீன்களைப் பெற கடலில் கிடைக்கும் மீன்கள் மட்டும் போதுமானதல்ல. எனவே, ஆறு, ஏரி, குளம், குட்டைகளிலும், கழிவு நீர்க் குளங்களிலும் தீவிர முறையில் வேகமாக வளரும் பலவகை மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இம்முறையில் மீன் வளர்ப்பதால் ஆண்டொன்றுக்கு ஓர் எக்டர் நீர்ப்பரப்பிலிருந்து 9,000 கிலோ மீன்கள் வரை உற்பத்தி செய்ய முடியும்.

### அன்றாட உணவுப் பண்டங்களின் சத்துப் பொருட்கள்

| | பொருள் | ஈரம் Moisture % | புரதம் Protein % | கொழுப்பு Fat % | மாவுப் பொருள் Carbo-hydrate % | கால்சியம் Calcium (Mg/100 gm) | பாஸ்பரஸ் Phas pharaus (Mg/100 gm.) | இரும்பு Iron Mg/100 gm.) | தாதுப் பொருட்கள் | எரிக்கும் சக்தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கடல் மீன் | ...69.26-89.30 | 9.05-26.10 | 0.50 9.64 | ... | 71.40 11.50 | 13.30 663.70 | 1.25 10.14 | ... ... | ... ... |
| 2. | நன்னீர் மீன் | ...53.7-...82.0 | 13.7-25.2 | 0.6-19.4 | ... | 130-790 | 120-650 | 0.42-226 | ... | ... |
| 3. | பசும் பால் | ...87.5 | 3.2 | 4.1 | 4.4 | 120 | 90 | 0.2 | 0.8 | 67 |
| 4. | கோழிமுட்டை | ...73.7 | 13.3 | 13.3 | ... | 60 | 220 | 2.1 | 1.0 | 173 |
| 5. | வாத்து முட்டை | ...71.0 | 13.5 | 13.7 | 0.8 | 70 | 260 | 3.0 | 1.0 | 181 |
| 6. | இறைச்சி | ...71.5 | 18.5 | 13.3 | ... | 150 | 150 | 2.5 | 1.3 | 194 |
| 7. | கோழி | ...72.2 | 25.9 | 0.6 | ... | 25 | 245 | ... | 1.3 | 109 |
| 8. | பன்றி | ...77.4 | 18.7 | 4.4 | ... | 30 | 200 | 2.2 | 1.0 | 114 |
| 9. | வாத்து | ...72.3 | 21.6 | 4.8 | 0.1 | 4 | 235 | ... | 1.2 | 130 |
| 10. | அரிசி (பச்சை) | ...13.7 | 6.8 | 0.5 | 78.2 | 10 | 160 | 3.1 | 0.6 | 345 |
| 11. | அரிசி (புழுங்கல்) | ...13.3 | 6.4 | 0.4 | 79.0 | 9 | 143 | 4.0 | 0.7 | 346 |
| 12. | கோதுமை | ...12.8 | 11.8 | 1.5 | 71.2 | 41 | 306 | 4.9 | 1.5 | 346 |
| 13. | உளுந்து | ...10.9 | 24.0 | 1.4 | 59.6 | 154 | 385 | 9.1 | 3.2 | 347 |
| 14. | துவரம் பருப்பு | ...13.4 | 22.3 | 1.7 | 57.6 | 73 | 304 | 5.8 | 3.5 | 335 |

நன்னீர்ப் பரப்பு தவிர கடலோரப் பகுதிகளில் 14 இலட்சம் எக்டர் சதுப்பு நிலங்கள் நமது நாட்டில் உள்ளன. இப்பகுதிகள் மீன் வளர்ப்புக்கு மிகவும் ஏற்றவை. இவற்றில் தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 80,000 எக்டர் பரப்பளவு உள்ளது. நமது நாட்டின் சதுப்பு நிலப் பகுதிகளும் மீன் வளர்ப்புக்குள் கொண்டு வரப்படும்போது கூடுதலாக 31 இலட்சம் டன் மீன்கள் உற்பத்தி செய்ய முடியும் என்றும் ஏறத்தாழ 28 இலட்சம் (28,40,000) பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

வேளாண்மையே முக்கிய தொழிலாகக் கொண்ட நம் முன்னோர் வேளாண்குடி மக்கள், இலாபம் தரும் தொழிலான மீன் வளர்ப்பையும் ஒரு துணைத் தொழிலாக மேற்கொள்வார்களேயானல், உடல் ஆரோக்கியத்திலும், வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் அவர்கள் வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை!







மகளிர் அரங்கம்

# உங்கள் குழந்தைகளை மகிழ்விக்க...

ஜி. மணிமேகலை
உணவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்
பல்கலைக் கழகம்
கோவை-3.

மாலையில் பள்ளியிலிருந்து உங்கள் குழந்தைகள் களைத்துப் போய் பசியோடு வீடு திரும்புகிறார்கள்! அவர்களுக்கு வேண்டிய உணவு அளித்து-அவர்களுடைய களைப்பைப் போக்குவதில் பெற்றெடுத்த அன்னையருக்குத்தான் எவ்வளவு அக்கறை! பலகாரங்கள் தயார் செய்து 'ரெடி'யாக வைத்துக் கொண்டு குழந்தைகளை வரவேற்கிறாள் தாய்! இது ஒவ்வொரு வீட்டிலும் நாம் காணும் அன்றாடக் காட்சியல்லவா?

பள்ளிகளிலிருந்து வீடு திரும்பும் உங்கள் குழந்தைகளின் பசி தீர்க்க வேண்டி பால், காப்பி, டீ போன்ற பானங்களையும், ரொட்டி, பிஸ்கட், முறுக்கு, பழம் போன்ற உணவுப் பண்டங்களையும் கொடுத்து நாம் மகிழ்கிறோம்! குழந்தைகள் பெரிதும் விரும்பி உண்ணும் பிஸ்கட்டுகளை ஏன் நம் வீட்டிலேயே தயார் செய்யக்கூடாது? மிகவும் சுலபமாக பிஸ்கட் வகைகளைத் தயார் செய்யலாமே!

**பிஸ்கட் :**

மைதா—100 கிராம்

பால்பவுடர்—10 கிராம்.

சர்க்கரை—15 கிராம்.

பேக்கிங் சோடா—½ தேக்கரண்டி

டால்டா—45 கிராம்.

வெண்ணிலா எசன்ஸ்—2 துளிகள்

மைதா மாவுடன் சோடா உப்பும் சேர்த்து இரண்டு முறை சலித்துக் கொள்ளவும். பின்னர் சர்க்கரை (பொடி செய்தது) பால்பவுடர் சேர்த்து டால்டாவையும் உடன் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். சப்பாத்திக்கு மாவு தேய்ப்பதுபோல் செய்து கொண்டு வேண்டுமான வடிவத்தில் வெட்டி எடுத்து பிஸ்கட் சுடும் ( Baking Ovan ) அடுப்பில் வைத்து கேஸ் அடுப்பில் அல்லது ஸ்டவ்வில் வைத்து பிஸ்கட் வேக வைக்கவும்.

குழந்தைகளின் விருப்பத்துக்குத் தக்கவாறும், நாம் செய்யும் பிஸ்கட்டின் உணவுச் சத்தை அதிகரிக்கவும், கொட்டை வகைகள் (நிலக்கடலை, முந்திரி) எள், ஜாம், கிரீம் போன்றவற்றையும் உடன் சேர்த்துப் பல வகையான சுவைமிக்க பிஸ்கட்கள் தயார் செய்யலாம்.

**ஸ்பைசீ பிஸ்கட் :**
(Spicy Biscuit) :

மைதா—100 கிராம்.

சர்க்கரை—5 கிராம்.

உப்பு—5 கிராம்.

மிளகாய்ப் பொடி—250 மி.கி.

சீரகம் பொடி—250 மி.கி.

சீரகம்—மணத்துக்கு ஏற்றவாறு.

டால்டா—45 கிராம்.

பேக்கிங் சோடா—½ தேக்கரண்டி

மாவைப் பிசைந்து கொண்டு மேலே சொன்னது போலச் செய்யவும்.

**எள் பிஸ்கட் :**

மைதா—100 கிராம்.

வறுத்து பொடி செய்த எள் —20 கி.

சர்க்கரை—20 கிராம்.

டால்டா—45 கிராம்.

பேக்கிங் பவுடர்—½ தேக்கரண்டி

இதனுடன் வேண்டுமானால் வறுத்து பொடி செய்த நிலக்கடலை (1 மேஜைக்கரண்டி) சேர்த்துக் கொள்ளலாம். பின்னர், மேலே சொன்னது போலச் செய்யவும்.

**உப்பு பிஸ்கட் :**

மைதா—100 கிராம்.

சர்க்கரை—5 கிராம்.

உப்பு—5 கிராம்.

டால்டா—45 கிராம்.

பேக்கிங் சோடா—½ தேக்கரண்டி

வெண்ணிலா எசன்ஸ்—2 துளிகள்

மாவைப் பிசைந்து கொண்டு பிஸ்கட் செய்வது போலச் செய்யவும்.

**கிரீம் பிஸ்கட் :**

சர்க்கரைப் பொடியுடன் வெண்ணெய் சேர்த்து நன்றாகக் கலக்கிக் கொள்ளவும். வேண்டுமானால் கலர் பவுடரும், எசன்ஸையும் சேர்த்து நன்றாகக் கலக்கிக் கொள்ளவும். ஒரு பிஸ்கட்டின் மேற்புறம் கிரீமைத் தடவவும். அதன்மீது மற்றொரு பிஸ்கட்டின் மேற்புறத்தைச் சேர்க்கவும். அதாவது இரண்டும் பிஸ்கட்களை கிரீமின் உதவியுடன் சேர்க்கலாம். கிரீம் தயார் செய்யும்போது லேசாக வறுத்துப் பொடி செய்த முந்திரி பருப்பையும் சேர்த்துக் கொள்ளவும். கிரீம் உபயோகிப்பது போல நிலக்கடலை வெண்ணெய்யையும் பயன்படுத்தலாம்.

**ஜாம் பிஸ்கட் :**

கிரீம் உபயோகிப்பதற்குப் பதிலாக பிஸ்கட்டில் 'ஜாம்' வைத்துக் கொடுக்கலாம். அன்னாசிபழ ஜாம், பலவகைப் பழங்கள் கொண்டு தயார் செய்த ஜாம். ( Mixed Fruit Jam ) ஆரஞ்சு மார்மலேடு போன்றவற்றை உபயோகித்தால் குழந்தைகள் மிகவும் விரும்பி உண்ணுவார்கள்.

கோதுமையிலிருந்து (மைதா) தயார் செய்யப்பட்ட பிஸ்கட்டுடன் பழ ஜாம், கிரீம், முந்திரி பருப்பு போன்றவற்றைச் சேர்த்துக் கொடுக்கும்போது புரதத்துடன் வைட்டமினும், தாது உப்பும் கலோரியும் கிடைக்கும்.



# நெற்பயிரில் காணப்படும் புதியநோய்கள் — தடுப்பு முறைகள்

டாக்டர் எம். என். அழகியநாகலிங்கம்,
சி. எல். சுப்பிரமணியன்,
ஆர். மோகன்.
தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரி
ஆராய்ச்சி நிலையம், மதுரை.



தமிழ்நாட்டில் நெற்பயிர் சுமார் 2,250,000 எக்டேர் நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. சராசரியாக ஓர் எக்டேருக்கு நெல்லின் மகசூல் 1.85 டன்களே கிடைக்கின்றன. கீழை நாடுகளான ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளை ஒப்பிடும்பொழுது இந்த மகசூல் மிகமிகக் குறைவானதேயாகும். இதற்குக் காரணம், நம் விவசாயப் பெருமக்கள் நோய்க்கு இலக்காகும் புதிய நெல் ரகங்களில் போதிய பயிர்ப் பாதுகாப்பு குறித்த தருணத்தில் செய்யாததேயாகும்.

நவீன விவசாயத்தில் பயிர்ப் பாதுகாப்பு என்பது ஒரு இன்றியமையாததொன்றாகும். நெற்பயிர் பல்நோய்களினாலும் பூச்சிகளினாலும் தாக்கப்படுகிறது. ஏற்கெனவே, தமிழ்நாட்டில் நிலவிவரும் நெற்பயிர் நோய்களான குலைநோய், செம்புள்ளி நோய் போன்றவை தவிர தற்பொழுது புதிய சில நோய்களும் தோன்றியுள்ளன. அவற்றின் அறிகுறிகளையும், கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் கீழே காண்போம்:

**நெல் உறை அழுகல் நோய் (Paddy Sheath Rot):**

இது ஒரு பூசணநோய். இந்நோய் தமிழ்நாட்டிலும் அதன் அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மேலும் மேற்கு வங்கத்தில் முதன் முதலாக 1973-ஆம் ஆண்டு தோன்றி தீவிரமடைந்தது. இந்நோயின் அறிகுறி, நெற்கதிர் வெளிவரும்பொழுது நன்கு காணப்படும். நோய், இளம் கதிரைச் சுற்றியுள்ள உறையில், முதலில் சிறு கரும்புள்ளி வடிவத்தில் தோன்றி பின்னர் பெரிதாகி உறை முழுவதற்கும் பரவுகிறது. இவ்வாறு தாக்கப்பட்ட உறையிலிருந்து நெற்கதிர் வெளிப்படுவதில்லை. அல்லது பாதி கதிரே வெளிப்படுகிறது. நோயானது நாளடைவில் பரவி உள்ளிருக்கும் கதிரையும் அழுகச் செய்கின்றது. எனவேதான், இதற்கு 'உறை அழுகல்நோய்' எனப் பெயரிடப்படுகின்றது. நன்கு நோய் தாக்கிய கதிர்களில் பால்பிடிப்பது இல்லை. மேலும், அவை கருமை நிறமாக மாறிவிடுகின்றன.

இந்நோய் தாக்குதலினால் தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் சுமார் 60 சதவிகிதம் மகசூல் குறைந்துள்ளது என ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகின்றது. இந்நோய் எல்லாக் காலங்களிலும் நெற் பயிரில் காணப்படினும், நவம்பர் முதல் ஏப்ரல் வரை இவை கடுமையாக நெற் பயிரைத் தாக்குகின்றன. ஐ. ஆர். 8, 20, 22, கண்ணகி, மேலும் கோ. 39 போன்ற நெல் ரகங்கள் இந்நோயினால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. பவானி, ஏ. டி. டி. 10 போன்ற சில நெல் ரகங்கள் இந்நோய்க்கு எதிர்ப்புச் சக்தி கொண்டுள்ளன.

எனவே, உறை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த நோயெதிர்ப்புத் திறன் கொண்ட நெல் ரகங்களையே பயிரிட வேண்டும். விதைகளை விதைக்கும் பொழுது விதை நேர்த்தி செய்ய வேண்டும். நல்ல விதைகளை, அக்ரசான் அல்லது செரசான் மருந்துடன் 2 கிராம் மருந்தை ஒரு கிலோ விதையுடன் கலந்த பின் விதைக்கவேண்டும். தழைச் சத்து அதிகமாக இடுவது நோய் மேலும் தீவிரமடைவதற்கு ஏதுவாக அமைவதால், குறிப்பிட்ட உர அளவு விகிதத்தைப் பின் பற்றுவது நலம். வயலில் காணப்படும் இந்நோயை ஊடுருவிப் பாயும் பூசணக் கொல்லி மருந்தான பேவிஸ்டின் (0.1 சதவிகிதம்) அல்லது கினோசான் (250 மில்லி) அல்ல டைதேன் எம்.45 (0.2 சதவிகிதம்) மருந்து கொண்டு கதிர் தோன்றும்போது குறைந்தது 15 நாட்களுக்கு ஒரு முறை இருமுறைகளாவது தெளித்தால் நோய் நன்கு கட்டுப்படும் என்று ஆய்வின் மூலம் தெரிகின்றது.

அட்டவணை-1

| பூசண மருந்து | உறை அழுகல் நோய் பூசண வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்ட அளவு சதவிகிதத்தில் |
|---|---|
| பேவிஸ்டின் (0.1) | 72.00 |
| டைதேன் எம். 45 (0.2) ... | 66.66 |
| கினோசான் (250 மில்லி/ ஏக்கர் ... | 64.00 |
| டெரோசால் (0.2). | 58.63 |

**இலையுறைக் கருகல் நோய் (Sheath blight):**

இதுவும் ஒரு பூசண நோயாகும். இந்நோய் தமிழ்நாட்டிலும் அதன் அண்டை மாநிலங்களிலும் 1921-ஆம் ஆண்டு முதல் நெற்பயிரைத் தாக்கி வருகிறது. ஏடிடி. 31, கருணா போன்ற நெல் ரகங்கள் மதுரை மாவட்டத்தில், 1977-ஆம் ஆண்டு கடுமையாக இந்

நோயினுல் தாக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பெரும் இழப்பை விளைவித்தன.

இந்நோயின் அறிகுறியாக, நீள் வட்டவடிவ சாம்பல் நிறமான புள்ளிகள் அடித்தண்டைச் சுற்றியுள்ள இலையுறையில் (Sheath) தோன்றும். நோய் மேலும் பரவி எல்லா இலை உறைகளையும் தாக்கி தண்டுப்பகுதியையும் அழுக வைக்கின்றது. இதன் காரணமாக இலைகள் பழுப்பு நிறம் அடைந்து, காய்ந்து கீழ் நோக்கித் தொங்க ஆரம்பிக்கின்றன. காய்ந்த தோகைகளில் எண்ணற்ற கடுகு போன்ற கருமையான "இழை முடிச்சுகள்" காணப்படும். இவை யாவும் பூசணத்தின் வித்துகள் ஆகும். இளம் பயிரிலேயே இந்நோய் தாக்குமாயின், செடி கருகி மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படும். இந்நோய் உறை அழுகல் நோய் தாக்கும் எல்லா நெல் ரகங்களையும் பெரும்பாலும் தாக்குகின்றன.

இந்நோயைக் கட்டுப்படுத்த முன் கூறியது போல நோயெதிர்ப்புச் சக்தி கொண்ட நெல் ரகங்களைப் பயிரிடுதல், விதை நேர்த்தி செய்தல் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். பொதுவாக, வடிகால் வசதியற்ற வயல்களில் இந்நோய் மிக எளிதாகப் பரவுகின்றது. எனவே, நோய் கண்ட வயல்களில் தண்ணீரை வடித்து கினோசான் ஓர் ஏக்கருக்கு 250 மில்லி என்ற விகிதத்தில் செடியின் தண்டுப்பகுதி நன்கு நனையும்படி தெளித்தால் நோய் நன்கு கட்டுப்படும்.

**பாக்டீரியா இலைக்கருகல் நோய் (Bacterial leaf blight):**

இது ஒரு பாக்டீரியா என்ற நுண்கிருமியால் உண்டாகும் நோயாகும். இது தமிழ்நாட்டில் 1962-ஆம் ஆண்டு தோன்றி இன்றுவரை கடுமையான சேதத்தை விளைவித்து வருகின்றது. தமிழ்நாட்டில் இந்நோய் 60 சதவிகிதம் மகசூல் நஷ்டத்தை விளைவிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

இந்நோயின் அறிகுறியாக முதன் முதலில் மங்கிய மஞ்சள் நிறமான நீர்கோத்த புள்ளிகள் இலையின் நுனியில் தோன்றுகின்றன. பின்னர், அவை கீழ் நோக்கிப் பரவ ஆரம்பிக்கும். இலையின் ஓரங்கள் அலைஅலையாக் காய்ந்த மஞ்சள் நிற சருகாகவும் நடுநரம்பையொட்டி இலை, பசுமையாகவும் இருக்கும். நோய் முற்றும் பொழுது இலை முழுவதும் காய்ந்து விடும். அதிகக் காற்றின் ஈரப்பதம், தொடர்ந்து மழை போன்ற சாதகச் சூழ்நிலையில் பாக்டீரியா திட்டு திட்டாக இலையின் மேல் கசிந்து படிகின்றது. எனவே, இலைகள் மீண்டும் நோய் பரவுவதற்குக் காரணமாக அமைகின்றன.

இந்நோய்பரவுவதற்கு நோயுற்ற விதைகளே முதற் காரணமாக அமைகின்றன. மேலும், அவை வைக்கோல், அடித்தூர் போன்றவற்றிலும் வாழும் தன்மை கொண்டுள்ளன. முக்கியமாக இவை விதைகளின் மூலம் பரவுவதால் விதைகளை விதைநேர்த்தி செய்து விதைப்பது நல்லது. விதைகளை 0.025 சதவிகிதம் அக்கிரிமைசினும், 0.05 சதவிகிதம் நனையும் செரசானும் கலந்த நீரில் சுமார் 8 மணி நேரம் ஊரவைப்பதன் மூலம் பாக்டீரியாவை அழிக்கலாம். மேலும், 52 டிகிரி செண்டிகிரேட் வெப்பம் உள்ள நீரில் சுமார் 15 நிமிடம் விதையை ஆழ்த்திப் பாக்டீரியாவை அழிக்கலாம்.

மேலும், நோயுற்ற பயிரில் ஏக்கருக்கு 90 கிராம் அக்ரிமைசினுடன் 400 கிராம் தாமிரப் பூசணக் கொல்லியைக் கலந்து தெளிப்பதன் மூலம் நோயை நன்கு கட்டுப்படுத்தலாம்.

**நெல் மணி கரிப்பூட்டை நோய் (Bunt or Kernal smut):**

இந்நோய் 1975-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில், கண்ணகி நெல் ரகத்தை மிகவும் வெகுவாகத் தாக்கியது. இந்நோய் கதிர் பிரியும் பருவத்தில் தோன்றுகிறது. கதிரில் வெகுசில மணிகளே பாதிக்கப்படுகின்றன. கதிர் முற்றும்பொழுது கருமையான பொடி வெளிவருவது தெரியும். நோய் தாக்கியிருக்கும் கதிர்களை தனியாகச் சேகரித்து அவற்றை அழிப்பதன் மூலம் இந்நோயை நன்கு கட்டுப்படுத்தலாம். இந்நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட நெல் ரகங்களைப் பயிரிடுவதன் மூலம் இந்நோயை முற்றிலும் அழிக்கலாம். தற்பொழுது இந்நோயினுல் மகசூல் அவ்வளவாகக் குறைவதில்லை.

## கீழத்தஞ்சை வேளாண்மைத் தொழிலாளர் ஊதியம்—இடைக்கால நிவாரணம்...

1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டத்தின் கீழ, தஞ்சை மாவட்டத்தின் கீழ்ப் பகுதி வட்டங்களாகிய சீர்காழி, மாயூரம், நன்னிலம், திருவாரூர், நாகப்பட்டினம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகியவற்றில் நியாய ஊதியங்களை மாற்றியமைக்கும் பிரச்சினையைக் கருதி ஒரு நபர் கமிஷன் ஒன்று 15—7—78ல் அரசினுல் நியமிக்கப்பட்டது நினைவிருக்கும்.

இக்கமிஷன் தனது முடிவான பரிந்துரைகளை அளித்து அவை அரசினுல் கருதப்படுவதற்குள் குருவைப் பயிர் நடவும், கணிசமான அளவு சம்பாப் பயிர் நடவும் முடிந்துவிடும். ஆகையால், கமிஷன் அளிக்கவிருக்கும் முடிவான பரிந்துரைகள் மீது அரசு முடிவெடுக்கும் முன், இடைக்காலத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க, பயிரிடு பருவத்தில் நடைபெறும் எல்லாவிதப் பணிகளுக்கும் கீழ்க்கண்டவாறு ஊதியம் நிர்ணயிக்கப்படலாம் என கமிஷன் இடைக்காலப் பரிந்துரை அளித்துள்ளது.

ஆண்கள்—ரூ. 6.50 ரொக்கம், அல்லது 6 லிட்டர் நெல் மற்றும் ரூ. 2.75 ரொக்கம். பெண்கள்—ரூ. 4.50 ரொக்கம் அல்லது 5 லிட்டர் நெல் மற்றும் ரூ. 1.50 ரொக்கம்.

அரசு இப்பரிந்துரையை ஏற்று அவ்வாறே ஆணை வெளியிட்டுள்ளது.

தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பணி மகத்தானதாகும்.

நாளும் நற்றமிழ் வளர்த்து நாவன்மையினால் நானிலத்தாரைக் கவர்ந்த நாயகன்— பல்கலை உணர்த்தி நமக்கெல்லாம் பாடமாகிவிட்ட பைந்தமிழ் வேந்தன் திருப்பெயரில் ஒரு பல்கலைக் கழகம்!

அதுதான், பேரறிஞர் அண்ணா தொழில் — நுட்பவியல் பல்கலைக் கழகம்.

சீர்மிகு சென்னையில் செப்டம்பர் திங்கள் 4-ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் துவங்கப்படவிருக்கும் இந்தப் பல்கலைக் கழகம், எதற்காக அமைக்கப்படுகிறது?

கழகமாக விரிந்து வளருவதற்கு வேண்டிய எல்லாப் பிரிவுகளும் கொண்டதுமான கிண்டி பொறியியற் கல்லூரி, இதன் தலைமையிடமாக இருக்கும்.

கிண்டி அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரியில் இருக்கும் கீழ்க்கண்ட சென்னைப் பல்கலைக் கழகத்தின் நான்கு துறைகளும் உருவாகவிருக்கும் பல்கலைக் கழகத்தின் பகுதிகளாக இருக்கும்

1. வேதியியல் தொழில் நுட்பவியல் துறை.

2. தோல் தொழில் நுட்பவியல் துறை.

3. நெசவுத் தொழில் நுட்பவியல் துறை.

4. கட்டடக்கலை மற்றும் நகர அமைப்புப் பள்ளி.

2. சமுதாயத்தின் தற்போதைய தேவைகளுக்குப் பொருத்தமானதாகவும், நீண்ட காலத் தேவைகளுக்கு ஏற்றதாயும், எதிர்பார்க்கப்படும் புது வகை இயல்கள், ஆழ்ந்த நுண்ணிய அறிவுத் துறைகள், இவற்றினால் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றுக்குப் பொருந்துவதான பொறியியல், தொழில் நுட்பவியல் தொடர்புள்ள அறிவியல் ஆகியவற்றில் ஒரு கல்வித் திட்டத்தை வகுத்து அதனைச் செயற்படுத்துதல்;

3. பொறியியல், தொழில் நுட்பவியல், தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றின் அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல்; இத்துறைகளில் ஆராய்ச்சிநடத்தலும் மேம்படுத்தலும்; இவற்றால் கண்டறிந்தவற்றைச் சமுதாய மேம்பாட்டிற்காக மக்களி

# பேரறிஞர் அண்ணா தொழில்-நுட்பவியல் பல்கலைக் கழகம்



தமிழ்நாடு மாநிலத்தில் பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் தொடர்புள்ள அறிவியல் உயர்கல்வியையும் ஆராய்ச்சியையும் பேணி வளர்க்கவும் முன்னேற்றவும், மாறும் தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப உடனுக்குடன் போதிய அளவு இயங்கக் கூடியதாக இருக்க உறுதிப்படுத்தவும், மேலும் தொழில்நுட்பக் கல்வியில் ஒரு தேவையான தலையாய நிலையமாக விரிந்து வளரவும், ஒரு தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் அமைப்பதென்று முடிவெடுக்கப்பட்டது.

இந்தப் பல்கலைக் கழகம் ஒருமை வகை (Unitary Type)யாக இருக்கும். இந்த மாநிலத்தில் ஒரு முதன்மையான கல்வி நிலையமும், தொழில்நுட்பப் பல்கலைக்

மேலும், சென்னை குரோம்பேட்டையிலிருக்கும், சென்னை தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனமும் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குள் கொண்டுவரப்படும்.

பேரறிஞர் அண்ணா தொழில்-நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் நோக்கமென்ன?

1. கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி, வளர்ச்சி, பரப்புதல், பணிகளோடு மற்றும் பல்கலைக் கழகம் தகுதியெனக் கருதுகிற ஏனைய வழிகள் மூலம் பொறியியல், தொழில் நுட்பவியல், தொடர்புள்ள அறிவியல் ஆகியவற்றில், உயர் கல்விக்கான வசதிகளுக்கு வகை செய்தல், வாய்ப்புகளை வழங்குதல்;

டையே பரப்புதலும், வளர்த்தலும்; பொறியியல் தொழில் நுட்பவியல், தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் தொடர்ந்து உருவாக்கப்படும் கருவிகள், கருத்துக்கள், நடைமுறைகள் பற்றி மக்கள் பரவலாக அறிந்து கொள்ள வகை செய்தல்;

4. தொழில் நுட்பக் கல்வி வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் ஒரு புறமும், தொழில் அதிபர்கள், அரசு பொறியியல் துறை வல்லுநர்கள் மறுபுறமுமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து, ஒத்துழைக்க உதவும் நிலையமாகச் செயல்படுதல்; மாணவர்களிடையே தொழில் முயற்சியை ஊக்குவித்தல்;

**எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்**
**தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்**
**கைகொடுத்து உதவிடும்!**

**மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்**

**துணையாகும்!**

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.*

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

இந்தப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்குத் தற்போது அரசு 211 இலட்ச ரூபாய் செலவு செய்து வருகிறது. இது தவிர இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கென ரூ. 30 இலட்சம் செலவு பிடிக்கும்.

இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கென்று கிண்டியில் 250 ஏக்கர் நிலமும், கட்டடத்திற்கென ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்க செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்று விளங்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரைத் தாங்கி துவங்கப் படவிருக்கும் இந்தப் பல்கலைக் கழகம், காலமெல்லாம் பேரறிஞர் அண்ணாவின் புகழை—நினைவை—சிந்தனையைப் போற்றிக் கொண்டே இருக்கும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை !

# "நகைச்சுவை அரசர்"
# என். எஸ். கிருஷ்ணன்

ஹாஸ்யத்தை நடிப்பதற்கும், ரசிப்பதற்கும் நுண்ணறிவு அதிகம் வேண்டும். நவரஸங்களிலும் சிறந்தது ஹாஸ்ய ரஸம். அதைப் படிப்பது மிகக் கஷ்டமுங்கூட. பழங்காலத்திலிருந்தே நம் நாடக மேடையில் ஹாஸ்யம் கையாளப்பட்டு வந்திருக்கிறது. எனினும், முக்கிய நடிகர்கள் வேஷம் மாற்றிக் கொள்ளுவதற்கும், பெரிய காக்ஷிகளை மாற்றி அமைப்பதற்கும் தேவையான அவகாசத்தை அளிப்பதற்காகவே பெரும்பாலும் ஹாஸ்யம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் ஹாஸ்யத்தைத் தமிழ்ப் படங்களில் ஒரு முக்கிய அம்சமாக ஆக்கியவர் என். எஸ். கிருஷ்ணன். தமிழ்ப்படம் ஓடுவதற்கு ஹாஸ்யம் அத்தியாவசியம் என்று, அவர், காரியத்தில் காட்டியிருக்கிறார். படம் மோசமாயிருந்தால்கூட ஹாஸ்யப் பகுதி நன்றாயிருந்தால் படத்திற்கு நிறைய வசூல் கிடைத்துவிடும் என்பது சில படங்களின் விஷயங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.



* * * *

கிருஷ்ணன் பள்ளிப் படிப்பில் குறைந்தவரே தவிர அறிவில் சிறந்தவர். பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் காணப்படும் ரஸமான ஹாஸ்யச் சம்பவங்களையும், துணுக்குகளையும் அவ்வப்போது குறித்து வைத்துக் கொள்ளுவார். அதோடு தினசரி வாழ்க்கையில் இயல்பாக ஏற்படும் சம்பவங்களையும், பேச்சுக்களையும் கவனித்து வைத்துக்கொண்டு, அவற்றிற்கு நகாஸ் கொடுத்து, தகுந்த சந்தர்ப்பங்களில் அவைகளைப் படங்களில் புகுத்தி விடுவார். ஆங்கில ஹாஸ்யப் படங்களை அடிக்கடி பார்த்து வருவார். இப்படியெல்லாம் அவர் இடைவிடாத முயற்சியில் ஈடுபட்டிருந்ததனால்தான் அவரது நடிப்பு நாளாவட்டத்தில் விருத்தி அடைந்திக்கிறது; மற்ற ஹாஸ்ய நடிகர்களைவிட அவருக்கு அதிக பொதுஜன ஆதரவும் ஏற்பட்டிருக்கிறது.

* * * *

கிருஷ்ணன் வெறும் நடிகர் மட்டுமல்ல. படத்தொழிலின் பல விஷயங்களிலும் அவருக்கு நல்ல ஞானமுண்டு. கதையையும், கதைக்கேற்ற ஹாஸ்ய சம்பவங்களையும், அதற்கேற்றபடி சம்பாஷணை, பாட்டு முதலியவைகளையும் அவரே அமைத்துக் கொள்ளுவார். இது முடிந்ததும் தம் கோஷ்டியாரோடு வீட்டிலேயே திருப்தி ஏற்படும் வரையில் பன்முறை ஒத்திகை பார்த்துக் கொள்வார். அவருடைய கோஷ்டி ஸெட்டுக்கு வந்துவிட்டதானால், உடனே கேமிரா ஓட வேண்டியது ஒன்றுதான் பாக்கியாக இருக்கும். வந்ததும் போனதுமாக, பட முதலாளிக்குச் சிரமமே கொடுக்காமல், தம் பாகத்தைக் கச்சிதமாக நடித்துக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். இவ்வேற்பாடு பட முதலாளிகளின் சிரமத்தையும், செலவையும் வெகுவாகக் குறைத்ததால், கிருஷ்ணன் தம் பாகங்களைத் தாமே டைரெக்ட் செய்து கொள்ளும்படி விட்டுவிட்டனர். இப்படி விட்டுவிட்டது இருதரப்பினருக்கும் நல்ல பலனை அளித்தது.

(குண்டூசி. பி. ஆர். எஸ். கோபால் எழுதிய 'நட்சத்திர மாலை' என்னும் நூலிலிருந்து)



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

# குப்பை மேட்டிலிருந்து உணவு மேசை வரை!

தி. கோ. தணிகாசலம், துணை வேளாண்மை இயக்குநர்

ஒரு வீட்டுக்குச் சாப்பிடப் போகிறோம். வீட்டரசி நாம் சாப்பிட உட்கார்ந்ததும் ''குப்பைக் கூளத்தை உண்ண ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்பாரேயானால் நாம் அதை ஒரு நகைச்சுவைத் துணுக்காகக் கருதித்தான் சிரித்து மழுப்புவோம். ஆனால், அந்தப் பெண்மணி சொல்லுவது முற்றிலும் உண்மையாகவே இருக்கக்கூடும். அது இன்று பொருந்தாமல் போகலாம். ஆனால், இன்னும் ஒரு பத்தாண்டுக்குள் விவசாயக் கழிவுப் பொருள்களை, நேரடியாக நாம் உட்கொள்ளத் தக்க அருமையான உணவுப் பொருள்களாக்கி டின்களில் அடைத்து வியாபாரிகள் பெருமையுடன் விற்கவும் கூடும். அவற்றை நாம் விலை கொடுத்து மகிழ்ச்சியுடன் வாங்கவும் செய்வோம்!

இப்படிப்பட்ட பொருள்களைக் கொண்டு, வருங்காலத்தில் நடக்கக்கூடிய ஒரு விருந்து எவ்வாறு இருக்கும் என்பதைப் பார்ப்போமா?

அங்கே சாப்பாட்டு மேசை மேல் வைத்துள்ள மெழுகுவர்த்திகள் இறந்த பிராணிகளின் கொழுப்பிலிருந்து தயார் செய்வதாய் இருக்கும். நம் நாட்டில் ஆண்டுதோறும் மடிந்து போகும் ஆடு, மாடு, கோழி, நாய் முதலிய வீட்டுப் பிராணிகளின் தொகை மொத்தம் 2.5 கோடிக்கும் அதிகம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால், இவை அனைத்தின் சடலங்களையும் சேகரிப்பதற்கு முறையான வழி எதுவும் இப்போது இல்லை. இறந்து போகும் ஆடு மாடுகளின்தொகை மட்டும் ஒரு கோடியே 36 இலட்சத்திற்கும் அதிகம் என்றும், இறந்து போகும் எருமைகளின் தொகை மட்டும் 40 இலட்சத்திற்கும் அதிகம் என்றும் தெரிகிறது.

இவற்றின் தோல்களை கிராமங்களில் செருப்பு தயாரிப்போர் உபயோகித்துக் கொள்கிறார்கள். தாமாக இறக்கும் பிராணிகளின் தோல்களிலிருந்து- இந்தச் செருப்புகள் தயாரிக்கப் படுவதால் காதி கிராமோத்யோக் பவன் விற்பனை நிலையங்கள் அனைத்தும் இவற்றை முக்கிய பொருளாக வாங்கி விற்கின்றன. ஆனால், இந்த ஆடு, மாடுகளின் தோலற்ற சடலங்கள் வெறுமே புறக்கணிக்கப்படுகின்றன. இதனால் பண நஷ்டம் எவ்வளவு ஏற்படுகிறது என்பதைப் பற்றியோ இவை அங்கங்கே அழுகிக் கிடப்பதால் காற்றும் நீரும் எவ்வளவு மாசுபடுகின்றன என்பதைப் பற்றியோ யாரும் நினைப்பதில்லை. இவற்றிலிருந்து கிடைக்கும் கொழுப்பிலிருந்து வருங்காலத்தில் மெழுகுவர்த்தி முதலான உபயோகமான பொருள்களைத் தயாரிக்கலாம்.

இப்பொழுதெல்லாம் சணல் தழைகளைக் கழிவுப் பொருளாக வீசிவிடுகிறார்கள். அதிகமாகப் போனால் அவற்றை வேலிபோடவும் கூரை வேயவும் எரிபொருளாகவும் உபயோகிக்கிறார்கள். ஆனால், சணல் தட்டைகளிலிருந்து செல்லுலோஸ் குழம்பு தயாரித்து அதிலிருந்து ரேயான் நூல் செய்யலாம். இப்படி உற்பத்தியாகக் கூடிய ரேயான் புடவைக்கு நிச்சயம் நல்ல வரவேற்பு இருக்கும். உண்மையில் உங்களுக்கு விருந்து போடும் வீட்டரசி, இத்தகைய புடவை ஒன்றில் ஒளிவீசிக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப்பட வேண்டாம்! சணல் அறுவடைக்குப் பிறகு சணல் இழைகள் போக மிஞ்சும் தட்டைகள் அந்த இழைகளின் எடையைப் போல இரண்டரை மடங்கு உள்ளவை. அவற்றில் செல்லுலோஸ் ஏராளமாக இருக்கிறது. நம் நாட்டில் இத்தகைய ஒரு பொருளைச் சற்றும் மதிக்காமல் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 25 இலட்சம் டன் அளவுக்கு வீணாக்குகிறோம்.

பசியைக் கிளப்பும் பானங்களை விருந்துக்கு முன்னர் சாப்பிடுவது என்பது இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு ஒரு நாகரிகமாக இருக்குமோ இராதோ தெரியாது. ஆனால், அப்படி இருக்கும் பட்சத்தில் நாம் சாதாரணமாக இப்போதெல்லாம் வீணாக்கிவிடும் இளநீரையே அதற்கு உபயோகிப்பார்கள் என்று தோன்றுகிறது. அது இல்லாவிட்டால் முந்திரிப் பருப்போடு விளையும் பழம் இருக்கிறதே அதையே இத்தகைய பானங்களுக்கு உபயோகிக்க முடியும். மரத்திலிருந்து நேரடியாகப் பறித்து இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் சுவை அவ்வளவு நன்றாயிராது என்பதுடன் வாயிலும் நார்நாராகக் கூடிவரும். ஆனால், இந்தப் பழத்தில் 'சி' வைட்டமினும் சர்க்கரை கால்சியம் ஃபாஸ்ஃபரஸ் இரும்பு, முதலிய சத்துக்களும் நிறைய உண்டு. நன்கு பதப்படுத்தி இந்தப் பழத்தை உபயோகித்தால் அருமையான சர்பத் கிடைக்கும்.

இதிலிருந்து மிட்டாய் செய்யலாம். சட்னி செய்யலாம். ஊறுகாய் போடலாம். சாப்பாட்டுக் காய்கறியாகக்கூட இதை உபயோகிக்கலாம். அல்லது இந்தப் பழத்தையே பதப்படுத்தி டின்களில் போட்டு உபயோகித்துக் கொள்ளலாம் முந்திரிப் பழத்திலிருந்து என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை மைசூரிலுள்ள மத்திய உணவுநுட்ப ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்திருக்கிறது. இந்த ஆராய்ச்சியின் பலன்களை நம் நாட்டில் முந்திரி விளையும் பகுதிகளுக்குக் கொடுக்க முடியும் என்றால் எவ்வளவு சிறப்பாய் இருக்கும் !

மைசூர் கழகத்தில் இப்போது நடக்கும் சில பரிசோதனைகள் வெற்றி அடைந்தால் வருங்காலத்தில் சப்பாத்திக்கான கோதுமை மாவில் பருத்தி விதை மாவையும் கலந்து உபயோகிக்க முடியும். ஏனென்றால் பருத்தி விதையில் புரதச்சத்து நிறைய இருக்கிறது. குவாடிமாலா நாட்டிலுள்ள ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் பருத்தி விதையின் மாவையும், சோள மாவையும் கலந்து சத்து நிறைந்த உணவுப் பொருள் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பருத்தி விதையிலிருந்து எண்ணெய் எடுத்துப் பிறகு மிஞ்சும் பிண்ணாக்கை ஆடு மாடுகளுக்குத் தீவனமாக உபயோகிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கழிவுப் பொருள்களை மட்டும் உபயோகித்து நமக்கு விருந்து படைக்க வேண்டுமென்று யாராவது நினைத்தால் பத்தாண்டுகளுக்குப் பிறகு இதற்கு நிறைய

வாய்ப்பு இருக்கும். பட்டாணித் தோல், புலவு, வெங்காயத்தோல் பொரியல், உருளைக்கிழங்குத் தோல் சூப்பு, முட்டைக்கோஸ் தண்டுகளைப் போட்டுக் குழம்பு என்று ஏகப்பட்ட வகைகளைப் போட்டு நம்மைத் திணறடிக்கலாம். இந்தக் காய்கறிகளையெல்லாம் நம் வீட்டுத் தோட்டத்திலேயே நமது சமையலறையின் கழிவுப் பொருள்களுடைய பலம் கொண்டே விளைவிக்க முடியும். அது போதாதென்றால் ஆலைக் கழிவுப் பொருள்களையும் உரமாக உபயோகித்துக் கொள்ளலாம்.

வீட்டில் காப்பியோ தேனீரோ தயாரித்த பிறகு மிஞ்சும் கழிவுப்பொருள் உரமாகப் பயன்படும். கசாப்புக் கடையில் வீணாகும் துண்டு துணுக்குகளை மீன்களுக்கு இரையாகப் போடலாம். இவற்றையே வைத்துக்கொண்டு தொக்கு தயாரிக்க முடியும். இதையெல்லாம் பொரிப்பதற்குத் தேவைப்படும் எண்ணெய்யைப் பருத்தி விதையிலிருந்தோ புகையிலை விதையிலிருந்தோ அரிசித் தவிட்டிலிருந்தோ எடுக்கலாம். பாரத நாட்டில் அரிசித் தவிட்டு எண்ணெய்யின் உபயோகங்கள் இனி வருங்காலத்தில் மிகப் பெருமளவில் அதிகரிக்கும்.

பாரத நாட்டின் முக்கியமான பயிர்களில் நெல்லும் ஒன்று. ஆண்டுக்கு 6.5 கோடி டன் நெல் இந்நாட்டில் விளைகிறது. இதனால் 4 கோடி டன் அரிசியும், சுமார் ஒரு கோடி டன் உமியும், 20 லட்சம் டன் தவிடும் கிடைக்கின்றன. நெல் குத்துவதை இன்னும் சிறப்பாகச் செய்தால் மேற்கொண்டு 4 இலட்சம் டன் தவிடு கிடைக்கக்கூடும். அரிசி தவிட்டிலிருந்து 15 அல்லது 20 சதவிகிதம் நயமான எண்ணெய் எடுக்க முடியும். மொத்தம் 4 இலட்சம் டன் அளவுக்கு இத்தகைய எண்ணெய்யை நாம் ஆண்டுதோறும் தயாரிக்க முடியும். இதன் பண மதிப்பு 1.2 கோடி ரூபாயாகும். தென்கிழக்கு ஆசியாவில், பர்மா, தாய்லாந்து முதலிய பல நாடுகளில் அரிசித் தவிட்டெண்ணெய் மிக அதிகமாக உபயோகிக்கப்படுகிறது.

நாட்டில் கிடைக்கும் அரிசித் தவிட்டை உமியோடு சேர்த்து ஆடுமாடுகளுக்குத் தீவனமாகப் போடுகிறார்கள். அல்லது மட்டமான எரிபொருளாகக் கருதி எரித்து விடுகிறார்கள். இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. தவிட்டைச் சரியானபடி பக்குவப் படுத்தாவிட்டால் அதிலுள்ள கொழுப்புச் சத்துமிக்க அமிலம் அதிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யைக் கெடுத்துவிடும். நெல்லைப் புழுக்குவதால் இதைத் தவிர்க்க முடியும். ஆனால், வட நாட்டிலுள்ள மக்கள் புழுங்கலரிசியைச் சுவைத்துச் சாப்பிடுவதில்லை. இதைக் கருதி மைசூர் மத்திய உணவு நுட்ப ஆராய்ச்சிக் கழகமும் ஜபல்பூர் பல்கலைக் கழகமும் தவிட்டைப் பக்குவப்படுத்துவதற்கு ஒன்றிரண்டு புதிய முறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றன. வர்த்தக ரீதியில் இன்னமும் இந்த முறைகளைச் செயல்படுத்திப் பார்க்கவில்லை. இப்போது நம் நாட்டில் தயாரிக்கப்படும் கொஞ்ச நஞ்ச அரிசித் தவிட்டெண்ணெய்யும் சோப்புத் தொழிற்சாலைகளின் உபயோகத்துக்குப் போய் விடுகிறது.

முந்திரி பருப்பு போன்ற விலை மதிப்புள்ள ஒரு பொருளை உற்பத்தி செய்யும் மக்கள் உண்மையில் வறுமை மிக்கவர்களாக வாழ்கிறார்கள். அவர்கள் போதிய உணவோ, சத்துணவோ இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். முந்திரியின் பழத்திற்கு இத்தனைப் பலன்கள் செலவில்லாமல் கிடைக்கும்பொழுது, அவற்றின் மூலம் இந்த மக்களுக்கு எவ்வளவு நல்ல சத்துணவு கிடைக்கச் செய்யலாம்!

விருந்து ஆரம்பமாகிறது! விருந்தோம்பும் வீட்டரசி முதலில் உங்களுக்குப் பரிமாறும் சப்பாத்தி மாங்கொட்டையிலிருந்து தயாரானதாக இருக்கலாம். ஸ்டார்ச் சத்து நிறைந்த மாங்கொட்டைகளிலிருந்து ரொட்டி தயாரிக்க முடியும் என்பதை மைசூர் கழகம் கண்டுபிடித்திருக்கிறது. மாங்கொட்டையிலிருந்து இக்கழகம் எண்ணெய்கூட வடித்திருக்கிறது. மாங்கொட்டையின் மொத்த எடையில் 12 சதவிகித அளவுக்கு இந்த எண்ணெய்யை எடுக்க முடிந்திருக்கிறது. சர்பத், ஜெல்லி ஆகியவற்றில் உபயோகிக்கும் கனிப்பசைச் சத்து மாம்பழத்திலிருந்து கிடைக்கக்கூடியது என்று அண்மையில் பரிசோதனை மூலம் கண்டுபிடித்திருக்கிறது. பாரத நாட்டில் 42 கோடி மக்கள் கொடிய வறுமையில் வாடுகிறார்கள். பசிக்கொடுமையோடு நிரந்தரப் போராட்டம் நடத்தி வரும் இந்த மக்களுக்கு மேற்சொன்ன தகவல்கள் அனைத்தும் மிகவும் முக்கியமாகும்.

மாம்பழம் சம்பந்தப்பட்ட கழிவுப்பொருள்களாகவே ஆண்டுக்குச் சுமார் 8,500 டன் வரை வீணாக்குகிறோம். பழங்களையும் காய்கறிகளையும் பதம் செய்யும் நிலையங்களிலிருந்து 1970 மட்டும் 25,000 டன் அளவுக்குக் கழிவுப் பொருள்கள் வீணாயின. சரியாகக் கணக்குப் போட்டால் வீணாவது இதைவிட அதிகமாகவே இருக்கும். ஏனென்றால் பாரத நாட்டில் மொத்தம் சுமார் 2 கோடி டன் அளவுக்குப் பழங்களும் காய்கறிகளும் விளையும்போது, அதில் ஆயிரத்துக்கு நான்கு என்ற விகிதத்தில்கூட பதப்படுத்தப்படுவதில்லை. பாக்கி எல்லாம் கழிவுப் பொருளாகவே வீணாகிறது.

மாட்டுச் சாணத்திலிருந்தும் மற்ற கழிவுப் பொருள்களிலிருந்தும் எரிவாயு தயாரிக்கும் ஏற்பாடு சமீப ஆண்டுகளில் மக்களின் ஆதரவைப் பெரிய அளவில் பெற்றிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் காதி-கிராமோத்யோக் பவனும் மற்றும் பல காந்திய நிலையங்களும் மேற்கொண்ட முயற்சியே ஆகும். உங்களுக்கு வருங்காலத்தில் விருந்து படைக்கும் வீட்டரசி ஒரு பண்ணையில் வசிப்பவராக இருந்தால், நிச்சயம் அந்த விருந்தை அவர் சாண எரிவாயு அடுப்பு ஒன்றினால்தான் சமைத்திருப்பார்!

உலகத்திலேயே மாடுகள் மிக அதிகமாக உள்ள நாடு பாரதம் தான். இங்கே ஆண்டுக்கு 133.5 கோடி டன் அளவுக்குச் சாணம் கிடைக்கிறது. இது முழுவதுமே வீணாகிவிடுகிறது என்று சொல்ல வேண்டும். இந்தச் சாணத்தை வரட்டியாக்கி எரிப்பதால் ஒரு முக்கியமான சாதனத்தை நாம் இழந்து விடுகிறோம் என்பதோடு வரட்டி எரிவதன் மூலம் ஏற்படும் புகையும் கரியமிலவாயுவும் நமது சுற்றுச் சூழலை மாசுபடுத்தியும் விடுகின்றன. கிடைக்கும் மாட்டுச் சாணத்தில் மூன்றில் ஒரு பகுதிதான் இப்போது உரமாகப் பயன்படுகிறது. ஆனால், ஒரு விவசாயியிடம் ஐந்துமாடுகள் இருந்தால்கூட அவருக்கு ஒரு நாளுக்குக் கிட்டத்தட்ட 10 கன அடி அளவுக்கு எரிவாயு கிடைக்க முடியும். ஐந்து பேருள்ள ஒரு குடும்பத்தில் சமையலுக்கு இது முற்றிலும் போதுமானதாகும். சமையலுக்கும் போக ஒன்றிரண்டு விளக்குகளை எரிக்கவும் முடியும்.

சாண எரிவாயு தயாரிப்பதில் உள்ள ஒரே சங்கடம் செலவுதான். ஒரு சாண எரிவாயு இயந்திரத்தை நிறுவுவதற்குச் சுமார் ரூ. 3,000 செலவாகிறது. இது கிராம மக்களுக்குப் பொதுவாகக் கட்டுப்படியாகாத செலவாகும். பணமே இருந்தால்கூட இத்தகைய சாதனமெல்லாம் பிரதானமாக பெண்களுக்கே பிரயோசனப்படுவது என்ற காரணத்தால் ஆண்கள் இதில் முதலீடு செய்வதை விரும்புவதில்லை. ஆயினும், சாண எரிவாயு தயாரிப்பதற்குக் குறைந்த செலவில் ஒரு சாதனத்தை உருவாக்க நம் நாட்டுத் தொழில் நுட்ப நிபுணர்கள் முயன்று கொண்டிருக்

கிருர்கள். சைனுவில் உபயோகப் படுவதுபோன்ற ஒருசாதனத்தைப் பாரத நாட்டின் சில பகுதிகளில் பயன்படுத்தி வருகிருர்கள். இதற்கு ஆகும் செலவு வழக்க மான செலவில் மூன்றில் இரண்டு பகுதியே.

காய்கறிகளிலிருந்து கிடைக் கும் கழிவுப்பொருட்கள் மாட்டுச் சாணத்துடன் சேர்த்தால் எரி வாயுவின் தரம் உயர்வாக இருப்பதோடு வாயு அதிகமாக வும் கிடைக்கிறது. அனுவசிய எதிர்ப்புகள் இல்லாவிட்டால் மனிதனின் கழிவுகளேக்கூட இந்த நோக்கத்துக்கு உபயோகப்படுத் திக் கொள்ளலாம். அப்படி உப யோகித்துக் கொண்டால் நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு பெரிய சுகாதாரப் பிரச்சினே தீர்ந்து விடும் என்பதோடு, மாடுகள் குறைவாக உள்ள வீடு களில்கூட எரிவாயு சாதனம் வைத்துக் கொள்வது சாத்திய மாயிருக்கும். எரிவாயு சாதனத் தில் படியும் சாம்பல் நல்ல உர மாகப் பயன்படக்கூடியது.

குளங்களிலும் தண்ணீர்த் தொட்டிகளிலும் வளரும் பாசித் தாவரத்தை அதிகமாகவிளேவிப்ப தற்கும் இதை உபயோகித்துக் கொள்ளலாம். இந்தப் பாசித் தாவரம் புரதச்சத்து மிகுந்தது. இதை உரமாகவும் உபயோகிக்க லாம். மாட்டுத் தீவனமாகவும் உபயோகிக்கலாம். சாண எரி வாயு சாதனத்திலிருந்து கிடைக் கும் காய்ந்த சாம்பல் கரும் பச்சை நிறத்தில் இருக்கிறது. இந்த நிறத்தை நீக்கி நமது உண விலேயே சேர்த்துக் கொள்வ தற்குத் தகுதியாக்குவது பற்றி நமது விஞ்ஞானிகள் பரிசோதனே களே நடத்தி வருகிருர்கள்.

பாரத அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப தேசியக் குழுவின் திட்டமிடும் குழு, கழிவுப் பொருள்களேப் பயன்படுத்திக் கொள்வது பற்றி ஓரளவு விரி வான அறிக்கை ஒன்றை வெளி யிட்டிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் என்னென்ன தேவை இருக்கிறது என்பதைப் பற்றிய புதிய உபயோகங்களேக் காண்பதற்காக நம் நாட்டின் தேசிய ஆராய்ச்சிக் கூடங்களும் வேளாண்மைப் பல்கலேக் கழகங் களும் ஆய்வு நிலேயங்களும், தீவிரமாய் முயன்று வருகின்றன. சில நுட்பமான முறைகள் ஏற் கெனவே கண்டுபிடிக்கப்பட்டி ருக்கின்றன. இந்த முறைகளேச் செயல்படுத்துமாறு தனியார் தொழில்துறையினரை அரசு அழைத்திருக்கிறது. ஆனுல், சில சமயம் நுட்ப முறைகள் சிறப் புடன் உருவாக்கப்பட்டால்கூட அவற்றைச் செயல்படுத்திப் பார்க்க நிறைய பேர் முன்வருவ தில்லே.

வர்த்தக ரீதியில் எதையும் செய்ய முற்படும்போது கிராம மக்களும், பழங்குடி மக்களும் உணவாக உபயோகிக்கும் பொருள்கள் அவர்கள் கையை விட்டு முற்றிலும் போய்விடாத வாறு பார்த்துக் கொள்வது முக்கியம். சமையல் எண்ணெய் வகைகள் சிலவற்றைத் தயாரிக் கும்போது முறையில் கோளாறு காரணமாக அந்த எண்ணெய்கள் சாப்பிடத் தகுதியற்றவை என திடீரென்று அறிவிக்கப்படுகின் றன. அதோடுஅந்தஎண்ணெய்கள் சோப்பு ஆலேகளுக்கும் வேறு தொழில்களுக்கும் கொடுக்கப் பட்டு விடுகின்றன. வழிவழியாக மக்கள் உபயோகித்து வந்துள்ள இந்தச் சமையல் எண்ணெய் வகைகளில் ஏதாவது கோளாறு இருந்தால் கிராம மட்டத்தில் எளிதாக அதை அகற்றக்கூடிய முறைகளேக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி நடைபெற வேண்டும். இதனுல் பல தலேமுறைகளாக இந்த எண்ணெய்களே உபயோ கித்து வந்திருப்போருக்கு அவற் றைத் தொடர்ந்து உபயோகிப் பது சாத்தியமாகும்.

இதிலெல்லாம் எதை எந்த வரிசைக் கிரமத்தில் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மா னித்துக் கொள்வது நலம். இதை யும் தீர்மானித்து கூடவே பொது மக்களுக்கு உதவக்கூடிய இலட்சி யங்களேயும் தெளிவாக வரை யறுத்துக் கொண்டு விட்டோ மானுல், இந்நாட்டின் இரண்டு பிரச்சினேகளே ஒரு மாபெரும் முயற்சி மூலம் நம்மால் தீர்க்க முடியும். அதாவது கழிவுப் பொருள்களே என்ன செய்வது என்ற பிரச்சினேயும், பசிக்கொடு மைக்குப் பரிகாரம் என்ன என்ற பிரச்சினேயும் ஒரே அடியில் தீர்ந்து போகும்.

கழிவுப் பொருள்களே மீண்டும் உபயோகித்துக் கொள்வதற்கு மாபெரும் இயக்கமொன்று நடத்தினேமானுல், குப்பை மேடு களிலிருந்து ஏதாவது உணவுப் பொருள்கள் கிடைக்குமா என்று தேடி அலேந்து அதற்காகத் தெரு நாய்களுடன் போட்டியிடும் ஏராளமான மக்களுக்கு நிச்சய மாக நல்ல உணவு கிடைக்க வகை செய்யலாம்!

நன்றி: பாரத பத்திரிகைக் கழகம்.

## நகைச்சுவைப் பெருமை

"வாழ்க்கைக்கு நகைச் சுவை அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?"— காந்தியடிகளேப் பார்த்து ஓர் அன்பர் கேட்டார்.

"அந்த இயல்பு என்னிடம் இல்லாவிட்டால் என்றோ தற்கொலே செய்து கொண் டிருப்பேன்" — காந்தியடிகள் இவ்வாறு பதில் தந்தார்.

சிரிக்கத் தெரியாமலிருந் தால் எனக்குப் பொதுவாழ்க் கையிலே ஏற்பட்ட சங்கடங் களால் பைத்தியமே பிடித்து விட்டிருக்கும்; விளேயாட்டுத் தனமல்ல அது! விசாரத் திலே மூழ்கிக் குழப்ப மடைந்து போகாமலிருக்க— அது தகுந்த முறை.

—பேரறிஞர் அண்ணு
('தம்பிக்கு' கடிதத்தில்)

சிரித்தால் நோயே அணு காது; மனம் விட்டு, வாய் விட்டுச் சிரிக்க வேண்டும்''.

—மருத்துவர்கள் உரை.

சிரிக்கத் தெரியாதவர்கள் விலங்குகளுக்கு இணையா வார்கள்.

—கலேவாணர் என்.எஸ்.கே.

# நிலக்கடலை சாகுபடியில் மகத்தான சாதனை!

**போராக்ஸ் உபயோகித்து கடம்பத்தூர் விவசாயி**
**திரு. சிவபாதம் ரூ. 750 கூடுதல் லாபத்தைப் பெற்றுள்ளார்.**

போராக்ஸ் நிலத்தில் போரான் (நுண்ணூட்டச் சத்து) குறைபாட்டைப் போக்கி நிலக்கடலை, பருத்தி, கரும்பு, காய்கறிகள், வேர்ப் பயிர்கள், புகையிலை, வாழை, தென்னை, நெல், தேயிலை மற்றும் காப்பி போன்ற அநேக பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் அமோகமான மகசூலுக்கும் வழி வகுக்கிறது.

## போரான் பற்றுக்குறையின் அறிகுறிகளை கவனிக்கவும்

பயிர்களுக்கு தழை-மணி-சாம்பல் சத்து உரங்கள் மட்டுமல்லாமல், மற்ற பல நுண்ணூட்டச் சத்துக்களும் தேவைப்படுகின்றன. அத்தகைய ஒரு முக்கியமான நுண்ணூட்டச் சத்தான போரான், விளைச்சலைப் பெருக்க உதவுகிறது. ஆனால் போரான் பற்றுக்குறை, பயிரின் ஆரோக்கியமான வளர்ச்சியை பல வழிகளில் பாதிக்கக் கூடும்... நிலக்கடலையில் பருப்பு வளர்ச்சி குன்றிப்போதல்; தென்னையில் வளர்ச்சியைப் பெருக்கும் பாகங்கள் இறந்து மரங்கள் காய்ந்து போதல்; பருத்தியில் காய்கள் உதிர்தல்; நெல் மற்றும் கரும்பில் வளர்ச்சி குன்றுதல்; தக்காளிச் செடிகள் வளர்ச்சி குன்றி காய்ப்பிடித்தல் குறைவாகவும்; பழங்கள் சொரசொரப்புடன், உருண்ட வடிவம் இல்லாமல் மேடுபள்ளமாக அமைதல்! முட்டைகோஸில் தண்டின் உள்பாகம் கெட்டு வளர்ச்சி குன்றி கோஸின் எடை குறைதல்; உருளைக்கிழங்கில் கிளைகள் தடித்து, கிழங்கின் உள்பகுதியில் வளைவு வளைவாக பழுப்பு நிறம் பல இடங்களில் ஏற்படுதல்;

திராட்சையில் பழங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு பெரிதாகவும் சிறியதாகவும் இருத்தல்; தேயிலையில் செடியின் இலை ஓரங்கள் சுருங்குதல்; காப்பிச் செடியின் இலைகள் அழுகுதல், உதிர்தல்; முதலியன போரான் பற்றுக்குறையின் விளைவுகள்.



போராக்ஸ் இடாதது  போராக்ஸ் இட்டது.

## போராக்ஸ் நல்ல பலன் தருகிறது—நிரூபணம் இதோ!

போராக்ஸ் உபயோகிப்பதன் மூலம் நிச்சயமான பலன் பெறலாம் என்பது, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனைகள் நிரூபித்துள்ளன; குறிப்பாக, சமீபத்தில் நாங்கள் நடத்திய ஒரு சோதனையில் (பாக்கம் கிராமம்) போராக்ஸ் உபயோகித்ததனால் நிலக்கடலை மகசூல் 67% அதிகரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

## போராக்ஸ் உபயோகிப்பது எப்படி?

நிலத்தில் இடும் முறைக்கு, எக்டருக்கு 3 முதல் 10 கிலோ போராக்ஸ் சிபாரிசு செய்யப் படுகிறது. இலைமேல் தெளித்தல் முறைக்கு 1.5 முதல் 3 கிலோ போராக்ஸ்-ஐ 180 முதல் 360 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும். நிலத்தில் இடும் முறைக்கு போராக்ஸ்-ஐ மணலுடன் கலந்து தூவலாம். அதை காம்ப்ளக்ஸ் வகை உரங்கள் அல்லது சூப்பர்பாஸ்பேட் போன்ற உரங்களுடன் கலந்தும் இடலாம்.

## போராக்ஸ் (நுண் சத்துக் கலவை) எங்கு கிடைக்கிறது?

போராக்ஸ் எல்லா உர விற்பனையாளர்களிடமும், மற்றும் பூச்சிக் கொல்லி, பூஞ்சாளக்கொல்லி போன்ற விவசாய தேவைப் பொருட்கள் விற்பனையாளர்களிடமும் கிடைக்கிறது. 4 கிலோ பேக்கிங்கில் கிடைக்கிறது.

**தி ஸதர்ன் போராக்ஸ் லிமிடெட்**

*34, பார்னபி ரோடு, கீழ்ப்பாக்கம்,*
*சென்னை—600 010  டெலிபோன்—666671—72*

ACIL. SB.1 TM-77

# நெகிழ்கின்றோம்

—திருமதி சௌந்தரா கைலாசம்



வீரத்தை—பிறந்தபொன் னாட்டுப் பற்றின்
வேகத்தைப் பாடுதற்கு வந்து விட்ட
நேரத்தை அறிந்தகலை வாணி, வெள்ளை
நிறங்கொண்ட கமலத்தின் நீங்கி, வீணை
பாரத்தை இறக்கிவிட்டுப் பார தத்தில்
பாரதியாய் அவதரித்துப் பாடி னாளோ?
காரத்தைக் கொண்டதமிழ்க் கவிதை யாலே
கண்கலங்க வைத்துப்போ ராடி னாளோ?

பஞ்சாக மலையெல்லாம் பறந்த போது
பரங்கியரின் திருப்பாதம் தனைப்பி டித்துக்
கெஞ்சாத கவிமகனை—வெள்ளைக் காரர்
கெடுபிடி-கண் டொருசிறிதும் என்றும் எங்கும்
அஞ்சாத சிங்கத்தை—கவிதை யாலே
அறப்போரின் உயிர்வளர்த்த அற்புத த்தை
நெஞ்சாரப் போற்றிமிகப் புகழு கின்றோம்
நினைக்கின்றோம்: உவக்கின்றோம்; நெகிழு கின்றோம்!





விழியிரண்டு ஞானத்தின் ஊற்று; நின்று
விம்முமிரு தோளிமய வெற்பு; வாயின்
வழிதிரண்டு வருவதெல்லாம் உணர்ந்து பார்த்தால்
வானறியாப் புத்தமுது: வந்து மூண்ட
பழிவெருண்டு தலைதெறிக்க ஓடு தற்குப்
பணிசெய்த பாரதியை எண்ணும் போதே
களிதிரண்டு வருகிறது நமது நெஞ்சில்
கரமிரண்டும் குவிகிறது வணங்கத் தானே!





கொட்டுமறைப் பாட்டெழுதி வருவான்; சின்னக்
குழந்தைக்கும் ஒன்றெழுதித் தருவான்; நல்ல
பட்டுமனக் காரனவன் பாட்டில் தேச
பக்தியினை யேதருவான் ஊற்றி; நின்று
கொட்டுமுர சென்றவனைப் போற்றி, சின்னக்
குயிற்பாட்டை நெஞ்சமதில் ஏற்றி, மின்னல்
வெட்டெனச்—சொல் வந்துவிழப் பாடும் அந்த
வித்தகனை, பாரதியை நினைவில் வைப்போம்!

# இதன் வயது 173

*(இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 7 முதல் 13-ந் தேதி முடிய மத்திய அரசின் கோரிக்கைக்கு இணங்க அரசின் எல்லா மாநிலங்களிலும் ஆவணக் காப்பக வாரம் கொண்டாடப்பட்டது. அதனையொட்டி சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் பற்றிய சுவையான தகவல்கள் இங்கே வெளியிடப்படுகின்றன.)*

நமக்கு நாள்தோறும் எத்தனையோ கடிதங்கள் வருகின்றன. அவை எல்லாவற்றையும் நாம் பாதுகாத்து வைப்பதில்லை. முக்கியமான கடிதங்களை மட்டுமே நாம் பத்திரப்படுத்தி வைக்கிறோம். இது வீட்டளவில் நாம் செய்கின்ற ஒரு செயலாகும்.

நாட்டளவில், பொதுமக்களுக்குப் பயன்படுகிற வகையில் முக்கியமான ஆவணங்கள், பத்திரங்கள், கோப்புகள் முதலானவற்றைச் சேகரித்து, பத்திரப்படுத்திப் பாதுகாத்து வருகின்றது ஒரு நிறுவனம். அதுதான் சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம்!

சென்னை எழும்பூரில், இரயில்வே நிலையத்திற்கு அருகில் அழகியதோற்றத்தோடு காட்சியளிப்பதுதான் இந்த ஆவணக் காப்பகம்.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் உலகிலேயே இத்துறையில் முன்னணியில் நிற்கும் ஒரு நிறுவனமாகும். 1909-ல் தான் இதற்கெனத் தனிக்கட்டடம் அமைக்கப்பெற்றது என்றாலும், 1805-ல் ஆளுநர், லார்ட் வில்லியம் பெண்டிங் காலமுதலே, சென்னையில் ஆவணக்காப்பகம் இயங்கி வருகிறது.

வெளி நாடுகளிலிருந்தும்கூட, ஆராய்ச்சியாளர்கள் பலர் நீண்ட நாட்கள் சென்னையில் தங்கி, இங்குள்ள ஆவணங்களிலிருந்து தங்களது ஆராய்ச்சிப் பொருள் பற்றியவற்றைப் படித்துப் பயனடைகிறார்கள். இங்குள்ள ஆராய்ச்சி மண்டபத்தில் இங்ஙனம் வருவோர் அமைதியாகத் தங்களது வேலையைத் தொடர விதிகளுக்குட்பட்டு எல்லா வசதிகளும் செய்து கொடுப்பதுடன், 30 ஆண்டுகளுக்கு முன்னுள்ளவற்றில் அவர்களுக்குத் தேவையான ஆவணங்களும் எடுத்து அளிக்கப்படுகின்றன. இங்குள்ள ஆவணங்களில் தேவையானவற்றை எளிதில் தேடியெடுக்க அட்டவணைகளும், குறிப்புப் புத்தகங்களும் ( Index ) உள்ளன.

''ஆவணக் காப்பகம்'' என்றால் என்ன?

காகிதம் மக்களது வாழ்வில் வெகுவாக உபயோகப்படுத்தப்பட்டு வரும் காலமிது. ஆவணக் காப்பகம் என்றால், பொதுப்பத்திரங்கள், கட்டுகள் முதலியவற்றை ( Public Records ) வைத்திருக்கும் இடம் எனப் பொருளாகும். அத்தகைய பத்திரங்கள், கட்டுகள் முதலியவற்றை ஆவணங்கள் எனக் குறிப்பிடுகிறோம்.

நாள்தோறும், இத்தகைய ஆவணங்கள் மலைமலையாக எங்கும் குவிகின்றன. அவையனைத்தையும் இங்கு கொண்டுவந்து குவித்திருப்பதாகப் பொருளில்லை. அரசு மற்றும் முக்கிய நிறுவனங்களில் இவ்வாறு சேர்ந்துவரும் ஆவணங்களில் முக்கியமானவை இங்குப் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. இவ்வாறு இங்குச் சேர்க்கப்பட்டுள்ள ஆவணங்களோ ஏராளம், ஏராளம்! அவற்றுள் பின்வரும் ஆவணங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்:

1. டச்சு ஆவணங்கள் (1657 முதல் 1845 வரை) 2. டேனிஷ் ஆவணங்கள் (1777-1845) 3. பர்சியன் ஆவணங்கள் (1670-

ஆவணக் காப்பக வார விழா.



1847) 4. சென்னை அரசின் ஆவணங்கள் (1858-1972) 5. மாவட்டங்களின் ஆவணங்கள் (1767-1857) 6. சர்ச்சுகளின் ஆவணங்கள் (1749-1907) 7. மாவட்ட நீதிமன்றக் கோப்புகள் (1804-1858) 8. உயர்நீதிமன்ற கோப்புகள் (1801-1862) 9. ஷெரிப் அலுவலகக் கோப்புகள் (1789-1920) 10. 'ரிசீவர் ஆப் கர்ஞுடிக் ஸ்டைபண்ட்ஸ்' கோப்புகள் (1845-1847) 11. ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் ஆவணங்கள் (1670-1857).



இவையன்றி வருவாய்த்துறை வாரியம், மற்றும் ஒருசில துறைத் தலைவர்களின் அலுவலக ஆவணங்களும், அரசினரின் இரகசியக் கோப்புகளும் இங்குப் பாதுகாப்பாகவும் முறைப்படிப் பிரித்தும் வைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசிற்கும், மற்றைய அலுவலகங்களுக்கும், இந்த ஆவணங்கள் பல்வேறு பொருட்களில் முடிவெடுப்பதற்காக அடிக்கடி தேவைப்படுகின்றன. அவ்வப்போது ஆவணங்களைத் தேவையான குறிப்புகளுடன், எடுத்து அனுப்பும் பணியும் ஆவணக் காப்பகத்துடையதாகும். இவ்வாறு பொதுவான ஆராய்ச்சியில் மட்டுமின்றி பொது நிர்வாகத்திலும் ஆவணக் காப்பகத்திற்குப் பெரும் பங்கு உண்டு.

ஆவணங்களை நீண்டகாலம் வைத்திருப்பது மிகவும் கடினமான பணியாகும். ஏனென்றால், சாதாரணமாக 50 ஆண்டுகளில் பெரும்பாலும் காகிதம் உளுத்து வீணாகிவிடும் தன்மை படைத்தது. விஞ்ஞான ரீதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து வந்தாலொழிய, காகிதக் கட்டுகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இருக்காது.

இதற்கான அமிலததன்மை போக்கியும், 'ஷிபான்' என்று சொல்லப்படும் துணியை இரு புறங்களிலும் ஒட்டியும் முக்கியமான கட்டுகள் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. இப்படிச் செய்தால், எழுதியுள்ளதை அல்லது அச்சடிக்கப்பட்டுள்ளதை எளிதாகப் படிக்கவும் முடியும். ஆனால், இங்குள்ள ஆவணங்களின் அளவுடன் ஒத்துப்பார்த்தால், உடலுழைப்பால் மட்டுமே அவையனைத்தையும் முறைப்படி பூச்சிகளை அழித்துப் பாதுகாப்பது இயலாத செயலாகும்.

எனவேதான், பூச்சிகளை அழிப்பதற்கென தனி எந்திரம் ஒன்று அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது. இதன் கொள்ளளவு 500 கன அடிகளாகும். தவிர மேலெர்ட்டல் வேலைக் ( Lamination ) கெனவும் ஒரு எந்திரம் தருவிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்காகக் கட்டப்பட்டுள்ள தனிக் கட்டடத்தை வரும் ஆவணக்காப்பக வாரத்தில் திறந்து வைக்கவும், இந்த எந்திரங்களைச் செயல்பட வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



தமிழ்நாடு ஆவணக்காப்பகம் பல உபயோகமுள்ள ஆவணத் தொகுப்புகளும், குறிப்புரைகளும் வெளியிட்டிருக்கிறது. நடப்பு நூற்றாண்டில் நாடு சுதந்திரம் பெற்றது வரையில் உள்ள ஆவணங்களிலிருந்து, முக்கியமானவற்றைத் தொகுத்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆவணங்களைப் பாதுகாப்பது அரசினரின் பொறுப்பு மட்டுமல்ல, பொதுமக்களும் இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆலயங்கள், சர்ச்சுகள், மசூதிகள், கல்வி நிறுவனங்கள், பொதுநல மன்றங்கள் முதலியவற்றிற்கும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உண்டு. நமக்கும் நம் சந்ததியினருக்கும் தொடர்பு தருவதே ஆவணங்கள்தான்.

# களிப்புக் கடலில் கரிக்கலவாக்கம்

**அது ஒரு குக்கிராமம்!**

அன்று அந்தக் கிராமமே விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

ஆடவர், பெண்டிர், சிறுவர்கள் குதூகலத்துடன் குழுமியிருக்கின்றனர்.

சென்னையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில், திருவள்ளூருக்கு அருகாமையில் உள்ளது கரிக்கலவாக்கம் என்னும் கிராமம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில், கிராம ஏற்புத் திட்டத்தின்கீழ் பாரத ஸ்டேட் வங்கி இக்கிராமத்தை ஏற்றுள்ளது.

ஆகஸ்டுத் திங்கள் 8ஆம் நாள் நடந்த இக்கிராம ஏற்பு விழாவில் அங்கு வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்குப் பலவகைத் தொழில் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

வளர்ச்சித் திட்டங்களுக்குப் பொருளாதார உதவி செய்வதில் பாரத ஸ்டேட் வங்கியானது, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தனது கிராம ஏற்பின் மூலம் விவசாயிகளுக்கு நேரடியாகப் பண உதவி செய்து வருகிறது. வேளாண்மை வளர்ச்சிக்காக இந்தியா முழுவதிலும் ரூ. 436.64 கோடி வரை டிசம்பர் 1977-க்குள் பணஉதவி செய்துள்ளது.

தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், பாண்டிச்சேரி மாநிலங்களை உள்ளடக்கிய சென்னை வட்டாரத்தில் மட்டும் வேளாண்மை வளர்ச்சிக்கென சுமார் 85.50 கோடி ரூபாய்களை 4.19 இலட்சம் கணக்குகளில் (ஜூன் இறுதிவரை) இது வழங்கியுள்ளது.

அரசின் குறிக்கோளுக்கிணங்க, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் மறுமலர்ச்சி ஏற்படும் வகையில் இவ்வங்கியானது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமென்ற பெயரில் புதியதொரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது; வங்கியின் ஒவ்வொரு வேளாண்மை வளர்ச்சிக் கிளைகளின் மூலமாக நாடு முழுவதிலும் ஒவ்வொரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அரசு, மற்றும் இதர சமூக நிறுவனங்களுடன் இணைந்து அதன் முன்னேற்றத்திற்காக உழைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சென்னை வட்டாரத்தில் இவ்வாறு 25 கிராமங்கள் ஏற்கப்பட்டு, கிராமவாசிகளின் பொருளாதாரத் தேவைகளோடு, சமூக, கலாச்சாரத் தேவைகளையும் உணர்ந்து இது செயல்படுகின்றது. இத்தகைய திட்டங்கள் கிராமியத் தன்மையைப் பாதிக்காமல், கிராமத்தின் பொருளாதாரம் மற்றும் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

இத்திட்டத்தின் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் வேளாண்மை வளர்ச்சிக் கிளையானது கரிக்கலவாக்கம் கிராமத்தில், டிசம்பர் '77 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட 3,500



விவசாயிகளுக்கு ரூ. 1 கோடிக்கும் மேலாகக் கடனுதவி செய்துள்ளது.

பயிர் வளர்ப்பிற்கு மட்டுமின்றி பால் மாடுகள் வாங்குதல், வேளாண்மைக் கருவிகள், எருதுகள் வாங்குதல், வாத்துகள் பாதுகாப்பு முதலானவற்றிற்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. கிராமக் கைவினைஞர்களுக்கும், வேலையற்ற இளைஞர்களுக்கும் குடிசைத் தொழில்களைத் தொடங்கவும், சிறு வணிகங்கள் செய்யவும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்தில் 259 வீடுகள் உள்ளன. இதில் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் அரிசனங்களும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளவர்களுமே. விவசாயத்தையே வாழ்க்கைப் பிழைப்பாக ஏற்றுக் கொண்டவர்கள், வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு குடும்பத்தையும் விசாரித்ததில் கிடைத்த தகவல்களின்படி, ஒவ்வொருவரிடமும் உள்ள திறமைகளைப் பயன்படுத்தும் வகையில் இவ் வங்கி ஒரு திட்டம் தீட்டியது. அதன்படி சுமார் ரூ. 14 இலட்சம் வரை 5 ஆண்டுகளில் வழங்கி கிராமத்தை மேம்பாடடையச் செய்யத் திட்டமிட்டுள்ளது. இதுவரை 200 குடும்பங்களுக்கு ரூ. 1 இலட்சம் வரை கடந்த 7 மாதங்களில் வழங்கியுள்ளது.

கிராம மக்களின் ஏழ்மையை நீக்கிப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதோடு, திருவள்ளூர் அரிமா சங்கத்தின் துணையோடு கிராமத்தின் சமூக வளர்ச்சியிலும் பங்கேற்க இது திட்டமிட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆதாரப்பள்ளி மாணவ மணிகளுக்குச் சீருடைகள், புத்தகங்கள், எழுதுபொருட்கள் முதலானவற்றை வாங்குவதற்காக அவர்களுடைய பெற்றோர்களுக்குக் கடனுதவி செய்துள்ளது.

ஒரு ஏழைக் குயவரின் இல்லத்தைச் சார்ந்த வேலை கிடைக்காத இளைஞர் ஒருவருக்கு அருகாமையிலுள்ள அரசு களிமண் பொருட்கள் தயாரிப்பு (Govt., Pottery & Ceramic Training Centre) நிறுவனத்தில் தொழிற்பயிற்சியில் வழி சேர வகை செய்துள்ளது.

கோழிப்பண்ணை நடத்தும் ஒருவர், வங்கியின் பேரார்வத்தைக் கண்டு மகிழ்ந்து, தானும் ஒரு சுவர்க்கடிகாரத்தைப் பள்ளியொன்றிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

வங்கியானது தனது ஊழியர்கள் அளித்த நன்கொடை மூலம் ஆதாரப்பள்ளி மாணவர்களுக்கென்று விளையாட்டுப் போட்டிகளை நடத்திப் பரிசுகளும் வழங்கிச் சிறப்பித்துள்ளது. அதோடு படிப்பகம் ஒன்றைத் துவக்க ரூ. 501 நன்கொடையும் வழங்கியுள்ளது. கிராமவாசிகளுக்கு, ஊழியர்கள் உபயோகித்த துணிமணிகள், மருந்துகள் முதலானவற்றை அன்பளிப்பாக வழங்கியதோடு உள்ளூர் மருத்துவர்களின் உதவியோடு மருத்துவ சேவையும் செய்து வருகிறது.

கிராமத்திற்குக் குடிநீர் வசதிகள் செய்து கொடுப்பதற்காக அரசு அதிகாரிகளை இது அணுகுகிறது. பொருளாதாரத் திட்டங்களுக்கான கடனுதவியில் எல்லாப் பொறுப்பினையும் வங்கி ஏற்றுக் கொள்வதோடு சமூக, பண்பாட்டுத் தேவைகளைப் பொறுத்தமட்டில் கிராமவாசிகளின் எல்லா முயற்சிகளிலும் துணை நின்று வருவதை நாம் பார்க்கிறோம்.

இந்தக் கிராமத்தைப் பார்க்கிறோம்! சுற்றிலும் பனைமரங்களே காட்சி தருகின்றன. சற்றுத் தொலைவில் கோரைகளும் விளைகின்றன. இக்கிராம மக்கள் பனைப் பொருள்கள் செய்தல், பாய் முடைதல் போன்ற தொழில்களில் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர்.

பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் திரு பி.சி.டி. நம்பியார் அவர்கள் கிராம மக்களுக்குக் கடன்கள் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்வது தான் எங்கள் வங்கியின் குறிக்கோள். குடிநீர் வசதி, சுகாதாரம், வீட்டுவசதி முதலான தேவைகளை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்.

''கரிக்கலவாக்கம் கிராமப் பகுதியில் பனைமரங்கள் அதிக அளவில் இருப்பதால் பனைத் தொழிலில் அந்தக் கிராமங்களுக்குப் பயிற்சி தர பாரத ஸ்டேட் வங்கியின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து கணிசமான தொகை வழங்கப்படும். தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் தும்புப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு உதவும்.''

விழாவினையொட்டிக் கவின் மிகு கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பல்வேறு கடனுதவிகள் பெற்ற அந்த ஏழை எளிய மக்களின் முகத்தில் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஒளிவிட்டன. கரிக்கலவாக்கத்திற்கு நல்ல எதிர்காலமிருக்கிறது என்பதையும் அந்நிகழ்ச்சி சொல்லாமல் சொல்லியது!

## விபத்திலும் நகைச்சுவை...!

எந்தத் துயரமான கட்டத்திலும் கலைவாணரால் சிரித்துக் கொள்ள முடியும். கடைசி வரையில் அவரிடம் மாபெரும் துணையாக இருந்த சக்தி இது ஒன்றுதான்.

ஒரு முறை சென்னைக்கு வந்து கொண்டிருந்த கம்பெனி வேன் சிறு விபத்துக்குள்ளாகியது. நல்ல வேளையாக உயிர்ச் சேதம் இல்லை. சேதி கேட்டுக் கலைவாணர் காரில் ஓடிவந்தார். ''நல்லவேளை உயிர்ச் சேதம் இல்லை'' என்று சொல்லிக் கொண்டே காரிலிருந்து கீழே சிதறிக் கிடந்த பழங்களை எடுத்து, சூழ இருந்தவர்களுக்கெல்லாம் ஒவ்வொன்றாகக் கொடுத்து விட்டுத் தானும் ஒன்றை எடுத்துத் தின்றுகொண்டிருந்தார். அப்பொழுது அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த பஸ் இவரைக் கண்டதும் நின்று விட்டது. பிரயாணிகள் எல்லோரும் கீழே இறங்கி வந்து, 'ஆஹா......என். எஸ். கே.' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே அவர் பக்கமாக வந்தார்கள். ஒரு பிரயாணி 'என்ன சேதி! வேன் இப்படிக் கிடக்கிறதே' என்று கேட்டார். அதற்கு என். எஸ். கே. ''ஒண்ணுமில்லே, பழம் சாப்பிடணும்னு நினைச்சோம். உடனே காரை இப்படிச் சாய்த்து வச்சிட்டு பழம் சாப்பிட்டுக் கொண்டிருக்கோம். விஷயம் இவ்வளவுதான்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். ஒரு விபத்துச் செய்திகூட, கலைவாணருக்கு நகைச்சுவைதான்.!

# காற்று நிகர் மென்மை வண்ணத்துப் பூச்சியின் எழில் வண்ணம்



**கோ-ஆப்டெக்ஸ்**

அச்சிட்ட நூல் சேலைகள்

உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!

கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

# வளர்ச்சிப் பாதையில் தமிழகம்

—பி.சி. கணேசன்

③

இந்த அரசு பொறுப்பேற்ற நாட்களிலிருந்து இயற்கை, மக்களுக்கும், அரசுக்கும் பலவிதங்களிலும் சோதனைகளை ஏற்படுத்தியதை யாரும் இதற்குள் மறந்து இருக்க முடியாது. பருவ நிலையும், இதர இயற்கை சூழ்நிலைகளும் சரியாக இருக்கும் போதே கூட, ஏராளமான பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ள ஓர் அரசு, பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே இயற்கையின் கோரக் கொடுமைகளைச் சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வட கிழக்குப் பருவ மழை எதிர் பார்த்ததைவிட தீவிரம் அடைந்து தமிழகம் எங்கும் கனத்த மழையைக் கொடுத்தது. மழையோடு கடுமையாக புயலும் வீசிற்று. ஏறத்தாழ 10 நாட்கள் சென்னை மாநகரில் தாழ்வான பகுதிகள் வெள்ளக் காட்டில் மூழ்கிப் போயின. பருவ மழை காலத்திற்குச் சற்று முந்தியே தொடங்கிப்பெய்ததோடு அந்தக் குறிப்பிட்ட நாட்களில் வழக்கமாகப் பெய்யும் மழையை விட 72 சத விதம் கூடுதலாக பெய்ததாகவும் வான் ஆராய்ச்சி நிலையத்தார் புள்ளி விவரம்கொடுத்து இருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து நவம்பர் 12-ஆம் தேதி மற்றொரு இயற்கையின் கோரத் தாண்டவம் தமிழகத்தில் நடைபெற்றது. இதுவரை வரலாறு காணாத அளவுக்கு புயலின் கொடுமையும், வெள்ளத்தின் வேகமும் அமைந்தது. பல மாவட்டங்களில் தண்ணீர் காடாகி போக்குவரத்தை முழுமையாக துண்டித்தது.

இந்தக் கட்டுரையில், அதாவது 'வளர்ச்சிப் பாதையில் தமிழகம்' என்கிற கட்டுரையில், இந்த வெள்ளச் சேதம் பற்றி இவ்வளவு விரிவாக நாம் குறிப்பிடுவதற்கு காரணம் இருக்கிறது. ஒரு சமுகத்தில் ஆக்க ரீதியான காரியங்களும், மக்கள் வளர்ச்சிக்கான திட்டங்களும் விரைந்து நடைபெற வேண்டுமானால், போக்குவரத்து வசதிகள் செம்மையான முறையில் அமைதல் வேண்டும். ஏற்கனவே தமிழக அரசு கிராமப் புறங்களை நகர்ப் புறங்களோடு இணைத்து, வணிகத் தொடர்புகளை இரு பகுதிகளுக்கு இடையேயும் ஏற்படுத்தி, கிராமத்தில் உற்பத்தியாகும் நுகர் பொருள்களை நகரங்களில் விற்பனை செய்து கிராமப் புற பொருளாதாரத்தை செழிக்கச் செய்வதற்கு திட்டங்கள் தீட்டிக் கொண்டு இருந்த வேளையில், வெள்ளமும், புயலும் வந்து ஏற்கனவே இருக்கின்ற தொடர்புகளை துண்டித்து விடுமானால் அது எத்தகைய சிக்கலை உண்டாக்கும் என்பதை நிர்வாகத்துறை பற்றி சராசரி அறிவுடையோரும் புரிந்து கொள்ள முடியும். அதிலும் புதிய அரசு பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே இத்தனை சோதனைகளைச் சந்தித்து மீள்வது என்பதைச் சாதாரணமெனச் சொல்லிவிட முடியாது.

இயற்கையின் சீற்றத்தால் போக்குவரத்துப் பாதைகள் மட்டும் துண்டிக்கப்படவில்லை. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் வெள்ளக்காடு ஏற்பட்டதன் விளைவாக, வயல்கள் நீரில் மூழ்கி போய் பெரும் சேதத்திற்கு உள்ளாயின. இதனால் விதைத்து, நாற்று நட்டு, களை பிடுங்கி, அறுவடைக்கு காத்து இருந்த உழவர் பெருமக்கள், தங்களுடைய எதிர்கால கனவுகள் எல்லாம் மண் மேடிட்டுப் போனதால், சொல்லொணா துயரத்துக்கு ஆளாயினர். வெள்ளத்தில் சிக்கி தவித்த மக்களை மீட்பதும், சேதத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதும், மண் மேடிட்டப்போன பயிர்களை மறுபடியும் பயிர் செய்யும் பக்குவத்தை அடையச் செய்வதும், அரசு துரித வேகத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆயின.

இந்தச் சாதனையை தமிழக முதல்வரும், தமிழக அரசும் போர்க்கால முனைப்போடு சமாளித்த விதம், தமிழக வரலாற்றில் சிறப்புமிக்க ஓர் ஏடாக என்றென்றும் திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.

அமைதிக் காலத்தில் நிர்வாகப் பணிகளை நிறைவேற்றுவது என்பது ஒன்று; எதிர் பாராத இடுக்கண்கள் பெரிய அளவில் வந்துற்றபோது, நிதானம் குலையாமல் மக்களின் தேவையை உணர்ந்து நிவாரணப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவது என்பது மற்றொன்று.

இந்தச் சோதனையை தமிழக அரசு வெற்றிகரமாக சமாளித்தது.

நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டுமானால், மின்சக்தி இடையூறு கிடைக்க வேண்டும். புயல் வீசியபோது மின் கம்பங்கள் வேரோடு பெயர்த்து எறியப்பட்டு மின் இணைப்புக்கள் பல இடங்களில் துண்டிக்கப்பட்டு போயின. வீடுகள் இருண்டு போனது மட்டும் அல்லாமல், தொழிற் கூடங்களும் செயலற்று போயின. குறிப்பாக, கிழக்கு தஞ்சை பகுதியில் மின்சார சப்ளை பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது. அதே சமயம் மின்சாரத் துறை விரைந்து செயல்பட்டு புயல் வீசிய 72 மணி நேரத்திற்குள் மீண்டும் மின் வசதி துண்டித்துப்போன இடங்களுக்கு எல்லாம் மின்சாரம் கிடைக்கும் வகையில் பணி புரிந்ததைப் பாராட்டாதவர்கள் இல்லை.

வளர்ச்சிப் பாதையில் இது என்ன பெரிய முன்னேற்றமா என்று சில அவசரக்காரர்கள் கேட்கக் கூடும். இருக்கின்றவைகளுக்கு இயற்கையின் சீற்றத்தால் சேதம் விளைகின்றபோது, அதை விரைந்து முன்பு இருந்த நிலைக்கு கொண்டு வருவதும் ஒரு சாதனையே. இதை இளம் பருவத்தில் இருந்த அரசு ஏற்றமுடன் செய்து முடித்தது என்பது அதனுடைய செய் திறன் நேர்த்திக்கு ஒரு சான்று.

(தொடரும்).



# 'அண்ணாவின் இதயம்'
## கே. ஆர். ஆர்.

"கலைஞர்கள், பலருக்கு, நிழல் தரும் மரமாக இருந்தவர் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள்."

"அண்ணாவின் இதயமே கே. ஆர். ஆர்.

இவ்வாறு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் குறிப்பிட்டார்.

சென்னை மயிலை, ஆர். ஆர். சபாவில் ஆகஸ்டு 5-ஆம் நாள் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியின் 7-வது ஆண்டு நினைவுநாள் விழா நடந்தது. அவ்விழாவில் கலந்துகொண்டு நடிப்பிசைப் புலவருக்கு நினைவு அஞ்சலி செலுத்துகையில் மேறகண்டவாறு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"முப்பது ஆண்டுக் காலமாக என்னுடன் அன்புடன் பாசத்தோடு பழகி வந்தவர் கே. ஆர். ஆர்.'' என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்.

''திராவிடர் இயக்கத்துக்காகப் பல இலட்சங்களை இழந்தவர் கே.ஆர்.ஆர்." என்று விழாவிற்குத் தலைமை வகித்த இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

"அரசியலில் உதாரணபுருஷராக அவர் விளங்கினார். கடமை உணர்ச்சியோடு காரியங்களைச் செய்தார்'' விரைவில் சென்னையில் நடிப்பிசைப் புலவருக்குச் சிலை எழுப்பப்படும்" என்று மாநில சிறுசேமிப்புத் திட்டத் துணைத்தலைவர் திரு எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்கள் கூறினார்.



# கிந்தன் பெற்ற புகழ்...

நந்தன் கதாகாலட்சேபத்தில் நாட்டம் இல்லாத பலரும் அதில் உள்ள மெட்டுக்களுக்காகவும், கதை அமைப்புக்காகவும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள். இதைப் புரிந்து கொண்ட கலைவாணர் அதே கதை அமைப்பிலும், மெட்டுகளிலும் கிந்தனார் கதையை அமைத்துக் காலட்சேபம் செய்தார். முந்தியது அடிபட்டுப் போய்விட்டது.

திருநெல்வேலியில் ஒரு நிகழ்ச்சி. யாரோ ஒரு பாகவதர் நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்திலே நந்தனார் கதை நடத்தினார். அதே நேரத்தில் அதே ஊர் தியேட்டர் ஒன்றில், கிந்தனார் கதாகாலட்சேபத்தைக் கலைவாணர் நடத்தினார். கோவிலில் என்ன நிகழ்ச்சி நடந்தாலுமே குழுமி நெருக்கும் அநேக பக்த கோடிகளே, கலைவாணரின் நிகழ்ச்சியைக் காண வரிசையில் நின்று அனுமதிச் சீட்டுப்பெற்று உள்ளே வந்தார்கள். ரசித்தார்கள்; கைதட்டினார்கள். 'கிந்தனார் கதையில் கிருஷ்ணன் ஒன்றும் மோசமாகச் சொல்லிவிடவில்லையே ; கல்வியின் அவசியத்தைப் பற்றித்தானே சொல்கிறார்' என்றும் புகழ்ந்து கொண்டார்கள்.

அடுத்த சில மாதங்களில் பக்கத்து ஊரில் உள்ள ஒரு சபாவில் கிந்தனார் நிகழ்ச்சியைக் கலைவாணர் நடத்திக் கொண்டிருந்தார். முதல் வரிசையிலே முதல் ஆளாக, அன்று நந்தன் சரித்திரம் நடத்திய பாகவதர் வந்து உட்கார்ந்திருந்தார். கிந்தனைப் பிரமாதமாக ரசித்தார். காலட்சேபம் முடிந்ததும் மேடைக்குள்ளே வந்து கலைவாணரை அணைத்துக்கொண்டு பாராட்டி, "உங்களுக்குச் சரஸ்வதியோட அனுக்கிரகம் பூரணமாக இருக்கிறது; நீங்கள் தீர்க்காயுசா இருக்க வேண்டும்" என்றும் ஆசி கூறிப் போனார். மனம் நிறைந்த மகிழ்வுடன் கலைவாணர் நன்றி கூறினார்.

—[திரு சுப்பு ஆறுமுகம் எழுதி, ஸ்ரீமகள் கம்பெனி வெளியிட்டுள்ள 'கலைவாணர் என். எஸ். கே.' என்னும் நூலிலிருந்து...]

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

கனி வளம் கொஞ்சும் சேலம்
கலை நலம் கொஞ்சும் கோலம்
ஆடித் திருவிழாக் காலம் !

# அரசுப் பொருட்காட்சி '78
## சேலம்

( 1978 ஆகஸ்ட் 6 முதல் செப்டம்பர் 19 வரை )

சேலம் நகரில்
போஸ் மைதானத்தில்

இலட்சக் கணக்கான
மக்களைக்
கவர்ந்திடும் வகையில்
அமைந்திடும்
பொருட்காட்சி

முதன் முறையாக அரசுப் பொருட்காட்சி !
மத்திய - மாநில அரசுத்துறைகள்
பொதுத்துறை நிறுவனங்கள்—
தனியார்துறை நிறுவனங்கள் பலவும்
பங்கேற்கின்றன.

தனிப்பட்ட கேளிக்கைப் பகுதிகளில்
நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் !
திரைப்படக் காட்சிகள் !

எல்லாரும் மகிழ — நல்லதொரு வாய்ப்பு





1978 செப்டம்பர் 17 முதல்

1979 செப்டம்பர் 17 முடிய



# தந்தை பெரியார்

## நூற்றாண்டு விழா!!

தன்மான இயக்கத் தந்தை

திராவிடத்தின் விடிவெள்ளி

பகுத்தறிவுப் பகலவன்

சுயமரியாதைச் சுடரொளி

தந்தை பெரியார் அவர்களின்

# நூற்றாண்டு விழாச்

சிறப்பிதழாக

16·9·78 தமிழரசு இதழ் மலர்கிறது!!

அதிக பக்கங்கள்!

எண்ணற்ற படங்கள்!

அரிய செய்திகள்!

பாதுகாக்கவேண்டிய

கருத்துக் கருவூலம் இந்தச் சிறப்பிதழ்